France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Swisse: 2.50SFrs.

மாவீரர்களுக்கு எமது வீர வணக்கம்



# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 2 28 நவம்பர் - 27 டிசம்பர் 1996 முழக்கம் : 98

மாவீரர்களுக்கு எமது வீர வணக்கம்



# தரணி எங்கும் மாவீரர் எழுச்சிவிழாக்கள் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டனர்

தமிழர் வாழும் நாடுகள் பலவற்றிலும் இம்முறை மாவீரர்நாள் விழாக்கள் வெகுசிறப்பாக எழுச்சிபூர்வமாக கொண்டாடப்பட்டுள்ளன. அனைத்து இடங்களிலும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு மாவீரர்களை அஞ்சலித்தார்கள். ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இத்தாலி, பிரித்தானியா ஆகிய நாடுகளில் மாவீரர்நாள் எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்று முடிந்துள்ளன.

ஜேர்மனியில் எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட மக்களும், சுவிசில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்களும், பிரான்சில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட மக்களும், பிரித்தானியாவில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களும் இவ் எழுச்சி விழாக்களில் கலந்து கொண்டுள்ளார்கள்.

பிரான்ஸ் மாவீரர்நாள் எழுச்சிவிழாவில், தமிழகத்நிலி

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## பாரிஸ் மாவீரர்நாளில் தமிழீழ 'மருத்துவ நிதி'க்கு தாலியைத் தந்த அன்னை

கடந்த 24.11.96 ஞாயிற்றுக் கிழமை அன்று பாரிசில நடைபெற்ற மாவீரர்நாள் எழுச்சி விழாவில் ஒரு தமிழ்த்தாய் தனது தாலிக்கொடியை கழற்றி தமிழீழ மருத்துவ நிதிக்குக் கொடுத்த சம்பவம் நடைபெற்றுள்ளது. மாவீரர் விழா நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் அங்கு திரண்டிருந்த மக்களிடம் தமிழீழ மருத்துவ நிதிக்கு உங்கள் பங்களிப்பைச் செய்யுமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் வேண்டுகோள் விடுத்தனர்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)



பாரிஸ் மாவீரர்நாள் நிகழ்வில் ஒரு தாய் மருத்துவ நிதிக்காக வழங்கிய தாலி

## பாரிசில் சந்திரிகா

சிறீலங்காவின் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தினை பிரான்சிற்கு மேற்கொண்டுள்ளார். கடந்த ஞாயிறு பாரிஸ் வந்துள்ள அவர் பிரெஞ்சு அரசின் முக்கிய தலைவர்களையும், தொழிலதிபர்களையும் சந்தித்துப் பேச்சுக்களை மேற்கொள்ள இருக்கிறார்.

பிரெஞ்சு வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் இது பற்றிக் கூறியபோது சிறீலங்கா ஜனாதிபதியின் விஜயத்தின் போது இருதரப்பினரதும் உறவுகளின் அபிவிருத்தி பற்றிப் பேசப்படும் என்றார்.

கடந்த திங்கட்கிழமை பிரான்ஸ் ஜனாதிபதி திரு ஜக் சிராக்குடன் மதிய உணவில் கலந்து கொண்ட சந்திரிகா, பிரான்சின் பாராளுமன்ற சபா

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# மக்கள் கொதித்துப் போய் உள்ளனர்

## பழ. நெடுமாறன்

சூரியக்கதிர் சத்ஜய இராணுவ நடவடிக்கைக்குப் பின்னாலும் பாரிஸ் படுகொலைகளுக்குப் பின்னாலும் தமிழ் மக்களுடைய மனவுறுதி குன்றியிருக்கும், குன்றும் என்று எதிர் பார்த்துத்தான் எதிரிகள் இந்தக் காரியங்களைச் செய்தார்கள். ஆனால் ஜேர்மனியில் நடைபெற்ற கூட்டத்திலும் முன்னிலும் அதிகமாக வீறு கொண்டு எழுந்திருப்பதைப் பார்த்தேன் இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத்தலைவர் திரு. பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.



கடந்த 25.11.96 திங்கட்கிழமை 11 மணியளவில் எமது ஈழமுரசு அலுவலகத்துக்கு வந்து எதிரிகளால் படுகொலை செய்யப்பட்ட எமது ஆசிரியர் கஜனுக்கும், வெப். கேனல் நாதனுக்கும் அஞ்சலி செலுத்திய அவர்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## பலாலி முகாம் முன்பாக இராணுவ வாகனம் சிதறியது

பலாலி இராணுவ முகாம் முன்பாக வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி படையினரின் துருப்புக் காவும் வாகனம் ஒன்று சிதறியுள்ளது. இவ் வாகனம் சிறிலங்கா இராணுவத்தின் 52 வது படைப்பிரிவைச் சேர்ந்ததெனக் கூறப்படுகின்றது.

இத்தாக்குதலின் போது இரண்டு படையினர் கொல்லப்பட்டு 6 படையினர் காயமடைந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. தங்கள் முகாம் வாசலிலேயே புலிகள் கண்ணிவெடியை புதைத்து வைத்திருந்தமை படையினரை கலக்கமடையச் செய்துள்ளது.

## கொடிகாமத்தில் கண்ணிவெடி சராசென் இராணுவ வண்டி தகர்ப்பு

கொடிகாமத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித்தாக்குதலில் ராணுவ துருப்புக்காவி வாகனமான "சராசென்" நீப்பிடித்து முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இதில் பிரயாணம் செய்த இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டு மேலும் ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

கடந்த 20ம் திகதி கண்டி வீதியால் சென்று கொண்டி

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

ஏசியன் என்ரபிறைசஸ்

பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, நாலுமுழ வேட்டி, கிப்ஸ் சாரம், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், திருமணத்திற்கான அனைத்துப் பொருட்களும் கூறைச்சேலை, பாவாடை, சட்டை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எல்லா நிறங்களிலுமான சட்டைத்துணிகள்

* தங்க நகைகளுக்கு உத்தரவாதமும் பற்றுச்சீட்டும் வழங்கப்படும் *

AE

ASIAN ENTERPRISE

Tel: 01/291 46 52 Fax: 01/291 46 37

Hohl.Str 78, 8004 Zurich.

# நாலும் நடக்கும் நாட்டிலே

## நண்டு

சிறீலங்காவின் விமானப் படையினர் தமது 'சாகசங்களை' வேடிக்கை நிகழ்வாகவும் செய்து காட்டத் தொடங்கி விட்டார்களாம். அண்மையில் சிறீலங்காவின் முக்கிய பிரமுகர்களுக்காக வான் படையினரின் இவ் 'வான விளையாட்டு' நிகழ்த்திக் காட்டப்பட்டதாம். இதில் 'சிறப்பம்சம்' என்னவெனில், தமிழ் மக்கள் மீது குண்டு மழை போட்டு கொன்றொழிக்கும் பல்வேறு வகையான விமானங்கள் இவ் வேடிக்கை நிகழ்வில் பங்குபற்றியமையே.

MI 24 ரக தாக்குதல் ஹெலிகொப்டர்கள், இஸ்ரேலிய தயாரிப்பான கிபீர் ரக ஜெட் விமானங்கள், புக்காரா மற்றும் சியாமாசெட்டி விமானங்கள், 'எதிரிகள்' நிலையினைத் தாக்குவது போல் நடாத்திய 'வான் விளையாட்டு' பார்த்தவர்களைப் புல்லரிக்க வைத்ததாம். 'எதிரி'யின்' விமான எதிர்ப்பு பீரங்கிகளின் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டி வரும் என்ற எவ்வித அச்சமுமின்றி இந்த விளையாட்டு நடந்ததாம்.

இந்த வான விளையாட்டின்போது நிகழ்ந்த சுவையான விடயம் ஒன்றினை கொழும்புப் பத்திரிகை வெளியிட்டுள்ளது. 'முக்கிய பிரமுகர்கள்' விமானப்படையின் 'விளையாட்டைப்' பார்க்கக் காத்திருந்தபோது விமானங்கள் தாமதமாகத்தான் வந்து சேர்ந்தனவாம். அப்போது பார்வையாளர்களாக வந்திருந்த இராணுவ அதிகாரி ஒருவர் கூறினாராம் "யுத்த களத்திலும் இதே பிரச்சினை தான் விமானப் படையின் உதவிக்கு அழைப்புக் கொடுத்து விட்டுக் காத்திருந்தால் தாமதமாகத்தான் வருவார்கள். இங்கேயும் இப்படியா?"

▲ ▲ ▲

சிறீலங்கா இராணுவத்தினருக்கு ஆட் சேர்ப்பதற்கு எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகள் தோல்வியினைத் தழுவியதைத் தொடர்ந்து இராணுவத்திற்கு கட்டாய ஆட் சேர்ப்பு நிகழ்த்துவது குறித்து அரசு சிந்தித்து வருகிறது அல்லவா! இதற்காக கட்டாய இராணுவச் சேவை அமுலுக்கு கொண்டுவரப்பட்ட நாடுகளில், அது எவ்வாறு அமுலபடுத்தப்பட்டது என்பது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகின்றதாம். முக்கியமாக, சமூகத்தின் உயர்மட்டப் புள்ளிகளின் பிள்ளைகளைத் தவிர்த்து இக் கட்டாய ஆட் சேர்ப்பினை நடத்த முடியுமா என்பதனை அறிந்து கொள்வதிலே அரசு மிகுந்த நாட்டம் காட்டுகிறதாம்.

சிறீலங்காவின் சிங்கள உயர் குழாத்தினர் கட்டாய ஆட் சேர்ப்பில் தமது பிள்ளைகள் உட்படுத்தப்படுவதனை என்றுமே அனுமதிக்கப் போவதில்லை என்பதாலேயே அரசு இது குறித்துச் சிந்திக்கிறதாம். மேலும் உயர் மத்தியதர, மத்தியதர வகுப்பினர் மத்தியிலும் கட்டாய ஆட் சேர்ப்புக் குறித்து கடும் எதிர்ப்பு கிளம்பும் எனவும் அரசு அஞ்சுகிறதாம்.

இதற்கிடையில், கொழும்பில் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்று, களியாட்ட நிகழ்வொன்றில் இளம் சிங்கள ஆண் பெண்கள் மகிழ்ச்சியாக ஆடிக்கொண்டிருக்கும் படத்தினையும் அதற்கு அருகில் யுத்த முனையில் நிற்கும் இராணுவத்தினன் ஒருவனது படத்தினையும் போட்டு விட்டு, "இது யாருடைய யுத்தம்" என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. யுத்தத்தின் சுமையில் இருந்து உயர் மட்டத்தினர் தப்பிக் கொள்வது தொடர்பான குரல்கள் எதிர்காலத்தில் இன்னும் ஓங்கி ஒலிக்கக் கூடும்.

▲ ▲ ▲

## ☞ கொழும்பிலும் விமானத் தாக்குதலா?

## ☞ "உயர் குழாம் ஆட நாம் வாடுவதா?"

## ☞ 'கேக்' குண்டு மூலம் தாக்குதலா?

கொழும்பின் வாழ்வு எல்லா முனைகளிலும் அச்சத்திற்குள்ளாகிவிட்டதாம். 'ஆண்டவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்' என்று கூறப்படுவது போல, 'குண்டு தூணிலும் வெடிக்கும் துரும்பிலும் வெடிக்கும்' என்ற அச்சம் தோன்றிவிட்டதாம். இவ்வாறு அச்சம் தோன்றுவதற்கு பொலிசாரும் தம்மால் ஆன எல்லா வகையான தூண்டுதல்களையும் செய்கிறார்களாம்.

உதாரணத்திற்கு ஒன்று - அண்மையில், கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் 'கேக்' கண்காட்சி ஒன்று நடைபெற்றதாம். இக் கண்காட்சிகளில் கலந்துகொண்ட 'கேக்'குகளுக்குள்ளும் குண்டுகள் இருக்குமா என்ற அச்சம் பொலிசாருக்கு வந்துவிட்டதாம். இக் கண்காட்சிகளில் கலந்துகொண்ட அனைத்து 'கேக்'குகளும் 'குண்டு கண்டு பிடிக்கும் சாதனம்' மூலம் சோதனை செய்யப்பட்டே கண்காட்சி நிகழ்த்த அனுப்பப்பட்டதாம்.

கண்காட்சிக் 'கேக்'குகளுக்கே இந்தக் கதி என்றால் தமிழர் பாடு எப்படி இருக்கும் என்பதனைச் சொல்லத்தான் வேண்டுமா?

▲ ▲ ▲

மாவீரர்களுக்கு எமது வீர வணக்கம்

மக்கள் கடை

Kupfergasse 13,
7000 Chur

தரம் - மலிவு - தரம் - மலிவு - தரம் - மலிவு

மக்கள் கடை

தரம் - மலிவு - தரம் - மலிவு - தரம் - மலிவு

சுவிஸில் இயங்கும் ஏனைய மக்கள் கடைகள்

| | | | |
|---|---|---|---|
| மக்கள் கடை | மில்லர் அங்காடி | மக்கள் கடை | மக்கள் கடை |
| Heinrichstrasse 85, | Winkelriedstrasse 47, | Seilerstrasse 4, | Bahnof Passage 3, |
| 8005 Zurich | 6003 Luzern | 3011 Bern | 4500 Solothurn |

# மருத்துவக் கல்லூரி மாணவன் படுகொலை இன்னொரு மாணவன் கைது

சிதம்பரம் அண்ணாமலை மருத்துவக் கல்லூரி முதலாண்டு மாணவன் நாவரசு என்பவர் படுகொலை செய்யப்பட்டார். ராகிங்கின் போது தன்னைக் காட்டிக் கொடுக்கப்போவதாக மிரட்டியதால் அவரைக் கொலை செய்ததாக மூத்த மாணவன் ஜான் டேவிட் கூறியுள்ளார்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் மருத்துவபீடத்தில் முதலாண்டு படித்து வந்தவர் நாவரசு. இவர் சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பொன்னுச்சாமியின் ஒரே மகனாவார். இவர் தீபாவளி விடுமுறைக்கு வீட்டுக்கு வராததைத் தொடர்ந்து இவரது தந்தை மேற் கொண்ட தேடுதல் முயற்சியில் இவரை மூன்றாம் ஆண்டு மாணவன் ஜான் டேவிட்டுடன் கடைசியாக கண்டதாக சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் ஜான் டேவிட் தலைமறைவாகி சில தினங்களின் பின்னர் ராஜமன்னார்குடி நீதி மன்றத்தில் சரணடைந்தார். அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலமே, நாவரசு கொலை செய்யப்பட்டது தெரிய வந்தது.

06.11.96 அன்று தனது விடுதிக்கு நாவரசை அழைத்து அங்கு வைத்து ராக்கிங் செய்ததாகவும், நாவரசு தனது தந்தையிடம் கூறுவதாக மிரட்டியபோது எழுந்த தகராற்றில் நாவரசு கட்டிலில் மோதி மரணமடைந்ததாகவும். அவரை துண்டு துண்டாக வெட்டி இரு பெட்டிகளில் போட்டு மூடி, சென்னைக்கு செல்லும் புகையிரதத்தில் எடுத்துச் சென்று ஒரு பெட்டியை வழியிலுள்ள ஆற்றில் எறிந்ததாகவும், பின்னர் மற்றைய பெட்டியை சென்னை பஸ்வண்டி ஒன்றில் வைத்ததாகவும் கொலையாளி ஜான் டேவிட் தெரிவித்துள்ளார்.

ஜான் டேவிற்றின் கூற்றின் பிரகாரம் உடல் துண்டுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இரசாயன பரிசோதனைகள் நடத்தவண்ணம் உள்ளன. ஒரு இரவில் நாவரசின் உடலை ஜான் டேவிட்டால் தனித்து துண்டு துண்டாக வெட்டியிருக்க முடியாது என்றும் இதில் வேறு யாரும் சம்பந்தப் பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

நாவரசுவும், ஜான் டேவிட்டும் நண்பர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே நாவரசு இல்லத் திருமணம் ஒன்றிற்கு சென்றிருந்தாராம். இக் கொலைக்கு ராக்கிங் காரணமல்ல என மாணவர்கள் தெரிவித்துள்ளனர். போலி சாதிச சான்றிதழை சமர்ப்பித்தே ஜான் டேவிட் மருத்துவக் கல்லூரிக்கு பிரவேசித்ததும் தெரிய வந்துள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் பலர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கொடூரக் கொலைக்கு புதிதாக வரும் மாணவர்களை மூத்த மாணவர்கள் ராக்கிங் செய்வதே காரணம் என்பதால் இனி எந்தக் கல்வி நிறுவனத்திலும் ராக்கிங் அனுமதிக்கப்பட மாட்டாது என் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

# தனியார் நிதி நிறுவனங்கள் மோசடி

தமிழ் நாட்டிலும், பாண்டிச் சேரியிலும் மோசடியில் ஈடுபட்டுவந்த நிறுவனங்கள் மூடப்பட்டு வந்தது தெரிந்ததே. இந்த வகையில் ஈஸ்வரி நிதி நிறுவனம் மூடப்படுவதற்கு முன்னர் 15 நிதி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இந் நிறுவனங்கள் மக்களிடம் மோசடி செய்த தொகை நூறுகோடி ரூபாவுக்கு மேல் எனத் தெரியவருகின்றது. இந் நிறுவனங்களில் முதலீடு செய்தவர்கள் சங்கள் அமைத்து செயற்படுகின்றனர்.

ஈஸ்வரி நிதி நிறுவனத்திற்கு எதிராக பாண்டிச்சேரியில் மாத்திரம் 700 முறைப்பாடுகள் பொலிசில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இந் நிறுவனத்தால் பாண்டிச்சேரியில் மாத்திரம் மோசடி செய்த தொகை இரண்டு கோடி எனக் கூறப்படுகின்றது. இந் நிறுவனத்தின் உரிமையாளரை பாண்டிச் சேரிக்கு கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாண்டிச்சேரியிலுள்ள பல நிதி நிறுவனங்களில் முதலீடு செய்தவர்கள் பிரான்சில் வசிப்பதால் இந் நிறுவனங்களால் எவ்வளவு தொகை பணம் மோசடி செய்யப்பட்டது என்ற விபரம் தெரியமுடியாமல் உள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் மாத்திரம் நிதி நிறுவனங்களால் மோசடி செய்யப்பட்ட 25 ஆயிரம் முறைப்பாடுகள் பொலிசில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மோசடி செய்யப் பட்டவர்கள் ஊர்வலமாக சென்று தமிழக முதல்வரிடம் முறையிட திட்டமிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் மோசடி செய்த பல நிதி நிறுவனங்களின் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே. அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து அவற்றை தமக்கு பகிர்ந்து வழங்குமாறு பங்கிட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சீதாராம் கேசரி மீது விசாரணைக்கு உத்தரவு

காங்கிரஸ் கட்சியின் தற்போதைய தலைவர் சீதாராம் கேசரி முறைகேடாக சொத்துக்களைச் சேர்த்த விடயம் பற்றி சி.பி.ஐ விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று டெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



பீகார் மாநில முன்னாள் அமைச்சர் ஷியாம் சுந்தர்சிங்கின் நெருங்கிய நண்பரான மதுரேஷ், சீதாராம் கேசரி மீது ஒரு குற்றச்சாட்டை சி.பி.ஐயிடம் முறையிட்டிருந்தார். அதில் சீதாராம் கேசரி முறைகேடாக அளவுக்கு மீறி சொத்துக்களைச் சேகரித்திருந்தார் என குறிப்பிட்டிருந்தார். இது குறித்து சி.பி.ஐ எந்த விசாரணையும் மேற்கொள்ளாததைத் தொடர்ந்து அவர் டெல்லி உயர் நீதி மன்றத்தில் முறையீடு செய்தார். இவரது விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம் இது குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சி.பி.ஐக்கு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் புதிய காங்கிரஸ் தலைவரும் சி.பி.ஐயின் விசாரணைக்கு உட்படுவார் என தெரிவிக்கப்படுகின்றது.

# துப்ளக்ஸின் 300வது பிறந்தநாள் கொண்டாட்டம்

பாண்டிச்சேரியை ஆட்சி செய்த பிரான்ஸ் தளபதி துப்ளக்ஸின் 300வது பிறந்தநாளை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் பாண்டிச் சேரியில் செய்யப்படுகின்றன. இவரது பிறந்த நாளை கொண்டாட பல்வேறு அமைப்புக்களும் ஒன்றுகூடி திட்டமிட்டு வருகின்றன. பாண்டிச சேரி அரசும் இதில ஈடுபட்டுள்ளது. துப்ளக்ஸ் பற்றிய ஒருநாள் கருத்தரங்கையும் நடத்த அவை தீர்மானித்துள்ளன. 12.01.97 அன்று இக் கருத்தரங்கு நடைபெற உள்ளது. இந்தியாவிற்கான பிரான்ஸ் தூதுவர் இக் கருத்தரங்குக்கு முன்னிலை வகிக்கிறார். அமைச்சர்களும் பிற பிரமுகர்களும் இதில் கலந்து கொள்கின்றனர்.

# இரசாயன வாயுக் கசிவால் மக்கள், கால்நடைகள் பாதிப்பு

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புரோமின் என்ற இரசாயனப் பொருளைக் கொண்ட கொள்கலனொன்று, ஆண்டாள் குப்பம் கிராமத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. கடந்த 17.11.96 அன்று இரவு இக் கொள்கலனிலிருந்து இரசாயனப் பொருள் கசிந்து காற்றோடு கலந்தது. இதனால் ஆண்டாள் குப்பம், மற்றும் ஏலந்தூர் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு கண்எரிச்சல் ஏற்பட்டது. இதனால் 50ற்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர். ஏராளமான கால்நடைகளும் பாதிக்கப்பட்டன.

ஆனால் இச் சம்பவம் மணலி பெட்ரோலிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்துதான் ஏதோ வாயு கசிவு ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணிய மக்கள், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி போக்குவரத்தை தடை செய்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து பொலிசாரும், தீயணைப்புப் படையினரும் விசாரணை மேற்கொண்டதில் அவ் வாயுக் கசிவு புரோமின் இரசாயனப் பொருள் ஏற்றி வந்த கொள்கலனிலிருந்தே ஏற்பட்டது தெரியவந்தது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க மருத்துவக் குழுக்கள் அப் பகுதிக்கு விரைந்து முதலுதவியை வழங்கியுள்ளன.

மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிரைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL, MIDDLESEX, UB1 1QB
TEL: 0181-843 8485 / 01831-662 824 - FAX: 0181-606 9709

இலண்டனில் நகைத் தெரிவுகளுக்கு...
ராஜூ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887

# சென்னையில் ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு

பாட்டாளி மக்கள் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை 19.11.96 அன்று நடைபெற்றது. இம் மாநாட்டில் பாட்டாளி மக்கள் கட்சித் தோற்றுனர் டாக்டர் எஸ்.ராமதாஸ் உட்பட பல தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இம் மாநாடு குறித்து பி.பி.சி தமிழோசைக்கு கருத்துத் தெரிவித்த பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் லலித் எழில்மணி, தமிழகத்தில் ஒரு தொய்வு, அதனாலே உலகளாவிய தமிழர்கள் மத்தியிலே ஈழத் தமிழர்கள் பற்றிய ஒரு சோர்வு இருப்பதாக பரவலாகப் பேசிக் கொள்கிற அப்படிப்பட்ட ஒரு நிலவரம் இருக்கிறதாக தென்படுகிற வேளையில், ஈழத் தமிழர்களுக்காக, பாட்டாளி மக்கள் கட்சியும், தாய்த்தமிழ் நாட்டின் அனைவருடைய ஆதரவையும் திரட்டிடும் பெரு நோக்கத்தோடு கடந்த செவ்வாய் நடந்த மகாநாடு ஒரு தொடக்கம்தான்.



ஈழத் தமிழர்களுக்கு தாய்த் தமிழ் நாட்டுத் தமிழர்கள் அனைவரும் ஏகோபித்த வகையிலே அவர்களுடைய ஆதரவை, தேவைப்பட்டால் அவர்களுடைய ஒத்துழைப்பை, அவர்களுடைய பங்களிப்பை தரத் தயாராக இருக்கிறார்கள் என்பதை அத் தொடக்க மகாநாடு நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

அண்மையிலே இருக்கிற அநேக நாட்டுப் பிரச்சினைகளிலே அந்த நாட்டுக் காரர்கள் அழைத்த போதும் இந்தியா தலையிட்டிருக்கிறது. அநேக சந்தர்ப்பங்களிலே அவர்கள் அழைப்பில்லாமலும் இந்தியா தலையிட்டிருக்கிறது. ஆசியப் பிராந்தியத்திலே மிகப்பெரும் நாடாகிய இந்தியப் பேரரசும், இந்திய நாடும் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே தலையிடாமல் வேறொரு நாட்டு தலையீடு இருந்து தமிழ் மக்களின் சிக்கலுக்கு தீர்வு ஏற்படுமானால் அது எதிர்காலத்திலே இந்தியாவிற்கே கூட ஒரு பலவீனமான நிலையினை உண்டாக்கிவிடலாம். எனவேதான் நாம் இந்தியர்கள் என்ற பெரு நோக்கத்தோடு இந்திய நாட்டைச் சார்ந்தவர்கள் என்ற அந்த விரிவான நோக்கத்தோடு, பாதிக்கப்பட்டிருக்கிற மக்கள் தொப்புழ்கொடி உறவுள்ள தமிழர்கள் என்ற காரணத்தினாலே தமிழ் நாட்டில் இருக்கிற ஆறு கோடி தமிழர்கள் சார்பாக, தமிழ் மாநிலத்தின் சார்பாக இந்திய கூட்டமைப்புக்குள்ளே இருக்கிற ஒரு மாநிலத்தின் குரலாக எங்கள் குரலை இந்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்தியாவுக்கு சர்வதேச அளவிலே இன்னும் மதிப்பும், செல்வாக்கும் உயர்ந்து நிற்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்தினாலேயே தான் நாங்கள் இந்த பல்லாண்டு கால சிக்கலிலே இந்தியா தலையிட வேண்டும் என்று விரும்புகின்றோம் என்றார்.

## தனித் தமிழீழம்

இனப்பிரச்சினைக்கு ஒரே தீர்வு தனித் தமிழீழம் தான் என்று உங்கள் கட்சியில் கருத்து நிலவுகின்ற இவ்வேளையில், இந்தியா தலையிட்டு தமிழீழம் உருவாக அது உதவி செய்தால், தமிழ் நாட்டிலும் பிரிவினைசக்திகள் தலையெடுத்து தமிழ்நாடு தனி நாடாக ஒரு அகண்ட தமிழகமாக மாறும் அச்சம் நிலவுவதாக கூறுகிறார்களே என்றதற்கு,

அந்த அச்சம் அவசியம் அற்றதும், ஆதாரம் இல்லாததும், ஏற்புக்குரியதும் அல்ல. ஏனெனில் தமிழீழப் போராட்டத்தில் பல கட்டங்களைத் தாண்டி இன்று 50 ஆயிரம் மக்கள் உயிரிழந்து ஆறு இலட்சம் தமிழர்கள் நில புலங்களை இழந்து ஒரு பொது மனித உரிமையையே இழந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாகத் தவிக்கிற இந்த வேளையில், அந்த மக்களுக்கு அவர்களுடைய கோரிக்கைக்கு, அவர்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு எது பதிலாக அமையுமோ அதைத்தான் தமிழீழ மக்கள் வலியுறுத்துகிறார்கள். எனவே வெளியிலே இருக்கிறவர்கள், அது பா.ம.க. கட்சி ஆனாலும்சரி, அல்லது வேறு எந்த அமைப்பினராக, குழுவினராக இருந்தாலும் அதற்கு எதிர் கருத்துக் கொண்டிருப்பதிலே கொஞ்சமும் நியாயம் இருக்கவில்லை. ஏனெனில் பாதிக்கப்படுபவர்களுக்கு அவர்களுக்கே தெரிகிறது பரிகாரம் என்னவென்று எனவே அதற்கு ஆதரவான கருத்தைச் சொல்லுவது தான் உள்ளபடியே அந்த நோக்கத்திற்கு நாம் உதவி செய்வதாக அமையும் என்றார்.

## தேர்தலில் தமிழீழப் பிரச்சினை

அண்மையில் நடந்த தேர்தலில் தமிழர் பிரச்சினையை முன்னிலையாக வைத்து ஏன் போட்டியிடவில்லை என்றதற்கு,

தமிழீழப் பிரச்சினை ஒட்டுமொத்தமான தமிழர்களுடைய பிரச்சினை. எனவே தமிழ் நாட்டிலே நடைபெறுகின்ற ஒரு தேர்தலிலே மிகப் பெரிய தொன்மை மிகு பண்பாட்டுக் கலாச்சாரத்திற்குச் சொந்தமான உலகளாவிய தமிழர்களுடைய ஒரு வரலாற்றுக் கட்டாயமான தமிழீழச் சிக்கல் பற்றிய ஒரு சர்வதேசப் பிரச்சினையை உள்ளூர் தேர்தலிலே கொண்டு வந்து நிறுத்த எங்கள் கட்சி விரும்பவில்லை.

## கலைஞர் - ராமதாஸ் சந்திப்பு

இலங்கை சிக்கலில் எப்போதும் மாண்புள்ள தலைவர் கலைஞருக்கும், டாக்டர் ராமதாசுக்கும் ஒரு பாதையையே உண்டு பண்ணிக் கொண்டிருக்கிற நிலை காரியம், செயல். சமீபத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று வந்த டாக்டர் ராமதாஸ் அவர்கள் அங்கு தான் பார்த்த, கேட்ட சந்தித்து பேசி அறிந்த செய்திகளை அனுபவபூர்வமாக உணர்ந்திருந்த காரணத்தினாலே, இன்றை தமிழ் நாட்டில் மூத்த தலைவரும், முதுபெரும் அரசியல் அனுபவமிக்கவருமான, ராஜதந்திரியுமான கலைஞர் அவர்களுக்கு இதை அப்படியே சொன்னார்கள். கலைஞர் அவர்களும் நிதானமாக அனைத்தையும் கேட்டுக் கொண்டு ஆவன செய்வோம் என்று அவர்கள் சொல்லுகிற வகையிலே கேட்டுக் கொண்டார்கள்.

## உலக நீதி மன்றத்தில் தமிழீழப் பிரச்சினை

இந்தப் பிரச்சினையை உலக நீதிமன்றத்தில் எழுப்பப்போவதாக ஒரு கருத்து உள்ளதே என்ற கேள்விக்கு,



இது பற்றி செவ்வாய் நடந்த பேரரங்கத்திலே தோழர்கள் முன்வைத்த கருத்தும், எம்முடைய கட்சியின் கருத்தும் ஒத்ததாகவே இருக்கிறது. சர்வதேச அளவிலே மனித உரிமைகள் மீறப்படுகிற போது அதைக் கட்டுப்படுத்த, அதைச் சீர் படுத்தி ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவர சர்வதேச அளவிலேயே ஐ.நா. சபை போன்ற அந்தப் பொதுச் சபைகள் மூலமாகவே முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு அது அநேக நாடுகளாலும் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி இலங்கை அரசு கடந்த ஆண்டுகளிலே, கடந்த காலங்களிலே தொடர்ந்து செய்து கொண்டிருக்கிற, தம்முடைய நாட்டுக் குடிமக்களுக்கு எதிரான அந்தக் கொடுமைகளை மேலும் செய்திடாமல் தடுக்கிற, தடுத்து நிறுத்துகிற வகையிலே என்னென்ன காரியங்களைச் செய்யலாம் என்று ஆலோசிக்கிற போது இப்படி உரிமை மீறல்கள் நடைபெறுகின்ற அந்த கோர்வையான செய்திகளை, நடவடிக்கைகளை கோர்த்தெடுத்து சர்வதேச நீதிமன்றத்திலே ஒரு வழக்குப் பதிவு செய்தால் சர்வதேச அளவிலே இந்த இலங்கை அரசு குற்றவாளிக்கூண்டிலே நின்று பதில் சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்படும். அதன் மூலம் இலங்கை அரசுக்கு ஆதரவாக இலங்கை அரசினுடைய ஆக்கிரமிப்புக்கு இனப்படுகொலைக்கு காரணமாக இருக்கிற அவர்களுக்கு தொடர்ந்து உதவி செய்துவருகின்ற பலவேறு நாட்டவர்களும் கூட தாங்கள் அளித்து வருகிற, இந்த அவசியம் இல்லாத மனித உரிமைக்கு எதிரான, உதவிகளை நிறுத்திடுவதற்கு அவர்களும் யோசிப்பார்கள் என்ற காரணத்தினாலேதான் நாங்கள் இலங்கை தமிழீழ சிக்கல்பற்றியும், அந்தச் சிக்கல் பற்றி தொடர்ந்து இனப்படுகொலையில் ஈடுபட்டுவருகிற இலங்கை அரசின் நிலை குறித்தும் சர்வதேச நீதிமன்றத்திலே வழக்குத் தொடருவதைப் பற்றி, மூத்த நீதிபதிகள், நம் நாட்டிலிருக்கிற சட்டவல்லுனர்களை ஆலோசித்து அவர்களுடைய இந்த வழக்குத் தொடுப்பது என்ற முடிவை நாங்கள் பரிசீலனை செய்து வருகிறோம் என்றார்.

# ராஜீவ் படுகொலை பின்னணியில் சி.ஐ.ஏ. இருந்தது

## ஜெயலலிதா சந்தேகம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ. இருந்திருக்கலாம் என தான் சந்தேகிப்பதாக தமிழக முன்னாள் முதல்வர் செல்வி. ஜெயலலிதா ஜெயின் கமிஷன் முன் சாட்சியமளிக்கும்போது தெரிவித்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலையின் பின்னணிகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஜெயின் கமிஷன முன் கடந்த செவ்வாய்க்கிழமை 19.11.96 அன்று சாட்சியம் அளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ராஜீவின் காங்கிரசுடன் தனது கட்சி கூட்டணி வைத்திருந்தது என்றாலும், தேர்தல் பிரச்சாரக் கூட்டத் தொடக்கத்தில் மட்டுமே இருவரும் இணைந்து பிரசாரம் செய்வது என்று முடிவு செய்யப்பட்டிருந்ததால் ஸ்ரீ பெரும்புத்தூரில் நடந்த ராஜீவ் கொலை செய்யப்பட்ட கூட்டத்திற்கு தான் செல்லவில்லை என்று கூறினார்.

எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில், இலங்கை பிரச்சினை குறித்த கொள்கை இந்திரா, ராஜீவ் ஆகியோரின் கொள்கைகளை



ஒத்தே இருந்தது என்றும், விடுதலைப் புலிகள்தான் இலங்கைத் தமிழ் மக்களின் நம்பிக்கை மற்றும் அபிலாசைகளை பிரதிபலித்தனர் என்ற கருத்து நிலவி இருந்ததே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.


## தமிழில் சாரதிப் பயிற்சி

பிரெஞ்சு தெரிய வேண்டியதில்லை! தமிழிலேயே படித்து தமிழிலேயே கோட் பாஸ் செய்து **பிரெஞ்சு சாரதிப் பத்திரம்** (permis de conduire) பெறலாம்! இலங்கைப் புத்தகம் இருந்தால் இன்னும் எளிது! உங்கள் பெயரை உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்

நீங்கள் வேறு சாரதிப் பாடசாலைகளில் சேர்ந்து பணம் கட்டியிருந்தாலும் பிரச்சனையில்லை. நீங்கள் கட்டிய பணம் நஷ்டமாகாத வகையில் நாங்கள் உங்களுக்கு சாரதிப் பத்திரம் கிடைக்க வழிசெய்கிறோம்.

தொடர்புகளுக்கு: பேராசிரியர் சக்திப்புயல்



இடம் : 6, rue Demarquay, Paris10 (நிஷா மளிகை அருகில்)
Métro: Gare du Nord. - Tel:01 42 05 48 11 / 06 02 46 59 23
கிளை ஸ்தாபனம் : 36, Rue Ludovic Piette - Tel: 01 34 24 12 82 / 06 02 46 59 23

# கொழும்பில் அதி உச்ச பாதுகாப்பு போக்குவரத்துக்கள் ரத்து

விடுதலைப் புலிகளின் மாவீரர்வாரம் முடிவுறும் இவ்வேளையில் கொழும்பில் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் D.M.T.B. திஸ்ஸநாயக்கா பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிக் குறிப்பிடும் போது பாடசாலைகள் உள்ள பகுதிகளில் அதிக அளவிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் சிறீமணி அத்துலத்முதலி பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளிமாகாணங்களுக்கான பல ரயில் போக்குவரத்துக்கள் இரத்துச் செய்யப்பட்டதாகவும். பொலிசாரிடம் பாதுகாப்பு கோரப்பட்ட போது அவர்கள் போதிய பாதுகாப்பு வழங்க மறுத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் கூறும் போது பாடசாலைகளை உடனடியாக மூடும் நோக்கம் இல்லை என்றும், பாடசாலைகளுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பிலும், அதை அண்மித்த பகுதிகளிலும் தங்கியுள்ள வடபகுதி மக்கள் பலர் கைது செய்யப்பட்டும், விசாரணைக்கு உட்படுத்தப்பட்டும் உள்ளனர்.

# வன்னியின் உண்மை நிலைக்கு மாறாக அரசு பிரச்சாரம்

யுத்தத்தின் மூலம் சமாதானம் என்று சொல்லிக்கொண்ட சந்திரிகா அரசாங்கம் நடத்திய இனவெறித்தாக்குதல்களால் இலட்சக்கணக்கான மக்கள் பரம்பரைபரம்பரையாக காலா காலமாக வாழ்ந்து வந்த தங்கள் சொந்த இருப்பிடங்களையும் சொந்தக் கிராமங்களையும் விட்டு வெளியே காடுகளிலும் மரநிழல்களின் கீழும் தஞ்சமடைந்துள்ளனர்.

உலகநாடுகளில் தமிழ் மக்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகளை வழங்குவதாகவும் அவர்களுக்கு வேண்டிய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளப் போவதாகவும் கூறிக்கொண்டு ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தான் மேற்கொண்டு நடத்தப் போகிற இன அழிப்பு யுத்தத்திற்கு நிதி சேர்க்க பாரிஸ் வந்திருக்கும் இந்த நேரத்தில் வன்னிப் பகுதியில் யாரும் மக்களின் உண்மை நிலை என்ன என்ற வெளியுலகுக்குத் தெரிவது மிகவும் அத்தியாவசியமானதாகும்.

# கடற்படை மீது திருமலையில் தாக்குதல்

திருகோணமலையில் உள்ள கப்பல் கட்டும் தளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிறீலங்காக் கடற்படையினர் மீது இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை 24.11.96 அன்று இரவு எட்டு மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தில் ஆறு கடற்படையினர் படுகாயமடைந்து திருமலை கடற்படைத்தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அன்றைய தினம் நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் நடைபெற்ற பிறிதொரு சம்பவத்தில் மூன்று இயந்திரப் படகுகளின் வெளிக்கள இயந்திரங்களும், ஒரு மின்பிறப்பாக்கியும் இனந் தெரியாதோரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

# வவுனியா நகரில் மீண்டும் இனந்தெரியாத சடலங்கள்

வவுனியா நகரப் பகுதியில சிலவார இடைவெளிக்குப்பின் மீண்டும் இனந்தெரியாத சடலங்கள் தென்பட ஆரம்பித்துள்ளன.

கடந்த 21.11.96 வியாழக்கிழமை வவுனியா மீன்சந்தைப் பகுதியில் குரல்வளை அறுக்கப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சாரமும் சேட்டும் அணிந்திருந்த இந்த இளைஞர் யார் என்று இன்னும் அடையாளம் காணப்படவில்லை. அடையாளம் காண்பதற்காக இவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா குருமன் காட்டுப் பகுதியில் கடந்த 20.11.96 புதன்கிழமை அன்று இனந்தெரியாத இளைஞரின் சடலமொன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. சாரமும் சேட்டும் அணிந்திருந்த இவ் இளைஞனின் உடலில் காயம் எதுவும் காணப்படவில்லை. இவரது சடலமும் அடையாளம் காண்பதற்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

# திருமலையில் வெள்ளம்

திருமலை மாவட்டத்தில் வெருகல், மூதூர், கேணியடி, நெல்சன்புரம் போன்ற பகுதிகளில் கடந்த சனி முதல் பெரும் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக 10000-க்கும் மேற்பட்ட மக்கள் வீடுவாசல்களை விட்டு பொது இடங்களில் தஞ்சம் அடைந்திருக்கின்றனர் இவர்களுக்கான உடனடி நிவாரணங்களை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் அரசினை வேண்டியுள்ளனர். திருமலை நகரம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. பாதைகள் யாவும் வெள்ளத்தால் மூடப்பட்ட நிலையில் போக்குவரத்துக்கும் பெரும் சிக்கலாகியுள்ளது.

# சிறீலங்காப் படையினருக்கு பொறுப்புணர்ச்சி கிடையாது

## -அமெரிக்கப் பயிற்சியாளர்-

அநுராதபுர மாவட்டத்தில், சாலியபுர பயிற்சி முகாமில் அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் கட்டளைப் பிரிவைச் சேர்ந்த பயிற்சியாளர்கள், சிறீலங்கா படையினருக்கு கெரில்லா போர் எதிர்ப்பு யுத்திகளை பயிற்சியளித்து வருவது தெரிந்ததே.

இங்கு பயிற்சியளிக்கும் பொறுப்பதிகாரியின் காவலுக்கென சிறீலங்கா இராணுவ பிளட்டூன் பிரிவு ஒன்று அமர்த்தப்பட்டிருந்தது. ஒரு நாள் இரவு தனது காவலர்கள் ஒழுங்காக கடமையாற்றுகிறார்களா என பரிசோதனை செய்யச் சென்ற இவ் அதிகாரிக்கு அதிர்ச்சி அளிக்கக்கூடிய காட்சி ஒன்று தென்பட்டதாம்.

அனைத்து காவல் சிப்பாய்களும் அவ்வேளை ஆழ்ந்த நித்திரையில் இருந்துள்ளனர். சிறீலங்காப் படையினரின் இந்தச் செயல் அவ் அதிகாரிக்கு மிகுந்த கோபத்தை வரவழைத்ததுடன் உடனடியாக இச்சம்பவம் குறித்து தனது கட்டளைபணியகத்துடன் தொடர்பு கொண்டு அறிவித்துள்ளார்.

# விடுதலைப்புலிகளுக்கு எரிபொருள் விற்றனர் மன்னாரில் 9 படையினர் கைது

மன்னார் மாவட்டத்தில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் முகாமிற்கு எரிபொருள் விநியோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 9 இராணுவத்தினர் கண்காணிப்பு பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் இராணுவ உளவுப்பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரி எனவும் தெரியவருகிறது.

சில சிங்கள, முஸ்லீம் வர்த்தகர்கள் மூலம் இந்த எரிபொருள் விற்பனையை படையினர் மேற்கொண்டதாக தெரியவருகிறது. மாதாந்தம் 200 பரல் எரிபொருள் புலிகளுக்கு விநியோகிக்கப்பட்டதாகவும் இரவு வேளைகளில் கடல் வழியாகவே இந்த எரிபொருள் புலிகளுக்கு எடுத்துச் செல்லப் பட்டதாகவும் தெரியவருகிறது.


Aarthi Photo service

16 rue de Paradis, 75010 Paris, Mo: Gare de l'Est.
Tel: 01 42 46 42 07 / Fax: 01 40 22 98 67

Aarthi Photo Studio

15 rue Cail, 75010 Paris, Mo: Gare du Nord - La chapelle
Tel: 01 40 34 20 90

ஆர்த்தி போட்டோ ஸ்டூடியோ

இப்பொழுது உங்களின் வசதிக்காக Mo: லாசப்பலில் ஆர்த்தியின் மற்றுமொரு அங்கம்

உங்கள் குழந்தைகளை புகைப்படம் எடுக்க நாடுங்கள் ஆர்த்தி ஸ்டூடியோ, குடும்பப் படங்கள் எடுக்க நாடுகள் ஆர்த்தி ஸ்டூடியோ

மணவறை அலங்காரங்கள் மற்றும் பலவிதமான அமைப்புகளுடன் கூடிய பிரம்மாண்டமான ஸ்டூடியோ.

நீங்கள் விரும்பிய வண்ணம் புகைப்படங்கள் விதவிதமான கோலங்களில் எடுக்க ஆர்த்தி - லாசப்பல்

இலங்கை, இந்தியா மற்றும் பிரான்ஸ், அமெரிக்க Passport மற்றும் அடையாள அட்டைப் படங்கள் எடுக்க ஆர்த்தி - லாசப்பல்.

உங்கள் பிலிம்ரோல்களை 30 நிமிடங்களில் டெவலப் செய்ய ஆர்த்தி - Gare de d'Est.

- Camera பழுது பார்க்கப்படும்.

Film - Development - Photo Enlargement - Mariage Photo
- Children Photo - Ceremony Photo - Albums - Frames - Cameras

ஆர்த்தியின் தொலைபேசி சேவை Mobile Telephone

ஆர்த்தி ஸ்டூடியோவில் Mobile Telephone பதிவுபெற்று ஒவ்வொரு மாதமும் 3 மணிநேரம் இலவசமாக பேசுங்கள்.
* Forfait : 240Ffs மட்டுமே. வேறு எந்த விதமான வரிகளும் கிடையாது. Callback வசதிகளும் செய்து தரப்படும்.

# 'நிறப்பிரிகை' நடத்திய எழுத்தாளர் சந்திப்பில் கஜன் - நாதனுக்கு இரங்கல் தீர்மானம்

(கும்பகோணம்)

தமிழீழத் தேசிய இன விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்லும் வரலாற்றுப் பணியை ஈழமுரசு ஆசிரியராக இருந்து ஆற்றிய தோழர் கந்தையா கஜேந்திரன் அவர்கள் கடந்த 26.10.96 ல் சனிக்கிழமை அன்று பாரிஸ் நகரத்தில் இனம் தெரியாத நபர்களால் நண்பரோடு சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். கருத்துச் சுதந்திரத்தின் கருத்து நாடுகளையும் கண்டங்களையும் தாண்டி தெரிவிக்கப்படுகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருக்கும் பல சிற்றிதழ்களின் சார்பிலும், அவற்றில் பங்கு கொண்டு எதிர்வரும் எழுத்தாளர்கள் சார்பில இந்தவகைய படு கொலைக்கு எதிரான கட்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்



கந்தையா கஜேந்திரன்

அவரது இழப்பு உடனடியாக ஈடுசெய்ய முடியாமல் போனாலும் ஓர் விடுதலை இயக்கம் இவ்வாறான இழப்புகளுக்கு ஈடு கொடுத்துத்தான் வளர்கிறது என்கிற வரலாற்றுண்மையை கருத்துச்சுதந்திரத்தில் கழுத்தை நெரித்து தற்காலிகமாக திருப்தி படுகிற ஆதிக்கச் சக்திகளையும் அதன் கூலிச் சக்திகளையும் இந்த எழுத்தாளர் அரங்கு தனது எச்சரிக்கையைப் பதிவு செய்கிறது.

ஈழமுரசு ஆசிரியர் கஜேந்திரன் படுகொலை செய்யப்பட்ட செய்தியை பிரெஞ்சு அரசின் தொலைக்காட்சி நிறுவனமும் பிரெஞ்சு நாட்டின் அனைத்து முன்னணிப் பத்திரிகைகளும் வெளியிட்டு கருத்துலக நாகரீகத்தைக் கட்டிக் காப்பாற்றிக் கொண்டன. பெரும் பணி இதழ்கள் இச் செய்தியை இரட்டிப்பு செய்கின்ற நேரத்தில், நமது தமிழகத்தில் வெளிவரும் பல்வேறு இலக்கியச் சிற்றிதழ்கள் இந்தப் படு கொலையை கண்டித்து செய்திகளும் தலையங்கங்களும் எழுத வேண்டும் என்று இந்த தமிழக எழுத்தாளர்கள் அரங்கின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். ஈழமுரசு ஆசிரியர் கஜேந்திரன் நினைவை மனதில் போற்றும் வண்ணம் இரு நிமிடங்கள் மரியாதை செலுத்த வேண்டுகிறோம்.

இதில் 85 எழுத்தாளர்கள் கையொப்பமிட்டனர்.

# கோவையில் கஜன் - நாதனுக்கு நினைவாஞ்சலிக் கூட்டம்

## 'தமிழியம்' அமைப்பு நடாத்தியது

(கோவை)

ஏடறிந்த வரலாறெல்லாம் தேசிய இனங்களின் பின்னணியில் நடக்கும் வர்க்கப் போராட்டமே என்ற நிகழ்கால வரலாற்று உண்மையை உலகுக்கு உணர்த்தி வரும் தமிழீழ விடுதலைப் போரை நடத்தி வரும் தமிழீழப் போராளிகளுக்கு ஆதரவாகவும் பக்க பலமாகவும் பாரீசில் நகரத்தில் இருந்தபடி 'ஈழமுரசு' என்ற வார இதழை கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தி வரும் ஈழமுரசு ஆசிரியர் கஜன் என்கிற கந்தையா கஜேந்திரனும் அவரது நண்பர் கந்தையா பேரின்பநாதனும் சென்ற ஒக்டோபர் திங்கள் 26-ம் தேதி அடையாளம் தெரியாத கூலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட அதிர்ச்சி தரும் செய்தியை நாளிதழ் வழியே படித்து நாம் எல்லோரும் ஆழ்ந்த வருத்தத்திற்கு ஆளாகி உள்ளோம்.



கந்தையா பேரின்பநாதன்

'தமிழியம்' சார்பாக மறைந்த அந்தத் தோழர்களின் வீர மரணத்திறகு நினைவாஞ்சலி செலுத்திக் கொள்கிறோம.

பத்திரிகைச் சுதந்திரத்திற்கு விடப்பட்டுள்ள வெளிப்படையான சவாலை உலகெங்கிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான இதழாளர்களும், சிந்தனையாளரும், எழுத்தாளரும், கவிஞரும் மற்றும் வெகு மக்களும் தன் கவனத்தில் இருத்திக் கொள்கின்றனர். இந்தப் படுகொலைக்கு இக் கூட்டம் தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

வாழ்வதன் நீட்சியே மரணம் என்கிற மகத்தான உண்மையை தமது மரணத்தால் நிரூபிக்கும் அந்தத் தோழர்களின் நினைவை உலகெங்கிலும் உள்ள தமிழர்களும் தத்தம் தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டுவரும் போராளிகளும் தம் நெஞ்சில் நீறுபூத்த நெருப்பாகப் பாதுகாப்பர்.

தோன்றின் புகழொடு தோன்றி, மறைந்த பின்னும் நம் நெஞ்சில நாளும் உயிர்க்கும் அத்தோழர்களின் நினைவைப் போற்றும் வகையில் இரண்டு நிமிடங்கள் நின்று மரியாதை செலுத்திக் கொள்கிறோம்.

இவ்வறிக்கையில் 150 எழுத்தாளர்களும் சமூக ஆய்வாளர்களும் கலைஞர்களும் கையொப்பமிட்டனர்.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தேச விடுதலைக்கு தம்மை அர்ப்பணித்த மாவீரர்களுக்கு எங்கள் இதய அஞ்சலிகள்

கஜமுகா ரேடர்ஸ்

GAJAMUGA TRADERS

இலங்கை இந்திய மரக்கறி வகைகள் 5Sfr மட்டுமே!

உடன் மீன்வகைகள் ....................10Sfr
உடன் இறைச்சிவகைகள் ...........10Sfr
தாய்லாந்து மரக்கறி வகைகள் ....9Sfr
ஒறிஜினல் வீடியோ கசற்.............9Sfr

சேட்வகை 20 - இருந்து
சிகுயின்ஸ் சாறி 60-

GAJAMUGA TRADERS

AV. DE BEAU LIEU-1 1004 LAUSANNE
AV.DFRANKLIN..... 1004 LAUSANNE

TEL: 021/626 08 10 - Fax: 62 60 811

புதிது DATTELN இல் புதிது
(Kreis RECKLINGHAUSEN

இந்தியாவிலிருந்து நேரடியாக
புத்தம் புதிய டிசைன்களில்
இறக்குமதி செய்யப்பட்ட

சாறி | பஞ்சாபி | கூறை | பனாறிஸ்

மற்றும் சிறுவர்களின் ரெடிமேட் ஆடைகள்

ஏர் லங்கா, சகுந்தலா, பநாலி, இந்தியன் ரூபியா, ரம்பா, கோல்டன் குயின், சரிதா, அமெரிக்கன் டாலர்

விதம் விதமான சேலைத் தெரிவுக்கு

பலவிதமான புத்தம் புதிய டிசைன்களில்
பஞ்சாபிகள், கூறைகள் தெரிவு செய்ய வேண்டுமெனில் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

15.12.96 இலிருந்து எமது ஸ்தாபனத்தில் புதன்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் சிகை அலங்காரம் செய்யப்படும் என்பதையும் மகிழ்வுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்

Y&S
ஏசியன் சொப்
எமது கடையின் முன்வாசல் Provinzial str இல் உள்ளது.

Wittener Str-65, 45711 Datteln
Tel: 02363/734967 - Fax: 02363 / 734968

# சென்னை நிர்வாகத்தில் யாழ்ப்பாணம்

45

18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்ட ஆங்கிலேயர்கள் அதைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்காக இலங்கையைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். கடலை ஆள்பவனே தரையை ஆளமுடியும் என்ற கருத்து மேலோங்கியிருந்த காலம் அது. அத்திலாந்திக் சமுத்திரத்தில் ஸ்பானியர்கள் போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள் என்று பலரை தோற்கடித்துவிட்டாலும் தங்களுக்குத் தொடர்ந்து தொல்லை தந்துகொண்டிருக்கும் நெப்போலியன் மீதும் பிரெஞ்சுக் கடற்படை மீதும் அவர்களுக்கு அச்சம் இருந்தது.

தங்களது சாம்ராச்சியத்துக்கு பொன்னையும் பொருளையும் அள்ளித்தரக்கூடிய இந்தியாவை பிரெஞ்சுக் கடற்படை பிடித்துவிடும் என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. அரபிக் கடலில் இந்தியாக் கேந்திரத் தாங்கள் பாதுகாப்பாக வைத்திருந்தாலும் இந்து சமுத்திரத்தின் முத்தாக இருக்கும் இலங்கையைக் கைப்பற்றுவதன் மூலம் அதாவது கடற்படைக்கு முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையைக் கைப்பற்றுவதன் மூலம் பிரெஞ்சுக்காரர்கள் தென்பகுதிக்கூடாக இந்தியாவிற்குள் நுழைந்துவிடுவார்கள் என்று அவர்கள் அஞ்சினார்கள். அத்திலாந்திக் சமுத்திரத்தில் தங்களால் சுலபமாகத் தோற்கடிக்கப்பட்ட ஒல்லாந்துக் கடற்படையை பிரெஞ்சுக்காரர்கள் இலங்கையில் வைத்து சுலபமாகத் தோற்கடித்துவிட்டு அதை கைப்பற்றிவிடுவார்கள் என்று அவர்கள் பயந்தார்கள்.

அதனால் அவர்கள் முந்துவதற்கு முன்பாக தாங்கள் இலங்கையைக் கைப்பற்ற முடிவு செய்து கி.பி 1795ம் ஆண்டு முதலில் திருகோணமலை மீதும் மட்டக்களப்பின் மீதும் படையெடுத்து அங்கிருந்த ஒல்லாந்துக் கடற்படையைத் தோற்கடித்து திருமலை பிரெடெரிக் கோட்டையையும் மட்டக்களப்புக் கோட்டையையும் கைப்பற்றினார்கள்.

அதன் பின் அதே ஆண்டு செப்டெம்பர் மாதம் 27ம் திகதி ஆங்கிலேயக் கடற்படைக் கப்பல்கள் பருத்தித்துறைத் துறைமுகத்தில் வந்து நங்கூரமிட்டன. அன்றே அங்கு தரையிறங்கிய ஆங்கிலேயப்படையினர் மறுநாள் காலை அதாவது 1795 செப்டம்பர் 28ம் திகதி ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டனர். அந்த முற்றுகைக்குத் தலைமை தாங்கிய ஆங்கிலேயப் படைத் தளபதியாகிய கேர்ணல் ஸ்ருவார்ட் கோட்டைக்குள் இருப்போரை சரணடையுமாறு அறிவித்தான்.

அப்போது யாழ்ப்பாணக் கோட்டைக்கு பொறுப்பாக இருந்த ஒந்துத் தளபதியான கம்மாந்தர் ராகெ (RAKET) ட்டால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆங்கிலேயப் படைகளை எதிர்க்கும் அளவுக்கு தம்மிடம் பலமில்லை என்பதை உணர்ந்து கொண்ட அவன் தன்னோடு கோட்டைக்குள் இருந்த 39 ஒல்லாந்தர்களோடும் 98 இந்தியச் சிப்பாய்களோடும் வெளியே வந்து ஆங்கிலேயத் தளபதி கேர்ணல் ஸ்ருவாட்டிடம் சரணடைந்தான். ஆங்கிலேயர்கள் இரத்தம் சிந்தாமல் துப்பாக்கிக் குண்டுகளையோ பீரங்கிக் குண்டுகளையோ செலவழிக்காமல் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.




யாழ்ப்பாண இராச்சியத்தை போர்த்துக்கேயர்கள் கைப்பற்றிய போது தமிழர்களின் சார்பில் அவர்களை எதிர்த்துப் போரிட்டு இழந்த இராச்சியத்தை மீட்பதற்கான சில முயற்சிகள் நடந்தன. போர்த்துக்கேயர்களிடமிருந்து ஒல்லாந்தர்கள் அதைக் கைப்பற்றியபோது அவ்வாறான பெரிய எதிர்ப்புகள் எதுவும் எழவில்லை. போர்த்துக்கேயர்கள் சிலருடன் சேர்ந்து தமிழ்ப் பிரமுகர்கள் ஒல்லாந்தர் ஆட்சியைக் கவிழ்க்க முயன்ற ஒரு சம்பவம் நடந்தது. ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய போது தமிழர்கள் தரப்பிலிருந்து இழந்த ஆட்சியுரிமையை மீட்பதற்கான எந்தவிதமான முயற்சிகளுமே இருக்கவில்லை.

> போர்த்துக்கேயர் ஆட்சியில் ஆரம்பித்து ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலம்வரை யாழ்ப்பாணப் பிரமுகர்கள் ஆட்சியில் இருப்பவர்களை எதிர்த்து உரிமைப் போராட்டம் நடத்துவதை விட அவர்களுக்கு விசுவாசமாக நடந்தால் எவ்வாறு பட்டங்களையும் பதவிகளையும் சன்மானங்களையும் பெறலாம் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். இது ஒரு கலையாகவே வளர்ந்தது

போர்த்துக்கேயர் ஆட்சியில் ஆரம்பித்து ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலம்வரை யாழ்ப்பாணப் பிரமுகர்கள் ஆட்சியில் இருப்பவர்களை எதிர்த்து உரிமைப் போராட்டம் நடத்துவதை விட அவர்களுக்கு விசுவாசமாக நடந்தால் எவ்வாறு பட்டங்களையும் பதவிகளையும் சன்மானங்களையும் பெறலாம் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். இது ஒரு கலையாகவே வளர்ந்தது என்று சொல்லலாம். எனவே ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட போது புது எஜமானுக்கு எப்படி விசுவாசமாக நடந்து கொள்ளலாம் எப்படி அவனது நம்பிக்கையைப் பெறலாம் என்பது பற்றியே அவர்களது கவலை இருந்தது. இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து வந்த தங்களது ஆட்சியுரிமை யாழ்ப்பாணம் வன்னி என்றும் நாடுகள் அடங்கிய தமிழ்ழ தேசத்தின் இறைமை பற்றியெல்லாம் அவர்கள் கணக்கிலெடுக்கவில்லை என்பது மட்டுமல்ல அதைப்பற்றி சிந்திக்கவேயில்லை.

கி.பி. 1796-ம் ஆண்டு பெப்ரவரி 14-ம் திகதி ஆங்கிலேயக் கடற்படை கொழும்புக் கோட்டையையும் கைப்பற்றியதும் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சி முடிவுக்கு வந்தது. அதன்பின் சென்னையைத் தலைநகராகக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பனி அரசாங்கத்தின் கீழ் கண்டியைத் தவிர்ந்த இலங்கையின் மற்றைய பகுதிகள் வந்தன. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய பிராந்தியங்களின் ஆளுனராக அப் பகுதி படையெடுப்புக்களுக்குத் தலைமை தாங்கிய கேர்ணல் ஜேம்ஸ் ஸ்ருவார்ட் நியமிக்கப்பட்டான். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தைப் போலவே அவனது நிர்வாகத்திலும், கொழும்பு, கோட்டை, காலி ஆகியன ஒரு தனி நிர்வாகப் பிரிவாகவும், யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு பிறிதொரு நிர்வாகப் பிரிவாகவும் இருந்தன.

கேர்ணல் ஸ்ருவார்ட் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காக போர்த்துக்கேயர் காலத்தில் கொண்டுவரப்பட்டு, பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் கொஞ்சம் தளர்த்தப்பட்ட மதக் கட்டுப்பாடுகளை இன்னும் தளர்த்துமாறு உத்தரவிட்டான். இதன் முதற்படியாக, மக்கள் தாங்கள் விரும்பிய மதத்தைக் கடைப்பிடிக்கலாமென்றும், மக்களை கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கும் முயற்சிகளுக்கு கத்தோலிக்க மத குருமார், தங்களது முழுமையான பணியைத் தொடரலாம் என்றும் அறிவித்தான். ஒல்லாந்தர் காலத்தில் அவர்களது திருத்தியமைக்கப்பட்ட கிறிஸ்தவ மதம், அதாவது புரொட்டஸ்தாந்து மதமே அமுலில் இருந்ததால் கத்தோலிக்க மத குருமார் மதப் பிரச்சாரம் செய்வது தடை செய்யப்பட்டிருந்தது.

இதைவிட போர்த்துக்கேயர்கள் காலத்தில் தடை செய்யப்பட்ட இந்து மதத்தை ஒல்லாந்தர்கள் தமது ஆட்சியின் இறுதிக் காலப் பகுதியில் தளர்த்தியமை என்பது அரசியல் நோக்கத்தைக் கொண்டதாக இருந்தது எனச் சொல்லப்படுகின்றது.

அதாவது போர்த்துக்கேயர்கள் இந்து மதத்தைத் தடை செய்தபோது, இந்து மதத்தின் தனிச் சொத்தாக இருந்த சாதி அமைப்பும் நெருக்கடிக்குள்ளாக ஆரம்பித்தது. சாதி அமைப்பு தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாகித் தகரும் பட்சத்தில் அது தமிழ் மக்களை தங்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்துவிடச் செய்துவிடும் என்பதைப் புரிந்துகொண்ட ஒல்லாந்தர்கள் அதை தளர்த்தினர். ஆங்கிலேயர்கள் மக்களின் மத உணர்வுகளைத் தாங்கள் மதிப்பவர்கள் போலக் காட்டிக் கொண்டு, இந்து மதத்துக்கெதிரான தடையை முழுவதுமாகத் தளர்த்தி இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட தமிழ் சாதிய அமைப்பு தகர்ந்து விடாமல் பாதுகாப்பதன் மூலம், அதாவது தமிழர்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகளை அப்படியே பேணிக் காப்பாற்றுவதன் மூலம் தங்களது காலனிய ஆட்சிக்கு எதிராக அவர்கள் கிளர்ந்தெழாதவாறு பார்த்துக் கொண்டார்கள்.

- நக்கீரன்

## இரு வாரக் கதை

# ராமசாமி காவியம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

"ஏயன் சம்சாரம் எதினாச்சும் சொல்லிச்சா ?" கறுப்பையா தன்னையே இக் கேள்விக்குள் புகுத்திக் கேட்டான், கண நேரம் மனம் எரிந்தது.

"ஒரு பயணம் வந்திட்டுப் போகச் சொல்லிச்சுங்க" மீனாச்சிதான் சொன்னாள்

கறுப்பையா ஒரு மௌனப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டான். தோட்டத்திற்கு உடனேயே போய் விட வேண்டும் என்ற ஓர் உணர்வு அவனை ஆக்கிரமித்துக் கொண்டது.

"டேரு எங்கயிங்க ஒழுங்கா போடறாங்க? தெனம்பாட்டை ஓட்டறதே பெரிசாப் போயிருச்சிங்க.." ராமசாமி தொடர்ந்தான். செவனு காலை விறைத்த படி தாயின் மடியில் திரும்பவும் படுத்துக் கொண்டதைக் கறுப்பையா பார்த்துத் தன்னை சுதாரித்துக் கொண்டு எழுந்து அடுப்பினருகில் சென்று சோறை ஒரு தரம் கிளறி, அகப்பையால் பதம் பார்த்துக் கொண்டு "வெந்திரிச்சு" என்று இறக்கி விட்டான். நெளிந்த அலுமினியத் தட்டொன்றை தீராந்தியிலிருந்து எடுத்துக் கீழே வைத்தான். "புள்ளைங்களுக்கு மொதல்ல இந்தக் கஞ்சியக் குடுங்க" என்றவன் இவர்களுக்கு என்னத்தைக் கொடுக்கலாம் என்ற யோசனையிலாழ்ந்தான். ஒரு கணம்தான். "தங்கச்சி, இதா அந்த மூலையில கொஞ்சம் தேங்காண்ண கெடக்குது. இந்த மீனை வெட்டிப் பொரிச்சுக்க, இதா வந்திடறன்" என்று தீராந்தியின் இன்னொரு மூலையிலிருந்த ஒரு துண்டிலை எடுத்து, "நானும் வர்றதா ?" என்ற ராமசாமியைப் புறக்கணித்தபடி நடந்தான். நிலவு மிகச் சரிந்து விட்டது.

"சோளக்காட்டுக்கு போவமா ? இல்லை வாய்க்கால்ல பாப்பமா ?" என்று தனக்குத் தானே கேட்டவன் "அட புளு இல்லியே" என்று திரும்ப குடிசைக்கு நடந்தான்.

"அண்ணே இதிலியே எல்லாம் பாத்துக்குவம் இப்பிடியே குந்துங்க சொல்றேன்" ராமசாமி கையைப் பிடித்து இழுத்தான்.

"யெனக்கே பத்தாதுப்பா இது. கொஞ்சம் பேசாம இரு இதோ வந்திடுக்றேன்" என்று கத்தியொன்றை எடுத்துக் கொண்டு நடந்தான். கூடப் புறப்பட்ட நாயை அதட்டிநிற்பாட்டினான். நிலவுக்குத் தெரியுமா கறுப்பையா அவசரம்? தன் பாட்டிற்கு 'இதோ சரிக்றேன்' என்று போக முயற்சித்துக் கொண்டிருந்தது. என்றாலும் கறுப்பையா தன் கண்களின் சக்தியை இருட்டின் வலுவுடன் போராடுவதாய் இடுக்கிக் கொண்டான். சொற்ப நேரத்தில் அதுவும் தேவையில்லாது போயிற்று.

"ஐயாரைக் கேட்டமா ? இவ்வளோ நாள் எதினாச்சும் கேட்டிருக்கனா? குடுப்பாங்க" என்று சொல்லிக் கொண்டான்.

கால்கள் தாமாகவே ஐயாவிடம் கொண்டு போய்விட்டன. நாய் முதலில் குரைத்து மோப்பமிட்டு இறுதியில் வாலாட்ட ஐயா இல்லை, அம்மா தான் கையில் லாந்தருடன் வெளியேவந்தாள். "அது நானுங்க" என்று குரல் கொடுத்தான்.

"கறுப்பையாவோ ?" என்று உறுதிப் படுத்திக்கொண்டு, "என்ன இந்த நேரத்தில" என்று குரல்கொடுத்தாள். "நம்ம பக்கிட்டு நேரத்தை சிந்திக்கின்ற மனித நேரத்தை சபவாக்கிக் கொண்டு கறுப்பையாவின் கைகளும் கால்களும் கோழிக்குப் பின்னால் பாவ ஆரம்பித்தன.

துரித நடையில் இடைக்கிடை 'கண்டம்' 'திஸ்ரம்' 'மிஸ்ரம்' என்ற நடை பேதங்கள். வீச்சில் கோழி கையில் 'கெக்கெக்கே ' என்று செறுமாகத் தன் பிரலாபங்களை

இந்த நெடி காற்றில் அலைந்து போய் ராசாவின் நாசியில படாமல் இருக்க வேண்டுமென்ற பிரச்சனைக்கு கறுப்பையாவின் தீர்வு இதுதான்.

சோத்துப் பானையைக் கண்கள் எட்டிப் பாக்காமலேயே ?

"அப்பொறம் சொல்லுங்க" என்றான்.

தீர்மானங்கள் எடுப்பதென்பதைக் கறுப்பையா கண்டிருக்கிறான். அம்மாவின் தீர்மானங்கள் எல்லாம் ஐயாவினதுக் கெதிர் என்பது வீட்டு நிலைமை. ஆனால் அம்மா தீர்மானம் செய்ய அதுக் கெதிரான ஐயாவின் தீர்மானமில்லாதபடியால், ராமசாமி திரும்பவேண்டியதாயிற்று.

"அவர் வரக்கேட்பம" என்று

ஆளுங்க கொஞ்சம் வந்திருக்குங்க.."

இருட்டில் லாந்தருடன் நிற்கின்ற அந்த மனுஷியில் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கின்ற உணவுப் பொருள் வகையறாக்களின் பட்டியல் கறுப்பையாவிற்கு முழுமுற்றாகத் தெரியாது. அவன் நரைத்ததலைக்கூடாய் விரல்களைக் கோதி என்னத்தைக் கேடபோமென்று மனம் நினைத்து வாய்க்குக் கட்டளையிடுமுன் வாய் தன்னாலேயே அசைகிறது.

ஐயாவுக்கும் அம்மாவுக்கும் கலண்டர், முன்ருவேலி, மாதத் தொடக்கங்கள், முடிவுகள் இந்த எல்லைக்குள் வருவன, வந்து போவன போய்விட வேண்டும்.

"இங்க பார் கறுப்பையா, இண்டைக்குத் தேதியென்ன தெரியுமோ? அரைமாசம் முடியிறதுக்குள்ள மாதச் சம்பளத்தில முக்காவாசி அரிசி, அது, இதெண்டு வேண்டிப் போடிறாய். எல்லாத்தையும் என்ன செய்யிறனி. அவருமில்லை. யாழ்ப்பாணம் போய்விட்டார். எல்லாம் பேந்து வா பாப்பம்." அம்மா லாந்தருடன் உள்ளே போய்விட்டாள்.

கறுப்பையா கொஞ்ச நேரம் நின்ற இடத்திலேயே நின்று பார்த்துவிட்டுத் திரும்பி நடக்கத் தொடங்கினான். பிறகு கொஞ்ச நேரம் நின்று ஐயாவின் குடிசையை ஒட்டியிருந்த வாழைத்தோட்டத்தைப் பார்த்துக்கொண்டான். மெல்ல அதை நோக்கிச் சென்று மிகுந்த வாதஸல்யத்துடன் வாழை மரங்களைப் பார்த்துத் திரும்பவும், நாய் அவனை நோக்கி ஓடிவரவும் சரியாக இருந்தது. செல்லத்துடன் அது தாவுவதை வரவேற்கின்ற மனநிலையில் அவன் இல்லை.

"அடச்சீ.." என்று நடந்தான். பின்னாலேயே வந்தது.

'வள்' என்று இன்னொரு நாயச சத்தம் கேடகத் திரும்பிக் கொண்டது.

நாய் திரும்பிப் போனது அவனுக்குத் தெரியாது. திரும்பவும் 'சம்சாரம்' நினைவு வந்துவிட்டது கறுப்பையாவுக்கு. தேயிலைச் செடிகளின் குளுமையும், குளிரும், மழையும், பனியும் சம்சாரத்தையொத்த பிள்ளைகள். "ஏங்க" என்று கூவி ஏங்க வைக்கின்றவள் அவள். குளுமையும், குளிரும், பனியும் மழையும், கரைந்து கரைந்து வெக்கையாக உருமாறுகின்றன. வயிறால் தலையில் நெருப்பு எரிகிறது. சிலிர்த்துக்கொண்டான்.

"வந்தாங்களே அவங்ககிட்ட ஏதினாச்சும் கேட்டிருக்கலாம், குடுப்பாங்க. இவங்க குடுக்கிறாங்க இல்லியே. என்னா ஆளுங்கப்பா அடச்சே" உதடுகள் கொஞ்சம் அசைத்தன. நடை வரவரத் தொய்ந்தது. இரண்டாவது காணி எல்லை.

"கெகக்கெக் கெக்கக்கே.." என்று கோழியொன்று பாய்வது சரிகின்ற நிலவில் ஒளிக் கீறொன்றில் பலனாகியது.

உலகுக்கு ஒப்பிக்க முயன்ற கோழிக்கு, பின்னால் அது தேவையில்லாமல் போய்விட்டது. கறுப்பையா ஓட்டமும் நடையுமாக...

"கேட்டிருக்குமோ ?" உண்மையில் அது கேட்கவில்லை. கேட்டிருந்தால ராசா (பக்கத்துக் காணிக்காரன்) எழுந்து வந்திருப்பானே ? நன்றாக இன்னும் வெட்டப்படாத காட்டின் மூலையில் சென்று தானே அதை திருத்தஞ் செய்தான்.

"கீரி கொண்டு போயிருச்சின்னு நெனச்சிக்குவாங்க" என்று சொல்லிக் கொண்டான்.

குடிசைக்குள் செவனும், மூக்கையாகவும் சமாதி. ராமசாமியும் மீனாச்சியும் மெல்லிய குரலில் அரைக்கண்களை மூடியபடி சம்பாஷணை, விளக்கு எரிந்து முடிகிற கட்டம் கறுப்பையா நுழைகிறான். "என்னாங்கண்ணே ?" ராமசாமி விழித்துக் கொண்டான்.



"இத வாட்டம்" என்று சுருக்கமாக நெருப்பை வளர்க்கத் தொடங்கினான். ராமசாமிக்குக் கேள்விகள் கேட்க வேண்டும்போலவும் இருந்தது. கேட்கமுடியாமலுமிருந்தது.

"காலல வந்து எடுக்கிச்சி" என்றான் கறுப்பையா ஒரு சமாதானமாக. நெருப்பு வளர்ந்து, சிறிய நேரத்திற்கு முன் உலகத்தைப் பார்த்து, உலாவித்திரிந்த ஒரு கோழியின் உள்ளை அணைத்து, நெடியைப் பரப்பிப் பசியைக் கிளப்பி விட்டது. ராமசாமிக்குச் சில தீர்மானங்களும் பல சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் எனின், ஒரு மௌனம் மூலம் தன் இந்தச் சூழ்நிலை தீர்மானத்தை நசுக்குவதைக் காட்டிக்கொண்டான்.

"புள்ளைங்களையும் எழுப்படவா ?"

விடிகிறது சில பேருக்கு நஷ்டத்தில்! சில பேருக்கு லாபத்தில். பல பேருக்கு சும்மா விடிகிறது. ராசாவுக்கு முதல்வகை. ராசா வளர்ந்து வருகிற ஒரு ஸ்தாபனம். அதன் அக்கவுண்டன்ட் அவன் மனைவி. தண்ணியில்லாத பிரதேசமானபடியால் எல்லாவற்றிற்கும் கவனம். ஒரு கோழியைக் காணவில்லையென்பது நேற்று அடைப்பிக்குள் விடும்போதே தெரிந்த சமாச்சாரம். கீரி கொண்டுபோயிருக்குமென்பது ஜீரணிக்கமுடியாததொன்று. எனவே அக்கவுண்டன்ட் கிட்டடியிலும், ராசா 'உலகம் முழுவதும்' தேடுவதென்று தீர்மானம் செய்து திக்குகள் பிரித்துக்கொண்டு போக...

கறுப்பையாவுக்கு மூன்றாவது வகை. ராமசாமிக்கு உலகம் இனிதான் தோன்ற வேண்டும். லாப நட்டங்கள் அல்லது சும்மா அதாவது இவை இரண்டுமற்ற சமநிலை புள்ளி. இவையெல்லாம் விபரணைகளாகத் தான் இருக்க வேண்டும். இவைகளுக்கு ஒரு காலத்தில் விபரணைகள் இருக்குமென்றால் அந்த உலகத்தில் ராமசாமி இல்லை.

"மொதல்லா நீ மாத்திரம் வந்து வேலவிசாரி. அப்பொறமா மத்ததுகளை பார்த்துக்கிருவா" என்று கறுப்பையா தீர்மானத்தை எடுத்தான். காலை மிகுந்த அழகுடன் விழித்துக் கொண்டது. சூரியக கதிர்கள் பனியுடன் ஊடல், தயாராக இருக்கின்ற பாத்திகளின் பொலிவு. மனத்துக்குத் தெம்பை அளித்தன.

"ஐயாகிட்ட போவம" என்று போகும் போது சொல்லிக் கொண்டான்.

"அட ஐயாதான் யாழ்ப்பாணம் போயிட்டாராமே. அம்மாக்கிட்ட கேட்பம்" அம்மாதான் அம்மா ஒரே வசனத்தில திருப்பி விட்டாள். தாக்கரீதியான இரண்டாவது இடம் ராசாவின் தோட்டம். எனினும் இறந்துபோன கோழியின் ஆவியை விட, ராசாவின் தெரிந்த கடுரப் போக்கு கறுப்பையாவை அந்தப் பக்கமே போகாமல் விரட்டியிருக்க வேண்டும். கறுப்பையா "டைது கரையில வெசாரிப்பமா? மொதல்ல இந்தப் பக்கிட்டுப் பாததுகக்கிட்டு அப்பொறமா அங்கிட்டுப் பாப்பம்" என்று பெலத்தே யோசித்தான் நேர்த்தியான குடிசைக்குள் ஒவ்வொன்றாகப் போய் வந்து....

யோகுவுக்கு இந்த முறை ஆட்கள் தேவை. தான் விற்ற மிளகாய் எண்ணிக்கை அவனுக்கெப்போதும் துல்லியமான பாடம். வித்தியாசம் மனத்தைக் குத்துகின்றது. "வாய்க்கால் எங்க திருத்துறாங்கள் வேச மக்கள்" என்பது முழுச்சமாதானமில்லை. இந்த முறை பலவாறாகவும் முயல்வது என்பது பிரதிக்ஞை 'பத்தாயிரங் கண்டு மிளகாய் வைப்பதென்ற இலக்குத் தப்பாமல் அடைய வேண்டுமென்ற கட்டத்தில் ராமசாமியைக் கண்டு கொண்டான்.

"வேலை செய்வன் போலான் கிடக்கு. சாப்பாடும் தந்து ஆறு ரூபா தருவன்" என்று நியமனம்.

ராமசாமி இரண்டையும் கண்டு பல டகம். "சரிங்க" என்றான்.

"நம்ம சம்சாரம் ஒண்ணும் இருக்குதுங்க நல்லாவேல செய்யும்" ஒரு நிமிட இடைவெளிக்குப் பிறகு இதையும் சேர்த்துக் சொன்னான.

"அதெல்லாம் அப்பொறமாப் பார்த்துக்குவம். மொதல்ல நீ வேலைக்கு வாறதைப் பாரு" என்ற கறுப்பையாவை யோகு மறித்தான். "ஆ வரச்சொல்லு பாப்பம்" விடிகிறது.

ராமசாமியை விட்டுவிட்டு கறுப்பையா திரும்பும்போது, கோழியின் ஆவி அவனைச் சூழ்ந்து கொண்டது. தோட்டத்துக்குள் நுழைந்து கொத்தத் தொடங்கி ராசாவின் தோட்டப் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டான். தேடுவது போல் தெரிந்த உருவங்கள் மனத்தில் வேறு பதிகிறார்களே! ஓங்கிக் கொத்தினால் போகிறார்களா ?

ராசாவுக்கு ஐம்புலன்களும் கூரான கூர். கறுப்பையாவின் நாய கோழ்க காலைக் கொறிப்பதைத் தூரத்திலேயே கண்டு கொண்டு சிலிர்த்துக் கொண்டான். "இந்த வேச மகன்ர வேல" என்று தீர்ப்பை வழங்கியவன் நேரே கறுப்பையாவிடம் ஓடி, பலவாறாக அவனை அழைத்து "என்னடா சொல்லடா என்னெய்தனீயெண்டு" என்று

(தொடர்ச்சி 19-ம் பக்கம்)

**சிறீதரன்**

# ஸ்மிதா என்கிற விஜயலட்சுமி
## அல்லது
# காதல்கோட்டை கமலி பற்றி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

காதல்கோட்டையில் கமலியாக நடித்தவர் பற்றிய இரண்டு விபரங்கள் கீழேவருவன:

1. A.ரசிகர்கள் தன்னிடம் கேட்கும் படங்களாக காதல் கோட்டைக்கு முன் அனுப்பிய படங்கள்; மாடர்னாக உடுத்தி கவர்ச்சிப் படங்கள்

(தொட்டா சிணுங்கி படத்தில் நடித்த காலம்)

B.காதல்கோட்டை படத்திற்குப் பின் தான் ரசிகர்களுக்கு அனுப்பும் படங்கள்:

தலைநிறையப் பூவைத்து மங்களகரமாக உடுத்தி குங்குமப் பொட்டுவைத்து 'புனிதமான' படங்கள்.

காரணம் காதல்கோட்டை படம் தன்னைத் 'தேவதையாக' உயர்த்தி விட்டது. இப்போது வரும், வேடங்கள் முழுக்க அத்தகையவைதான்.

2. சிவசக்தி படத்தில் இவர் ஆடிய கவர்ச்சி நடனக் காட்சிகளின் Close Up இயக்குனரால் பிற்பாடு Edit செய்யப்பட்டது. காரணமாக இயக்குனர் சொல்வது:



காதல் கோட்டையில் தேவதை மாதிரி வந்த பெண்ணை இப்படிக் காட்ட விருப்பமில்லை.

இந்த கூற்றுக்களில் நாம் காணும் அம்சங்கள் இரண்டு.

(1). வாழ்வையும் கனவையும் குழப்புவதில் சினிமாக்காரர்கள் கையாளும் சாதுரியம்.

(2). படத்தில் ஏற்கும் 'கற்பனைப் பாத்திரங்களையே' வாழ்வாகக் காட்டும் அற்புதம். இத்தகைய சாதுரியம்/ அற்புதங்களுக்குப் பின்னால் செயல்படும் தந்திரம், மனப்பான்மைதான் என்ன?

இதற்கான ஆதாரங்களை இந்த சினிமாக்காரர்கள் எங்கிருந்து எடுத்துக் கொள்கிறார்கள்?

நிலவும் சமூகத்தின் போலியான மதிப்பீடுகளில் இருந்து, பெண்ணை தெய்வமாக, தப்பினால் தாசியாகக்காணும் மதிப்பீடுகளில் இருந்து (பெண்டாட்டி போர்த்திக்கொள்ள வேணும், மற்றவர்கள் எல்லோரும் கவர்ச்சியாக இருக்க வேணும் - சாதாரண இந்தியக் குடிமகன் - காதல்கோட்டை வசனம்) எடுத்துக்கொள்கிறார்கள்.

உடம்பைப் புனிதப்படுத்துதல், போர்த்திக்கொள்ளுதல் போன்ற மதிப்பீடுகளில் இருந்து பெறுகிறார்கள். நடிப்பு ஒரு தொழில். பல்வேறு வாழ்வின முரண்களைச் சொல்லும் படைப்பியக்கத் தொழில் என்று, பெண்களைப் பொறுத்த மட்டும் இவர்களால் ஒப்புக்கொள்ள முடிவதில்லை.

இதே மதிப்பீடுகளைத்தான நடிகர் / நடிகைகளுக்குக் கையாளுகிறார்கள். நடிக்கும் போது எதுவரையிலும் போகலாம். மணந்தால் நடிப்புக்கு முழுக்கு. குடும்பவாழ்வுதான் இறுதி. நடிப்பு பெண்ணுக்குக் கேவலம். பெண்ணின் உடம்பும் கேவலம்.

போர்ணோகிராபியில் நடித்த நடிகை இத்தாலியில் பாராளுமன்ற உறுப்பினராக முடிகிறது. பண்டிட்குயினில் நிர்வாணமாக நடித்ததற்காக கணவரால் விவாகரத்துச் செய்யப்பட்டிருக்கிறார் சீமா பிஸ்வாஸ். நீலப்பட நடிகை பிரான்ஸில் மாலோவின் பிரசித்திக்காரியாக முடிகிறது. பாலியல் பலாத்காரத்திற்கு ஆளான ஓப்ரா வின்பிறி கௌரவமான தொலைக்காட்சி விற்பன்னராக முடிகிறது. டயானாவுக்கு அடுத்து மடோன்னா முக்கியமான ஆளுமையுள்ள பெண்ணாக முடிகிறது. இந்தியாவில் மாடர்ன் உடை போட்டதற்காக சீதையாக நடித்தவர் கல்லடி பட்டிருக்கிறார். அமெரிக்காவின் புகழ்வாய்ந்த எழுத்தாளர் ஹென்றிமில்லர் மடோனாவைப் பேட்டி காண்கிறார்.

படத்திலும் சரி வாழ்விலும் சரி நடிகர் / நடிகையர் எல்லோரும் வேஷம் போடுகிறார்கள். இரட்டை மதிப்பீடுகளைக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருதலைராகம் ஓடியதற்கான அதே காரணங்கள்தான் காதல் கோட்டை ஓடியதற்குமானதாக இருக்கிறது. மத்தியதரவர்க்க அபிலாஷைகள், போர்த்துக்கொள்ளும் பெண்.



கல்லூரிப்படிப்பு. மேல் வர்க்கம் போக ஆசை. மேலிருப்பதால் ஒருவகை வெறுப்பு அதன்மேல். அப்பிராணிப்பெண்.

காதல்கோட்டை கமலி, ஒருதலைராகம் நாயகி இருவரும் தோற்றம் / குணச்சித்திரம் போன்றவற்றில் பரிதாபமான, இரக்கத்துக்கு உகந்த மத்தியதர வர்க்கப் பெண்கள்.

சங்கர் ஒருதலைராகத்தில் காதலுக்கு அலைகிறார். இதில் ஹீரா எனும் ராஜஸ்தானிப் பணக்காரி அலைகிறார். அஜீத் மத்தியதரவர்க்கப் பெண்களின் கனவு நாயகன் அரசியல் பிரக்ஞையற்ற வெள்ளைக் காலர் உத்யோகஸ்தன்.

மத்தியதர வர்க்கத்தில் உலகம் அந்தர உலகம். இவர்கள் தமக்குக் கீழிருப்பவர்களை 'இன்மை'களாகக் காண்கிறார்கள். தொழிலாளர்கள் ஆட்டோ ஓட்டிகள் போன்றவர்கள் இவர்களுக்கு உதவினால் நண்பர்களாய் இருப்பார்கள். அல்லவெனில் ஒதுக்கப்படுவார்கள்.

காதல் கோட்டையில ஒரு காட்சியைப் பாருங்கள்: ராஜஸ்தானியிலிருந்து அஜீத் ஊட்டியில் இருக்கும் கமலியோடு பேசுகிறான் அந்த உன்னத காதல் எதனால் தடைப்பட்டது? தபால் தந்தி ஊழியர்களின் கூலி உயர்வுக்காகப்போடும் ஊர்வலக்கோசத்தினால். மணிவண்ணனிடம் கொடுக்கப்படும் துண்டுப்பிரசுரத்தை அவர் எவ்வளவு முகவெறுப்புடன் கசக்கி எறிகிறார்கள் பாருங்கள்.

காதல் உன்னதம்தான். அன்பு உன்னதம்தான். அது எந்த வர்க்கத்தவர்க்கு ஏற்பட்டாலும் உன்னதம்தான். சந்தேகமில்லை.

ஆனால் மத்தியதரவர்க்க உன்னதக் காதலின ஆழம் காட்டப்பட / தடைப்பட காரண கர்த்தாக்களாக, வெளியாட்களாக, சம்பந்தமற்றவர்களாக இடைஞ்சலாகக் காட்டப்படுபவர் யார்? கூலி உயர்வுக்காக ஊர்வலம் போகும் தபால் தந்தி ஊழியர். அந்த ஊழியர்களின் எத்தனையோ காதலும் அன்பும் கூலி உயர்வில் தங்கியிருப்பது இங்கு மத்திய வர்க்கத்திற்கு அலட்சியம்.

இதுதான் உன்னதங்களும், மரபும், மேன்மையும், படிப்பும், அதிகாரமும் கட்டியெழுப்பப்படும் தளம். இது ஒருவிஷச் சூழல். இந்தச் சூழலை சுஹாசினி, கமலி, அகத்தியன், காரணம் தேடும் சமூகவியலாளர்கள், சமநிலைபேணும் சமூக நல ஊழியர்கள் எல்லோரும்தான் கட்டியெழுப்புகிறார்கள்.

இது தகர்க்கப்பட வேண்டும். பெண் உடம்பில் ஏதும் புனிதமில்லை என நிறுவப்படவேண்டும். ஷப்னா ஆஸ்மி புகழ் பெற்ற நடிகை, அறிவாளி, இடதுசாரி அரசியலாளர். ஒரு பாகிஸ்தானிப்படத்தில் ஒரு ஆங்கிலேயரோடும், Fire எனும் இந்தோ கனடியப் படத்தில் சமப்பாலுறவாளராகவும் நடித்திருக்கிறார். அவரை எவரும் புனிதம் / தாசி வேடம் காட்டி ஏமாற்ற முடியாது. ஆளுமை உள்ளவர்களை ஏமாற்ற முடியாது.

அந்த ஆளுமையை நிறுவப் பெண் பிரம்மைகளை உடைக்க வேண்டும்.

தமது மரபான செல்வாக்கு, அதிகாரம் போன்றவற்றின் மூலம் தம் கடந்த காலத்தை மறுத்து வேஷம் போடுபவர்கள் ஆபத்தானவர்கள். பெரும்பாலான தமிழ்/இந்திய நடிகர்/நடிகையர் அவ்வாறானவர்களே.

தற்கொலை காம்யூவுக்கு 'தத்துவப்பிரச்சினை', ஜப்பானிய தத்துவமரபில தற்கொலை மீட்சி. யாழ்ப்பாணத்தில் தற்கொலைக் கால காரணங்களை ஆய்வுக்குட்படுத்தினார் தயா சோமசுந்தரம். மிஷேல் பூக்கோ தாயைக் கொலைசெய்த சிறுவனைக் குறித்த ஆய்வை சிறை / தண்டனை / ஒழுக்கம் / மரபு என எடுத்துச் செல்கிறார்.

வழக்கறிஞர் அருள்மொழி மிகுந்த ஆவேசத்துடன் தார்மீகக் கோபம் கொள்கிறார். அவர் தீர்ப்புக்கள் வழங்கவில்லை. பிறர் வாழ்வைச் சுட்டி தம் வாழ்வைப் பீடத்தில் ஏற்றிக் கொள்பவர்கள் போன்றதல்ல அவரது அணுகுமுறை.

ஸ்மிதா தேவதையாக முடியாமல் மயிரிழையில் உயிர்துறந்தவர். கமலி மயிரிழையில் கேவலப்படாது தப்பிய தேவதை. இதுவே சினிமா உலகினதும் நிலவும் மரபுவழிச் சமூகத்தினதும் இரட்டைமுகம். இரண்டு நிலைகளையும் ஒரே அடிப்படைதான் தீர்மானிக்கிறது. பெண்ணின் உடம்பு/ பண்டம் எனும் இரண்டக நிலைதான் அது. இதை எதிர்த்து நிற்க ஆளுமைகளாக பெண்களின் இடம் அமையவேண்டும். இது தொடர் பிரச்சனை. இப்போதைக்கு இத்தகைய உதாரணங்கள் ஷப்னா ஆஸ்மி, மடோனா போன்றவர்கள்தான்.

> ஸ்மிதா தேவதையாக முடியாமல் மயிரிழையில் உயிர்துறந்தவர். கமலி மயிரிழையில் கேவலப்படாது தப்பிய தேவதை. இதுவே சினிமா உலகினதும் நிலவும் மரபுவழிச் சமூகத்தினதும் இரட்டைமுகம். இரண்டு நிலைகளையும் ஒரே அடிப்படைதான் தீர்மானிக்கிறது. பெண்ணின் உடம்பு / பண்டம் எனும் இரண்டக நிலைதான் அது. இதை எதிர்த்து நிற்க ஆளுமைகளாக பெண்களின் இடம் அமையவேண்டும்.

எந்த மரணத்தைப் போலவுமே ஸ்மிதாவின் மரணமும் ஆழ்ந்த கேள்விகளுக்கும் துக்கத்திற்கும் கௌரவத்திற்கும் உரியது.

அந்தக் கௌரவத்தை சக மத்தியதரவர்க்க நடிகையரும், நடிகர்களும் அவர் வாழ்ந்த சமூகமும் அவருக்குத்தரவில்லை. தர வேண்டும். நாம் அந்தக் கௌரவத்தை அவரது நினைவுகளுக்குத் தருவோம்.

யமுனா ராஜேந்திரன்

Tamileelam Archive

# நினைவுகள் நினைவுகள் நினைவுகள்

## உனது பேனா வலிமையானது

ஆசைத்தம்பி, அபிநயன் போன்ற புனைபெயர்களில் உள்ளதை உள்ளபடி கூறும் வீரனாக முரசில் வலம் வந்து எமது இதயங்களில் எல்லாம் நீங்கா இடம் பிடித்துக்கொண்ட திருவாளர் கந்தையா கஜேந்திரனின் மரணச்செய்தி எம்மையெல்லாம் மிகுந்த துயரில் ஆழ்த்தியுள்ளது

பேரென்ன, ஊரென்ன, நிறம் என்ன என்று தெரியாமலே பத்திரிகை மூலம் உறவாடி, எம்மை எல்லாம் இடையில் தவிக்கவிட்டுப் போனதென்ன?

உன் பேனாமுனைக்கு துப்பாக்கிமுனைதான் பதிலானதோ? இல்லை

உன் பேனா முனை துப்பாக்கி முனையை விட வலிமையானது என்பதை காலம் சொல்லும்.

புத்தியை தீட்ட மறந்த மூடர் உன்னை துப்பாக்கியைத் தீட்டி அழித்தனரோ?

இவ் இளவயதிலேயே பத்திரிகைத் துறையில் சிறந்த பணியாற்றி அமரரான இவருக்கும் இவருடன் பலியான கந்தையா பேரின்பநாதனுக்கும் எமது இதயபூர்வமான அஞ்சலியை ஈழமுரசு மூலம் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு,
அபிமான வாசகர்

## கண்ணீர் அஞ்சலி

விடுதலைக்காய் பணிபுரிந்து நயவஞ்சகர்களின் துப்பாக்கிக்கு பலியாகிவிட்ட எமது இரு நண்பர்களுக்கும் GENOVA, ITALY தமிழ் மக்கள் சார்பாகவும் எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

நாதன், கஜேந்திரன் அவர்களுக்கு,

அமைப்பின் சொல்லுக்கு அயராது உழைத்தவர்.
தான் என்ற ஆணவத்தை அடியோடு வெறுத்தவர்,
எமை வளர்த்து தனைமறந்து பகைவிரட்டி நின்றவர்.
வஞ்சகர்களின் சதியின் வலைக்குள் இரையாகிப் போனவர்

இதை நினைக்கும் போதினிலே எமையழைக்கும் நித்திலமே.

GENOVA, ITALY தமிழ் மக்கள்

## அவர் பணி நாம் தொடர்வோம்

விடுதலை வேட்கை கொண்டு
புறப்படும் வீரர்களே
அன்னிய மண்ணதனில்
விதையாக வீழ்ந்தீரே,

செங்களம் ஆடி நிற்கும்
களவீர மைந்தருக்கும்
படை வழி தனை நடத்தும் தலைவனுக்கும்
தோள் கொடுத்து உதவினீரே!

பேனா "மை" கொண்டு
படை வழி நடத்தியவனை
பாதி வழி தன்னில்
பாவியர் அழித்ததேனோ?

செல்வங்கள் சேர்த்த பலர்
சொகுசாக வாழ்கையிலே
மண்ணதில் பற்றுக்கொண்டு
மாண்டுபோன மர்மமென்ன?

விடுதலை வேட்கை கொண்டு
எழுந்தவர் மடிந்ததில்லை - தமிழீழ
இலட்சிய பற்றுக் கொண்டோர்
அழிந்ததாய் வரலாறில்லை

அழுது நாம் புலம்பவில்லை
கண்ணீரும் விடவில்லை - நாளை
வீறு கொண்டெழுந்து
அவர் பணி நாம் தொடர்வோம்
இது உறுதி.

நயினை கேசவன்
சௌத்தோல், லண்டன்.

## "தீயினில் எரியாத தீபங்களே எம் தேசத்தில் நிலையான வேதங்களே மண்ணில் நிலையான முத்துக்களே நாம் மாதவம் செய்து பெற்ற சொத்துக்களே"

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இனவாத அரசின் ஆதிக்கக் கரங்கள் இன்று புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பாயத்தொடங்கியுள்ளன. இத்தீய சக்திகளின் சதி வேட்கையால் எமது தாயக விடுதலைக்கு முக்கிய பங்காற்றிய நாதன், கஜன் ஆகிய இருவரது அகலா இழப்பும் தமிழர் நெஞ்சங்களில் ஆறா வடுக்களை ஏற்படுத்தியுள்ளன. எப்போதும் தாய் மண்ணின் விடுதலையில் பற்றுக் கொண்டு தன்னை அர்ப்பணித்து பாரிய சர்வதேச நிதிப் பொறுப்பாளனாய்த் திகழ்ந்த இனிய பண்பாளன் நாதன். ஈழ முரசுப் பத்திரிகை வாயிலாக எமது சமுதாயத்தில் புரையோடிப்போன பிற்போக்குத்தனங்களை தன் பேனா முனையால் கிள்ளி எறிந்து வலிமையான விமர்சனங்களையும் கருத்துக்களையும் முன்வைத்து போராட்டத்திற்கு வலிமையூட்டியவர் கஜன். இந்த உன்னதமான ஆற்றல்வாதிகள் இருவரையும் அழிப்பதன் மூலம் எமது போராட்டத்தை நலிவடையச் செய்யும் இச் செயல், நிலை பெறப்போவதில்லை. இன்று நாமிழந்து நிற்கும் இவ்விருவரது இலட்சியப் பணி அவர்களை எம் நெஞ்சில் சுமந்து... தொடரும்... வளரும்...

எமது சோதியா நடனக்கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வ உதவிகளையும், உள்ளன்போடு மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டியும் வந்த கஜன், நாதனின் மரணச் செய்தியால் துயருற்று எங்கள் நெஞ்சம் உருக்கும் கண்ணீரை அவ்விரு தீரத் தியாகிகளுக்கு காணிக்கையாக அர்ப்பணிக்கின்றோம்.

சோதியா கலைக்கல்லூரி
ஆசிரியையும் மாணவிகளும்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## எழுத்தில் வரா காயங்கள்

புலம்பெயர் மண்ணில்
காட்டாற்று வெள்ளமாய்
கால்போன போக்கெல்லாம்
ஓடுகின்ற மனங்களை
ஆசைத்தம்பியாய் வந்து
விடியல் குளம் நோக்கி
அணைகட்டிய கரங்கள்
ஐயா! கஜன்
உம்முடன்.....
அந்நியமண்வரையே வந்த
ஆதிக்கக் கரங்களுக்கு
அப்பழுக்கற்ற.....
சர்வதேச நிதிக்கரம்
நாதனையுமா...
விழிகளால்
வெளிவந்து....
விழுந்து விடுமோ
இதயமே குமுறுகிறது
வார்த்தைகளை
கருத்தரிக்க
பேனாக்கள் மறுக்கிறது
கொடியதுயரமிது
எதையுமே
எழுதவும் முடியாமல்
எழுதாமல்
இருக்கவும் முடியாமல்
என்னதுயரமிது
மன்னித்து விடுங்கள்
இப்போதைக்கு
எல்லோரையும் போல....
என்னாலும்....
அழத்தான் முடிகிறது.

"நிலாவெளி கைலை"

## உங்களால் முடியும்...

நான் இல்லாவிட்டாலும் ஈழமுரசு தொடர்ந்து வெளிவரவேண்டுமென்ற ஆசிரியர் கஜனின் தீர்க்க தரிசனமான முன்னேற்பாட்டின்படி சின்ன தடங்கலுமின்றி ஈழமுரசு வருவது சோகத்திலும் ஒரு சிறிய ஆறுதலை தருகிறது. ஆசைத்தம்பிக்குரிய அந்தப்பக்கம் மட்டும் வெறுமையாய் தொடர்ந்து விடப்படுவது ஆழ்ந்த வேதனையைத் தருகிறது. கிராமத்து வாசனையில் சிந்திக்க வைத்த அந்த பேனா கையேற்கப்பட்டு அந்த கிராமத்து காற்றைசுவாசிக்க வேண்டும். உங்களால் முடியும். ஏனெனில் அவர் இறுதியில் எழுதிய தலையங்கம் "வாராய்.... வாராய்... போகுமிடம் வெகுதூரமில்லை" ஆம் அவர் உங்களுடனே...

இவன்

நிலாவெளி கைலை
கிறினி, பிரான்ஸ்.

## சவாலை முறியடியுங்கள்

வணக்கம்!

நீங்கள் அனுப்பிய ஈழமுரசு கிடைக்கப்பெற்றேன். நன்றி. அதை வாசித்தவுடன் பத்திரிகை கிடைத்த சந்தோசம் இல்லாமல் போனது.

ஈழமுரசின் ஆசிரியரும் நாட்டுப் பற்றாளருமான கஜனண்ணை சிறிலங்கா அரசின் கோரப் பசிக்கு பலியானதை நினைத்து நினைத்து கவலைப்பட்டேன். ஈழமுரசு தொடங்கிய காலம் தொட்டு அதன் வாசகராக நான் இருக்கின்றேன். ஒரு நாட்டின் விடுதலைக்கு பத்திரிகைகள் என்ன செய்ய வேண்டும் என்பதை மிகத் தெளிவாக உணர்ந்து புலம் பெயர்ந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களை போராட்டத்துடன் இணைக்கும் ஒரு ஊடகமாகவும் செயலாற்றி வந்த இந்த ஈழமுரசின் வளர்ச்சியை விரும்பாத சிறிலங்கா அரசின் கைக்கூலிகளின் இரத்த பசிக்கு பத்திரிகை ஆசிரியர். அடுத்து ஒரு நாட்டின் விடுதலையை நேசித்தவர் என்ற படியாலும் கஜனண்ணையை பழி வாங்கி விட்டனர். குறுகிய காலத்திற்குள் பல மக்களின் ஆதரவை பெற்ற ஈழமுரசு பத்திரிகையின் வழிநடத்தலை அழிப்பதன் மூலம் பத்திரிகையை முற்று முழுவதாக அழித்து போராட்டத்தை மழுங்கச் செய்யும் நோக்குடனேயே இந்தப் படு கொலையைச் செய்திருப்பார்கள். எனவே இதை ஓர் சவாலாக எடுத்து ஈழமுரசு எந்தவிதமான பின்னடைவையும் சந்திக்காமல் வெற்றி நடை போடவேண்டும் என்று ஈழமுரசின் ஒரு வாசகன் என்ற ரீதியில் விரும்புகிறேன். இறுதியாக கஜனண்ணையின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தித்துக் கொண்டு முடிக்கிறேன். உங்கள் உதவிக்கு நன்றி! அடுத்த இதழை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்.

இப்படிக்கு, இ. அன்பு

## தியாக தீபங்களுக்கு எமது இதய அஞ்சலி

எப்போதும் தமிழ் மக்களின் தரமான அபிமானப் பத்திரிகையாக ஈழமுரசை வாராவாரம் முழங்கவைத்த ஆசிரியர் க. கஜேந்திரன் அவர்களினதும் விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் பேரின்பநாதனினதும் கொலைக்குப் பொறுப்பானவர்களை, மிக வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நாம் பாதுகாப்புத் தேடி புலம்பெயர்ந்த நாடு ஒன்றில் நடைபெற்ற இவ் வன்செயலை எண்ணி மிகவும் அதிர்ச்சியும், மனக் கவலையும் அடையும்வேளை, உரிய முறையில் பிரான்சு அரசாங்கம் கொலையாளிகளை மக்களுக்கு அடையாளம் காட்டும் எனவும் நம்புகிறோம்.

ஆசிரியர் கஜேந்திரனின் இழப்பினால் துயருறும் ஈழமுரசு நிர்வாகத்தினருக்கும் மற்றும் இருவரினது உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இருவரினதும் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

வளர்க ஈழமுரசு
வாழ்க அதன் தமிழ்த்தொண்டு

இப்படிக்கு
என்றும் அன்புடன் அபிமான வாசகன்
நாவுரைவை ச.சிவகுமார்

# தூதுசெல்லும் வண்ணக் கிளியே... தூது வந்த கதையை சொல்வாயோ!

**யாரோடு நோவோம்!**
**யார்க் கெடுத்துரைப்போம்!!**
**ஆ... உனக்குத் தமிழுணர்வு**
**இல்லையானால்..**

அட... சீ. என்னது! நான் மார்கழி பிறக்கப் போகுதெண்டாப்போல திருவெம்பாவைப் பாட்டுக்களை கொஞ்சம் உருப்போட்டுப் பழகிப் பாப்பமெண்டு தொடங்க.. அது வேறொரு ரூட்டில எல்லோ போகப்பாக்குது.

என்ன நைன்ரிக்கு.. அறளை பெந்துபோச்சுதாக்கும்! எண்டு நீங்கள நினைக்கிறியள்போல. பின்ன என்ன எலும்புக் குருத்துக்குள்ளால போற இந்தக் குளிருக்கை விடியப்புறம் எழும்பி குளிச்சு... சங்கு- சேமக்கலத்தோடை றோட்டு றோட்டாய் போய் 'பள்ளி எழு.. எம் பாவாய். பள்ளி... எழு... எம் பாவாய்' எண்டு பசனை பாட முடியுமோ? அதுக்கு இந்த ஊரும் ஒத்துவருமோ? எண்டு நீங்கள் என்னோடை வரிஞ்சு கட்டிக்கொண்டு வாறது எனக்கு விளங்காமல் இல்லைக் கண்டியளோ!

சரி... சரி.. அது கிடக்கட்டும். நான் எதுக்கு 'யாரோடு நோவோம் யார்க் கெடுத்துரைப்போம்..' எண்டு பாடின்னாமெண்டால் இஞ்சை எங்களில சிலர் செய்யிற காரியங்களைப் பாக்கேக்க நெஞ்சு பொறுக்கேலாமத்தான். அங்கை ஆமிக்காரராலை நாட்டில இருக்கேலாதெண்டு காணியைப் பூமியை வித்து அறாவட்டிக்கும் எடுத்து ஒரு மாதிரி அவனிட்டை, இவனிட்டை பல்லுக் காட்டி இங்கை வந்து சேந்தம்.

சேந்தாப்பிறகு உண்மை பத்து வீதம்! கதை தொண்ணூறு வீதமெண்ட கணக்கில கேசுகளை எழுதி அகதிக் காட்டுகளும் எடுத்துப் போட்டம். இப்ப என்னடாவெண்டா ஊரைப் பத்தியே எங்களில பலருக்கு நினைப்பு அறுந்துபோச்சு.

"அடைக்கலங் குருவிகளும் தன்னட்டை காக்கைளஞ்சு போன் இருக்கிறதெண்ட நினைப்புப்" போலை பலதுகள் திரியுதுகள். உன்னுக்கு ஒண்டுமில்லை. ஆனா வெறும் பம்மாத்துக்கு சோமஞ்சோடு போத்துக் கொண்டு திரியிற அவ்வளவு நல்லதில்லைப் பாருங்கோ!

எங்கடை நாட்டிலை வன்னிப் பக்குமாய் போன சனம் அவ்வளந் தண்ணிக்கே ஆலாய்ப் பறந்து திரியுதுகள். யாழ்ப்பாணத்துக்க ஆப்பிட்டுக் கொண்டதுகளுக்கு கொட்டாவி விடுகிறதுக்கும் தங்களிட்டைப் பெமிசன் கேக்க வேணுமெண்டது போல ஆமிக்காரங்கள் வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டிருக்கிறாங்கள்.

## ஆருக்குச் சொல்லி அழ?

இஞ்ச.. சிலர் என்னடாவெண்டா அங்கை எங்கட சனத்தைக் கொல்லுற அரசாங்கத்தின்ரை பிரதிநிதியளுக்கு வரவேற்புக குடுத்து முதுகு சொறிஞ்சுகொண்டிருக்கினம். ஆ-ஆ— என்ன உங்கட கண்ணுகள் அகல விரியுது. உங்களுக்கு அப்பம் எண்டு சொன்னாலும் விளங்காது எல்லாத்தையும் புட்டுப் புட்டுக் காட்ட வேணும் கண்டியளோ!

உந்த விண்ணானங்களைச் சொல்லாட்டி விக்கிரமாதித்தன் கதையில வாற சாபம் போல எனக்கும் மண்டை வெடிச்சிடும் போலவும் கிடக்குது. அஃதாகப்பட்டது, கிட்டடியில ஒரு டான்சுப் புறோகிராம் நடந்தது. நானும் அங்கை போனன் எண்டு வையுங்கோவன்.

நல்ல சனம் வந்திருந்தது. இடம் கிடைக்காம சிலர் படியளிலை தவறணையில இருந்ததுபோல இருந்திச்சினம். றோசுப் பவுடரில விழுந்தெழும்பின கோலத்தோட நல்லூர்ச் சப்பறத்துக்குச சோடிசசது மாதிரி நகையளை அடுக்கிக்கொண்டு தாய்க்குலத்தினரும் வலம் வந்து கொண்டிருந்திச்சினம். கலை நிகழ்ச்சி ஒண்டு பாக்க வாறதுக்கு எதுக்கு இவ்வளவு அலங்காரமெண்டு எனக்கு விளங்கேல்லச் சாமி!

புறோகிராம் தொடங்கின உடனை முதலில சலங்கைப் பூசை நடந்திச்க! அஃதாகப்பட்டது... எந்த ஒரு விக்கினமும் இல்லாம டான்சு முடிய வேணுமெண்டு நடராசப் பெருமானை வேண்டி பூசை வைக்கிறதுதான் அது. பொதுவா குடும்பத்திலை உள்ளவைதான் அப்ப மேடேல நிக்கிறது வழக்கம். ஆனா இந்த நிகழ்ச்சியிலை மட்டும் சிறீலங்கா எம்பசிடா தம்பதி சமேதரராய் காட்சியளிச்சிச்சினம்.

தங்கட வீட்டு நன்மை, தீமையளுக்கு ஆரும் ஆரையும் கூப்பிடலாம், செம்பு தண்ணியும் குடுக்கலாம்; அது அவரவற்றை தனி மனிசச் சுதந்திரம் எண்டு எனக்கும் விளங்காமலில்லை. ஆனா உந்த எம்பசிக்காறர்தான் நவாலி சேதக் கோயிலிலை, நந்தாவில் அம்மானாச்சியின்ர வாசலிலை, நாகர் கோயில் பள்ளிக்கூடத்திலை எல்லாம் பொம்பர்கள் குண்டுமாரி பொழிஞ்சு குஞ்சு, குருமன் எல்லாத்தையும் சாக்கொண்ட விசயத்தை மூடி மறைச்சு கண்கெட்டதனமா கதையளை அவிட்டு விட்டதுமில்லாம, தங்கட பிளேனுகள் அப்பிடியொரு குண்டையும் போடேல்ல எண்டும் முதலிலை கதை கட்டினதை எங்கடை சாவுறுதியிலயும் மறக்கேலுமே.

இதை நான் ஒரு சாமாதிருக்குத்தான் சொல்லுறன். அவை இன்னும் எத்தினையோ ஊருப்பட்ட திருகுதாளங்களெல்லாம் செய்து கொண்டிருக்கினம் கண்டியளோ!

இந்தக் காட்சியைக் கண்ட உடனை எனக்கு உலகமே சுத்திறதுபோல இருந்திச்சு மெல்ல ஒரு ஓரமாய் இருந்திட்டன். ஆரிலையும் எனக்குத் தனிப்பட்ட கோவம் எதுவும் இல்லைப் பாருங்கோ! ஆனா ரத்தத்தைத் தண்ணியாய் ஊத்தி விடுதலையை விளைவிக்கிற இனத்திலயிருந்து வந்த எங்களுக்கும் சில தார்மீகக் கடமையள் கண்டிப்பாய் இருக்குதெண்டது அடியேனின்ர தாழ்மையான அபிப்பிராயம்.

டான்சும் துவங்கிச்சு சதிஸ்வரம்... வருணம்... தில்லானா எண்டு வழமையா எல்லா புறோகிராமுகளிலையும் நடக்கிறதுகள் நடந்திச்சு. எனக்கு அப்ப கடுக்கண்டு விட்ட பருவத்திலை ஒருநாள் புளியடி வைரவ கோயில் திருவிழாவிலை சாமத்திலை நடந்த சின்னமேளக் கச்சேரி பாக்கப் போனதுக்காக சின்னம்மானிட்டை கிளுவங்கம்பு துலையத்துலைய சாத்துப்படி வேண்டினதெல்லாம் ஞாபகத்துக்கு வந்திச்சுது.

கொக்குவில் பாறுவதி செற்றின்ர சின்னமேளக் கச்சேரியிலை 'ஆகாயப் பந்தலிலே பொன்னூஞ்சல் ஆடுவோமா.. ஊர்கோலம் போவோமா..' எண்ட பாட்டுக்கு அவையள் ஆடுற ஆட்டத்தை விடிய விடிய வீணி வடிச்சுக்கொண்டு எத்தின சனம் பாத்து ரசிச்சிருக்குதுகள். இப்பவெல்லோ டிசுகோ... கிசுக்கோ எண்டு எல்லாம் வந்திருக்கு.

இங்கின நடக்கிற புறோகிறாமுகளில பெரும் கலாரசிகருகள் பாக்க வருகினமோ இல்லையோ! கடுக்கன், கம்மல், தும்பு வைச்சுத் தச்ச டவுசர் சகிதம் குட்டிக் கலாரசிகருகள் வந்திடுவினம். முட்டாசுக் கடையில மொய்க்கிற இலையானுகள் போலை இவையிட பார்வை எப்பவும் சுடிதார், பஞ்சாபி, அரைத்தாவணியள் மேலைதான்.

பொடியளும் இப்ப நல்லா வளர்ச்சியடைஞ்சிட்டாங்கள் போலை. ஒவ்வொருத்தரின்ர பொக்கற்றுக் குளவையும் ஹான்ட் ரெலிபோனும் இருக்கிறதை உண்ணானை நான் கண்டன். புறோகிறாம் நடக்கிறவேளை அதுகும் கிணுகிணுக்க, சனமும் திரும்பிப் பாக்க பெருமை பிடிபடாமல் அவை கதைச்சினம்.

உண்மையிலேயே அந்த நேரங்களிலை போன் வருகிறதோ அல்லது ஏதும் பொத்தானை கித்தானை அமத்தி சும்மா சத்தம் வரப் பண்ணுறாங்களோ எனக்கெண்டா ஒரு தாசமும் விளங்கேல்லை. வயதுபோன காலத்திலை எனக்கெதுக்கு இந்த ஊர்த்துளாவாரங்கள்.

சொன்னாப்போலை ஒண்டச் சொல்ல மறந்திட்டன். இந்த நாட்டியக் கச்சேரியள், சங்கீத நிகழ்ச்சியள் வைக்கேக்க முதலிலை மண்ணுக்காக மாணிச்ச மாவீரர்களுக்கு ஒரு ரெண்டு நிமிசமாவது மௌன அஞ்சலி செய்யப் பழக வேணும். அதில்லாம சும்மா வெறுமனே பஞ்சபாண்டவரின்ர துயர் துடைக்க கண்ணா வருவாயோ..? வருவாயோ..? எண்டு உருப்போடுறதுக்கு முன்னாலை இதையும் கொஞ்சம் கவனமெடுத்தாத்தான் எங்கடை நெஞ்சுக் கூட்டுக்கையும் கொஞ்சம் ஈரமிருக்குமுங்கோ! என்ன நான் சொல்லுறது பிழையோ?

**அருமைத்தம்பி**

(16ம் பக்கத் தொடர்ச்சி)

## ராமசாமி...

விசாரிக்க, அம்மா முதலில் தன் தலையை வெளியே நீட்டினாள். பிறகு வெளியே வந்தாள்.

"இங்கே ராசா, பொறு, பொறு. என்ன நடந்தது?"

மரண விசாரணையில இது கொலைதானென்பது ராசாவின் தீர்ப்பு.

கறுப்பையா, "கீரி கொத்திப் போட்டதை, கீரியைத் தொரத்திப்பிட்டு எடுத்திக் கிட்டுப்போனதாம்" சாதித்துக் கொண்டான. "இருட்டில் கோழி யாருதுன்னு தெரியல்லீங்க" தருக்க பூர்வமான ஒரு கோட்டையை எழுப்பினான். இதற்கு மறுமொழி சொல்வது ராசாவுக்குக் கஷ்டம். ராசாவுக்கு வாயால் கோவம் வரமுடியாத போது, கைகளினாலும் கால்களினாலும் வரப் பண்ணிக்கொள்ளுவான். "இல்லீங்க ஐயா! அடிக்காதீங்க!" கறுப்பையாவின் ஓலம் வானை எட்டுகிறது. கூட்டமும் சேர்கிறது.

"அவனை விட்டப்பா ராசா" அம்மா தீர்மானமாகச் சொல்ல ஒருவாறு நிற்கிறது. இப்போதுதான் சனக்கூட்டமும் என்ன நடந்தது என்று விசாரித்துக் கொள்கிறது. "கள்ளபடைகள்" என்பது இறுதித் தீர்ப்பு. ஒரு சோறு பதமானால் _ ஒரு பானை சோத்துக்குத்தான பானைகளுக்கல்ல . இதிலும் ஒரு சிக்கலிருக்கிறது. பானைகருள பானைகள் இருக்க முடியுமா?

கறுப்பையா புழுதியைத் துடைத்து விட்டுச் சிராய்ப்புகளில் அப்பிக்கொண்டிருந்த மண்ணின் துகள்களை, உலகத்துத் துன்பமெல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வந்தவன் ஒருவனின் உறுதியோடு துடைத்துக் கொண்டான். துகள்கள், மனத்தின் துகள்களின் புறத் தோற்றப்பாடு. சிதறவுஞ் செய்கின்றன. ரத்தமும் சிந்துகின்றன.

ராமசாமிக்கு வேலை செய்வதென்பது, அதிலும் தோட்டம் கொத்துவதென்பது கஷ்டமான தல்லவென்றாலும், 'வெத்தலை' இல்லாதபடியால் மந்த கதியிலேயே இயங்கிக் கொண்டிருந்தான். சாப்பாடு என்பது கடந்த ஒரு வருஷமாக மரீசமானாக போய்விட்ட நிலையில் உயிருக்கும், உடலுக்கும் உள்ள பந்தம் மிக இறுக்கமாக இல்லாதபோனால், இந்த வெய்யிலில் இட்டடிக் கொத்த முடியுமா? சூரியன் வானில் ஏறி, ஏறி இறங்கவுந் தொடங்கியபோது யோகு அவனைக் கூப்பிட்டாள். "இந்தா சாப்பிடு" "சோறு" என்று ராமசாமி சொல்லிக் கொண்டான். திரும்பவும் 'சோறு' 'சோறு' தனியயே அவனால் சாப்பிட முடியுமா?

"அன்னன்னிக்கே சம்பளங் குடுத்தீங்கன்னா நல்லதுங்க, சம்சாரம் ஒண்ணும், ரெண்டு புள்ளைங்களும் இருக்குதுங்க."

"அதெல்லாம் பாப்பம் பிறகு. முதல்ல வேலையைச் செய்". ராமசாமி அமுவாசிச் சோற்றைக் கட்டிக் கொண்டான். யோகுவுக்கு இந்த நிலவரங்களெல்லாம் தெரியும். அரைக்கண்ணால் பார்த்துக் கொள்ளுவான்.

ராமசாமி 'வெற்றிலை' யுங் கிடைத்தபுளுகில் மண் கெதியில் சீர்ப்படுக் கொள்ளத் தொடங்கியது. நிற்பாட்டுகிற நேரத்துக்கு இங்கே சங்கு இருக்கிறதா? ராமசாமி நிற்பது சம்பளத்துக் கென்பது மட்டுமல்ல, பேசியதில் எவ்வளவு கொடுத்தால்தான் நாளை திரும்பவும் வருவான் என்பதுவும் யோகுவுக்குத் தெரியும். பிழையில்லை ஆள். "இந்தா மூண்டு ருவா இருக்கு, மிச்சத்தை நாளைக்கு வேண்டு."

ராமசாமி முதலில் அதை வாங்கிக் கொண்டுதான் தொடர்ந்தான். "ரெண்டு புள்ளைங்க இருக்குங்க. பாத்துக் குடுங்க ஐயா"

"இங்கே நாளைக்கு வா எண்டிரன். பேந்தென்ன. போயிட்டு வா"

ராமசாமிக்கு நம்பிக்கை மிகவுண்டு. இல்லாது போனால், அவனுயிர் உடலில் நிலைத்திருக்குமா?

மீனாச்சிக்குக் கறுப்பையாவும், ராமசாமியும் வருவது தெரிந்தது. செவனும் மூக்கையாவும் சுருண்டு கிடந்தார்கள். மீனாச்சி சோர்வின் எல்லையில் அவளும் சுருண்டு சரியக்கூடும். கறுப்பையா கோபங் கொள்ளக் கூடிய சீவன். "சே, அறிவு கெட்ட நாயி" என்று ஒரு கல்லைத் தூக்கி எறிந்தான். நிச்சயம் அதுதான் இல்லாவிட்டால் கறுப்பையா தன்னோடு விளையாடுகிறான் என்று ஒரு கணம் பதுங்கி விட்டுத் திரும்பவும் வருமா?

"அடிச்சுப்பிட்டானுங்க கீரி இழுத்துக்கிட்டு போயிருந்திச்சின்னா யாரை அடிப்பாங்க? நாசமாப்போவ" கறுப்பையா திட்டத் திட்ட ராமசாமிக்கு மெல்ல மெல்ல இதுவரை தெரியாமலிருந்த இந்த வயிற்று நெருப்பை வளர்க்கிற அசுரனின் உருவம் புரிவது போல் இருந்தது.

"ஆறு ரூபாயில்ல தர்ரேன்னாங்க? மூணு ரூபாதான் குடுத்தாங்க. மிச்சம் நாளைக்குத் தர்றாங்களாம்"

"சில ஆளுங்க குடுக்காமலேயே வுட்டுருவாங்க"

"அதெப்புடிங்க?" ராமசாமி வியர்வையை வழித்துக் கொண்டான். வயிறு இன்னும் எரியத் தொடங்கியது. "அநியாயமால்ல இருக்கிறது"

ராமசாமி சரித்திரத்துக்குத் தெரியாத இந்த ராமசாமி, தான் கொண்டுவந்த சோத்து மூட்டையை மீனாச்சி பக்கம் எறிந்து 'அப்பாடி' என்று நிலத்தில் குந்த, மீனாச்சி, செவனு, மூக்கையா இவர்களை எழுப்ப, கறுப்பையா தன் மனைவியை நினைத்துக்கொண்டே துண்டிலை எடுத்துக்கொண்டு வெளியே போக, சரித்திரம் தேங்கியே நிற்கிது.

(முற்றும்)

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

திர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

ஸ்தாபக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி. சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:

**EELAMURASU**
**22, Rue Perdonnet,**
**75010 Paris, France**

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
Tel: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
NIRMALARAJAN
Tel: 041333896

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ் மக்கள் கடை
Tel: 01-271 7374
தோன் - 077 695582

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527

நெதர்லாந்து:
தாஜுயஸ்தன்
Tel: 0223 680462

லாச்சப்பலில்
சகலவிதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
Tel: 01 42 09 60 64

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## தரணி...

குந்து வருகைதந்திருந்த தமிழர் தேசிய இயக்கத்தலைவர் திரு நெடுமாறன் அவர்களும், சுவீடன் உப்சலா பல்கலைக்கழக பேராசிரியர் பீட்டர் சார்க் அவர்களும் சிறப்பு பேச்சாளர்களாக கலந்து கொண்டனர்.

சுவிசில் நடைபெற்ற மாவீரர் நாள் எழுச்சிவிழாவில் பாட்டாளிமக்கள்கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் தனது பாரியாருடனும், பாட்டாளி மக்கள் கட்சி பொதுச் செயலாளர் ஏழுமலை அவர்களுடனும் கலந்துகொண்டார்.

ஜேர்மனியில் நடைபெற்ற மாவீரர்நாள் எழுச்சி விழாவில் தமிழகத்திலிருந்து வருகைதந்திருந்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு நெடுமாறன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

என்றுமில்லாதவாறு மக்கள் மாவீரர் எழுச்சி விழாக்களில் பெருந்தொகையாக வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## பாரிஸ்...

ஏராளமான மக்கள் எழுந்து வந்து தங்களால் முடிந்த பங்களிப்புக்களை தமிழீழ மருத்துவ நிதிக்கு வழங்கிக்கொண்டிருந்த வேளையில் தமிழ்த்தாய் ஒருவர் தனது தாலிக்கொடியை களற்றி மருத்துவ நிதிக்கு ஒப்படைத்தார். இந் நிகழ்வு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியதுடன், போராட்டத்தின் மீது புலம்பெயர்ந்த வாழும் மக்கள் கொண்டுள்ள அக்கறையின ஒட்டு மொத்த வெளிப்பாடாகவும் அமைந்ததெனலாம்.

இதைத்தவிர ஏராளமான மக்கள் தாங்கள் அணிந்திருந்த தங்க ஆபரணங்களையும் தமிழீழ மருத்துவ நிதிக்காக மனமுவந்து வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காலம்காலமாக எமது தமிழ் பெண்கள் போற்றிய பாதுகாக்கும் திருமணத்தின் அடையாளமான தாலியினையே போராட்டத்திற்காக ஒப்படைக்க இத்தாய் முன்வந்துள்ளமை பலரையும் விழிப்படையச் செய்ததுடன், சிறீலங்கா அரசின் பொய்ப் பிரசாரங்களுக்கும் பலத்த அடியினைக் கொடுத்துள்ளதெனலாம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## மக்கள்...

ஈழமுரசு வாசகர்களுக்கென்று பிரத்தியேக பேட்டி ஒன்றையும் வழங்கினார்.

அந்தப் பேட்டியிலேயே மேற்கொண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் சூரியக்கதிர் நடவடிக்கைகளின் தாக்கமும் பாரிஸ் படுகொலைகளின் தாக்கமும் மக்கள் மத்தியில் நேர்மாறான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. மக்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள் எதிரியின் சூழ்ச்சியை ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும் என்று மக்கள் எழுச்சி கொண்டிருப்பதை பார்க்க முடிந்தது என்றார்.

(திரு. நெடுமாறன் அவர்கள் எமக்கு வழங்கிய செவ்வி அடுத்த வாரம் முழுமையாக வெளிவரும் -ஆர்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## கொடிகாமத்தில்...

குந்த இராணுவத் தொடரின் நடுவே துருப்புக்களுடன் தென்னாபிரிக்க தயாரிப்பான பலம் வாய்ந்த சராசென் துருப்புக் காவி வாகனமும் சென்ற வேளையில் இவ் வாகனத்தை இலக்காக வைத்து சரியான நேரத்தில் கண்ணி வெடித்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து வாகனம் தீப்பிடித்து பெரும் சுவாலையுடன் எரிய ஆரம்பித்தது.

இத் தாக்குதலினால் வாகனத்தில் உள்ளே பயணம்செய்த சிப்பாய்கள் இருவர் உயிரிழந்தனர். காயமடைந்த ஏனையோரை பலத்த சிரமத்தின் மத்தியிலேயே மீட்டெடுக்க முடிந்ததென கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒத்துக்கொண்டுள்ளார். இத் தாக்குதலினால் விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்பேதும் ஏற்படவில்லை.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## பாரிசில்...

நாயகருடன் பேச்சுக்களை மேற்கொண்டார். இவரது விஜயத்தின் போது வெளிநாட்டு வர்த்தக அமைச்சர், வெளிவிவகார அமைச்சர், உள்நாட்டு அமைச்சர் போன்றவர்களுடனும் பேச்சுக்களை மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாரிஸ் 8-ல் வீடு வாடகைக்கு

Mo Rome அல்லது Europe க்கு மிகவும் அருகாமையில் மிகவும் நல்ல நிலையிலுள்ள Studio வீடு வீட்டுத்தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. இத்துடன் Ascenseurs + Gardien உண்டு. வாடகை 2.5000F (CC) மட்டும்.

சகல தொடர்புகளுக்கும்:
சிவா: 01 46 71 66 91 / 06 09 12 66 .

# மரண அறிவித்தல்



## சிவசிறி பி.பா. தியாகராஜா குருக்கள்
(சுழிபுரம்)

சுழிபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு முகத்துவாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான சிவகாம ஸ்ரீசிரோன்மணி சிவசிறி பி.பா தியாகராஜக் குருக்கள் அவர்கள் கடந்த 20.11.96 கொழும்பில் காலமானார். இவர், குருக்களின் அன்புச் சகோதரனும், சரோஜினிதேவி அம்மாவின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரிக்கா தேவி, ரஞ்சினிதேவி, வாகீஸ்வரி கணேசரஞ்சசர்மா (சுவிஸ்) பாலசுப்பிரமணியம் சர்மா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசசர்மா, ஜனார்த்தனேஸ்வரா சர்மா, நித்தியானந்த சர்மா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனார்த்தனன், கோவர்த்தன், ஜனனி, விஸ்ணுவர்த்தனன் மேதா சிதீவக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியை 21.11.96 வியாழன் அன்று கொழும்பில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

53 8/6 Aluthauththa Road,
Colombo 15,
Sri Lanka,
Tel: 01523505

தகவல்:
தி. கணேசரஞ்சசர்மா
Solothurn, Swiss
Tel: 032-6391708

# சத்தியம் நாம் செய்வோம்




அன்புடைய பண்புடைய அறிவுடைய நெறியுடைய
வீரம் விவேகமும் வழியெங்கும் வலியுறுத்தி
இத்தனையும் உன்னா தேசத்துடன்
இனமொன்றை அமைத்திட அறுதியுடன் உறுதி கொண்டு
திண்மையாய்த் தினமுழைத்து களத்தில் நின்றாராம் - எம்
இனத்தின் இரு நெருப்பு ரோஜாக்கள்.
பாதகரின் பலமுயர்ந்த பரத்தையின் பாதம் கழுவும்
பாதியில் பிறந்த எவனோ பாதகம் புரிந்திட்டான்
பாவியிவன் பாழும் உடல் பலதுண்டாய் பறந்திடும்
பாதகரின் துணைநிற்கும் பாவியிவன் இனி நிலையான்
இரு நெருப்பு ரோஜாக்கள் உதிர்ந்ததனால் - அவரினத்தை
இருள் சூழ்ந்து கொண்டதோ?
இல்லையில்லை - துயர் மீண்டு எழுவோம்
எரிமலையாய் கொதித்து வீரப்போர் செய்து
விடுதலைக்காய் வீழ்ந்தாலும்
மீண்டும் எழுவோமென - உங்கள்
உறங்கிடத்தின் மீது முழங்கி உறுதியிட்டு செய்கின்றோம்
சத்தியம் இது சத்தியம்

ஈழவர் நாம் வயவை
புலியினத்தோர் - சூரிச்.

லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

**Errances Travels**

Tél 01 42 09 70 00

*à partir de*

| | | | |
|---|---|---|---|
| Bombay | 3,900Frs. | Londres | 650Frs. |
| Delhi | 3,900Frs. | New york | 2,400Frs. |
| Bangkok | 3,350Frs. | Montreal | 2,400Frs. |
| Colombo | 4,150Frs. | Oslo | 2,010Frs. |
| Singapour | 3,350Frs. | Toronto | 2,700Frs. |
| Kualalumpur | 3,400Frs. | Nepal | 4,820Frs. |
| Madras | 4,750Frs. | | |

Fax: 01 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

## உலகச் செய்திகள்



# எதிர்காலம் ஆசியாவில்தான் உண்டு அது சீனாவினால் ஆபத்துக்குள்ளாகிறது

ஜப்பானுக்கு பிரெஞ்சு ஜனாதிபதியின் பயணம் முடிந்த கையோடு ,அமெரிக்க ஜனாதிபதியும், இராஜதந்திரிகளும் ஆசியச் சுற்றுப் பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்

அந்த இராஜதந்திரிகளில் ஒருவர் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் அடுத்த நூற்றாண்டில் எதிர்காலம் ஆசியாவில்தான் உண்டு. சீனாவின் நிழல் அதற்கு இடையூறாக உள்ளது. சீனாவின் முடிவைப் பொறுத்துத்தான் அடுத்த நூற்றாண்டு ஒத்துழைப்பானதாக இருக்குமா அல்லது மோதல் நிறைந்ததாக இருக்குமா என்பது தங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

**அமெரிக்கா**

24.11.96. ஞாயிறன்று அமெரிக்க ஜனாதிபதியும், சீன ஜனாதிபதியும் தாய்லாந்தில் நடைபெறும் ஆசிய - பசுபிக் ஒத்துழைப்பு மாநாட்டில் சந்திக்கும் போது நிலைமை ஆழமாக ஆராயப்படும் எனத் தெரிய வருகின்றது.

# உருகிய தண்டவாளத்தில் ஒட்டியுள்ள தொடர் வண்டி; ஈரோ ஸ்டார் மீண்டும் இயங்குமா ?

கடந்த 18.11.96 திங்களன்று பிரான்சுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையே உள்ள கடலுக்குக் கீழான புகையிரதப் போக்குவரத்துப் பாதையில் ஏற்பட்ட பாரிய விபத்து பற்றிய உண்மைகள் மறைக்கப்பட்டன அல்லது இன்னும் சரியாகக் கணிக்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது.

கடந்த 22.11.1996 வெள்ளிவரை பத்திரிகையாளர்கள் விபத்து நடந்த இடத்துக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டமை பல சந்தேகங்களை வளர்த்து வருகின்றது.

1000 பாகை சதம அளவில் எரிந்தபடி 17 கி.மீ ஓடிய தொடர் வண்டியின் 23 வண்டித்தொடர்கள் உருகிய நிலையில் ஓடுபாதையில் ஒட்டிய நிலையில் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

நான்கு விசேட ஆணைக் குழுக்கள் விசாரணையை நடாத்தி வருகின்றன. பூர்வாங்க தகவல்களின்படி தீயினால் மின் சாரத் துண்டிப்பு ஏற்பட்டதாகவும் சுரங்கப் பாதையுள் திடீரென நின்றுபோன தொடர் வண்டி ஏன் அவ்வாறு நிற்க நேரிட்டது என்பதையும், சுரங்கப் பாதையுள் வண்டித்தொடர் செல்ல முன்னரே அசாதாரணமாக புகை வெளியேறியதையும் தீயின் அடையாளத்தையும் காவலாளி ஒருவர் அறிவித்திருக்கின்றார்.

# பொறிஸ் ஜெல்சின் வைத்தியசாலையில் இருந்து வெளியேறினார்

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் ஜெல்சின் இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பின் கடந்த 22.11.96 வெள்ளியன்று வைத்தியசாலையில் இருந்து வெளியேறி ஓய்வு விடுதி ஒன்றுக்கு சென்றுள்ளார்.

ஜனாதிபதி ஜெல்சின் வைத்திய சாலையில் இருந்து வெளியேறிய அதே வேளை அவரின் நிர்வாகத் துறைப் பொறுப்பாளரும், உதவிப் பிரதமரும் கடமையில் இருந்து இடை நிறுத்தப்பட வேண்டும் என நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்விருவரும் ஜனாதிபதி தேர்தல காலத்தில் நீதி நிர்வாக முறை கேடுகளில் சம்பந்தப்பட்டார்களா என்பது தொடர்பான விசாரணைகளை நீதிமன்றம் மேற்கொண்டு வருகின்றது.

# கொலைச் சந்தேக நபர் கைதாகி விடுதலை

ஜேர்மனியில் ஏழு வருடங்களுக்கு முன் வங்கியாளர் ஒருவரை சுட்டுக்கொன்றார் என்ற சந்தேகத்தில் தேடப்பட்ட கிறிஸ்தோப் (வயது 38) என்பவரை KARLSRUHE நீதிபதி கைது செய்து உடனடியாகவே விடுதலை செய்துள்ளார்.

மேற்படி சந்தேக நபர் சட்ட அதிகாரிகள் முன் சரணடைந்ததைத் தொடர்ந்தே அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவர் மீதான குற்றச் சாட்டும் சந்தேகமும் காலகதியானதே விடுதலைக்குக் காரணம் எனத் தெரிய வருகின்றது.

# பெல்ஜியத்தில் PKK. பயிற்சி முகாமில் 18 சிறுவர்கள் கைது

துருக்கியில் வாழும் குர்திஸ் இன மக்களின் சுதந்திரத்திற்காக போராட்டம் நடாத்திவரும் குர்திஸ் போராட்ட அமைப்பான P.K.K இயக்கம் ஐரோப்பிய நகரங்களிலும் தமது பயிற்சி முகாங்களை வைத்திருப்பது தொடர்பான செய்திகள் அண்மைக் காலமாக அடிபட்டன

இதனை உறுதி செய்யும் வகையில் கடந்த வாரம் பெல்ஜியத்தின் ZUTENDAAL நகரில் PKK இன் இரகசிய பயிற்சி முகாம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி முகாமில் ஜேர்மனி போன்ற நாடுகளில் திடீரென தலைமறைவாகிய 18 சிறுவர்களும் காப்பாற்றப்பட்டுள்ளனர். இச் சிறுவர்களும், பயிற்சியளித்த மற்றையோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.


மாவீரர்களுக்கு எமது வீர வணக்கம்

JAFFNA SHOP

ஜவ்னா சொப்

இலங்கை, இந்திய, தாய்லாந்து நாட்டு மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடலுணவுப் பொருட்கள் மற்றும் ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான (இறக்குமதி செய்யப்பட்ட) உடைகள், மற்றும் 22 கரட் தங்கநகைகள் அனைத்தையும் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Stauffacher Str. 104, 8004 Zurich Tel: 01 / 241 02 80.

மொத்த விநியோகஸ்தர்கள்:

**Krishna Traders**
Ziegelrain - 8, 5000 Aarau, Swiss
Tel: 062 8241782 / Fax: 01 273 04 28
Mobile: 079 4058410 - 077 232013

**Jaffna cash & carry**
Industrie str-7, 5432 Neunhof, swiss
Tel: / Fax: 056 4061111
Mobile: 089 4014684

# சைன்ரோலோஜி மதக் குழு தலைவருக்கு சிறையும் அபராதமும்

சைன்ரோலோஜி (SCIENTOLOGY) எனப்படும் அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்ட மதக் குழுவின் பிரெஞ்சுக் கிளையொன்றின் தலைவருக்கு 18 மாத சிறைத் தண்டனையும், 5 இலட்சம் பிராங் அபராதமும் விதித்து லியோன் மாவட்ட நீதிபதி தீர்பளித்துள்ளார்.

மேலும் பதினைந்து சைன்ரோலோஜி உறுப்பினர்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

சைன்ரோ லோஜியில் இணையும் உறுப்பினர்களின் மனோதிடத்தை இழக்கச் செய்து, அவர்கள் தமது மதக் கொள்கையின் அடிமைகளாக்கி இலாபமடையும் சைன்ரோலோஜி மதக் குழுவின் செயற்பாட்டால் தற்கொலை செய்து கொண்ட ஒருவர் தொடர்பான வழக்கிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மதக் குழுக்கள், சமூகத்துக்கு அபாயமானதாகவும், அப்பாவி மக்களின் மனோ தைரியத்தை பலவீனப்படுத்தும் செயற்பாட்டின் ஆபத்துத் தொடர்பாகவும் பிரெஞ்சு பாராளுமன்றக் குழு ஒன்று ஏற்கனவே அச்சம் தெரிவித்திருந்தது.

# புத்தகக் கண்காட்சியில் எழுத்தாளருக்கு தடை

பிரான்சில் TOULON எனும் நகரம் தீவிர வலதுசாரிக் கட்சியின் ஆட்சியில் உள்ளது. இந் நகரில் கடந்த வாரம் NTM என்ற RAP பாடகர்களுக்கு பாடத் தடை விதிக்கப்பட்டதோடு, சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது வாசகர்கள் அறிந்ததே.

இதே நகரில் வருடா வருடம் நடாத்தப்படும் தேசிய புத்தக கண்காட்சியில் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. HALTER என்பவருக்கு பரிசு வாங்க தடைவிதிக்கப்பட்டுள்ளதோடு அப்பரிசு BRIGITE BARDOT என்ற முன்னாள் கவர்ச்சி நடிகைக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாய், பூனை, போன்ற மிருகங்களின், பறவைகளின் உயிர்வாழ் உரிமைக்காக போராட்டம் நடாத்தி பெருமையுடன் வாழும் பிறிஜித் பார்த்தோ பிரான்ஸ் நாடு அந்நிய நாட்டவர்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றது என்ற கொள்கையுடையவராவார்.

இந்த அநாகரிகத்தை கண்டிக்கும் வகையில் ஜனாதிபதி சிராக் அரசின் கலாச்சார அமைச்சர், குற்பிளேசி, சோசலிக் கட்சி முன்னாள் கலாச்சார அமைச்சர் ஜக்லாங் ஆகியோர் எழுத்தாளர் திரு. HALTER ஐ அழைத்து போட்டி கூட்டம் ஒன்றை தூலோன் நகரில் நடாத்தியுள்ளனர்.

# ரஷ்ய இராணுவச் செய்மதி செயலிழந்து விட்டது ?

முக்கியமான இடங்கள், எல்லைகள், போர் நடைபெறும் பிரதேசங்களை புகைப்படம் எடுக்க ரஷ்ய இராணுவம் பாவித்த செயற்கைக் கோள கடந்த இரண்டு மாத காலமாக செயலிழந்துவிட்டது என மேற்கத்தேய இராணுவ நிபுணர்கள் கடந்தவாரம் அறிவித்துள்ளனர். இந்த செய்தி உண்மை தான் என்பதை ஒப்புக்கொண்ட ரஷ்ய இராணுவ உயர்பீடம், எமது இராணுவம் குருடாகி விடவில்லை எனத் தெரிவித்துள்ளது.

வானில் இருந்து உலகளாவிய ரீதியில் உளவுப் படங்களை எடுக்கும் வலிமை பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் மட்டுமே உள்ளது.

இது வரை 800 இற்கும் அதிகமான இத்தகைய செய்மதிகளை ஏவிய ரஷ்யா ஒவ்வொன்றினதும் வாழ்வுக்காலம் (LIFE TIME) முடியும் போது புதியதொன்றை ஏவுவது வழக்கம்.

ஆனால் சோவியத் ரஷ்யா உடைந்த பின் அது நடைபெறவில்லை. COSMOS 233 எனப்படும் படம் எடுக்கும் செய்மதி யூன் மாதம் 11ம் திகதி தனது வாழ்வுக்கால எல்லையை அடைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து கொஸ்மொஸ் 2320 ஐ ஏவும் முயற்சி நடைபெற்றது. அது செப்டெம்பர் 28ம் திகதி விபத்துக்குள்ளாகியதால் ரஷ்ய இராணுவம் இன்று புகைப்பட ஆதாரத் தகவல் அற்றதாக உள்ளது.

# பிரித்தானிய விமானம் துருக்கிய ஏவுகணையில் இருந்து தப்பியது

துருக்கியின் தலைநகர் இஸ்தான்பூலுக்கு அண்மையில் ஏவப்பட்ட ஏவுகணையில் இருந்து பிரித்தானிய விமானம் ஒன்று மயிரிழையில் தப்பியுள்ளது. பிரிட்டிஷ் எயர்வேஸ் நிறுவனத்தினருக்கு இந்த ஏவுகணைத் திட்டம தொடர்பாக முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் விமானிக்கு இது பற்றித் தெரிவிக்கப்படவில்லை என்றும் பூர்வாங்க விசாரணைகள் தெரிவிக்கின்றன. விமானத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் ஏவுகணை வெடித்துள்ளது.

# போர்ட் ஆர்தர் கொலையாளிக்கு ஆயுள் தண்டனை

அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான உல்லாசப் பிரயாண கோட்டையான போர்ட் ஆர்தரில் கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி 35 பேரை கனப்பொழுதில் சுட்டுக் கொன்ற மார்ட்டின் என்பவருக்கு ஆயுள் காவச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்த நீதிபதி, இந் நபர் எக் காரணத்தைக்கொண்டும் மன்னிப்பளித்து விடுதலை செய்யப்படக் கூடாது எனவும தீர்ப்பளித்துள்ளார்.

IQ எனப்படும் கூர்மை (INTELIGENCE QUESTIONS) பற்றிய பரிசோதனைக்குள்ளாக்கப்பட்ட போது, ஒரு சிறு குழந்தையின் அளவிற்கே மூளை வளர்சியடைந்த இவரது மூளை வளர்ச்சிக் குறைபாட்டினாலேயே அந்தக் கோரக் கொலைகளை பைத்தியம் எனக் கருதப்பட்ட அவர் புரிந்ததாக வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# அணு ஆயுத தயாரிப்பில் பயன்படும் இரசாயனப் பொருள் மர்ம மறைவு

அணு ஆயுதங்களின் முனைகளைத் தயாரிக்கப் பயன்படும் BERYLLIUM என்ற இரசாயனப் பொருள் எஸ்டோனியாவில் இருந்து அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லும் வழியில் சுவீடன் நாட்டில் மர்மமாக மறைந்து விட்டது!

கிட்டத்தட்ட ஒரு தொன் எடையுள்ள இந்த இரசாயனப் பொருள் கடந்த வருடம் டிசம்பர் 29 திகதியன்று மாமமாக மறைந்த போதிலும் தற்பொழுதுதான் அது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

# வாரக் குறிப்பு

### 17.11.96 ஞாயிற்றுக்கிழமை

- போர்க் குற்றங்களை ஆதரித்து எழுதுபவர்களே முதலாவது குற்றவாளிகள் என விவாதிக்கும் புத்தகமொன்றை எழுதிய சோவியத் எழுத்தாளர் VIDOSAU STERVANOVIL, அப்படி எழுதுபவர்களும் கைது செய்யப்பட்டு போர்க்குற்ற நீதி மன்றம் முன் நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.
- ஜப்பானுக்கு சென்றுள்ள பிரான்சு ஜனாதிபதி ஜக் சிராக் பிரான்சிற்கும் ஜப்பானுக்கும் இடையே ஏற்றுமதி வர்த்தகத்தில் அக்கறை காட்டியுள்ளார். வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார மேம்பாடு ஆகியவற்றிற்கு இது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.
- வியட்னாமிய ஜனாதிபதி DUL ANH மூளை நரம்பு பாதிப்பு ஏற்பட்டதால் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
- ருமேனியாவில் கிறீஸ்தவ ஜனநாயக கட்சியை சேர்ந்த EMIL LONSTAN TINESCu ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். 19 நவம்பர் 1939ல் பிறந்த இவர் கனிப்பொருளியலில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற கல்விமானாவார்.
- பிறேசிலின் தலை நகரான SAO PAULO ன் மேயராக கறுப்பினத்தவரான CELSO PITTA தெரிவு செய்யப்பட்டுள்ளார். 49 வயதான இவர் பொருளியல் துறை நிபுணராகும்.

### 18.11.96 திங்கட் கிழமை

- 20 ஆம் நூற்றாண்டில் தொழில் நுட்ப சாதனைகளில் ஒன்று எனக் கருதப்பட்ட பிரான்சுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையேயான கடலடிப் போக்குவரத்து பாதையில் ஏற்பட்ட பாரிய தீவிபத்து பல அச்சங்களை உருவாக்கியுள்ளது.
- அல்ஜீரியாவில் நடந்து வரும் வன்முறைகளினால் கடந்த ஐந்து ஆண்டுகளில் 50 ஆயிரம் பேருக்கு மேல் பலியாகியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.
- ஜயிர் நாட்டுக்கு சமாதானப்படை அனுப்புவது தொடர்பாக பிரான்சுக்கும் அமெரிக்காவுக்கும் மீண்டும் முரண்பாடு.
- இஸ்ரேலிய தடைமுகாம்களில் பாலஸ்தீனர்கள் மீது சித்திரவதை செய்து விசாரணைகளை மேற்கொள்ள பொலிசாருக்கு நீதி மன்றம் அனுமதிவழங்கியுள்ளது.
- பாலஸ்தீன நிலங்களில் இஸ்ரேலிய குடியேற்றத் திட்டம் மீண்டும் ஆரம்பம்.

### 19.11.96 செவ்வாய்க்கிழமை

- பாப்பரசரை கியூபத்தலைவர் பிடல்காஸ்ரோ றோமில் சந்தித்தார்.
- ஐ.நா.சபையின் செயலாளர் நாயகமாக இருக்கும் பூட்ரோஸ் காலி தொடர்ந்து பதவிவகிக்க விருப்பம் கொண்டபோதும் அமெரிக்கா அதனை மேலாண்மை (வீட்டோ) செய்துள்ளது.
- தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா பத்திரிகைகள் நடுநிலை வகிக்க தவறுகின்றன எனக் குற்றம் சாட்டியுள்ளார்.
- மனித உரிமைகள் நிறுவனம் TOTAL எனப்படும பிரெஞ்சு எண்ணைக் கம்பனி பர்மாவில் முதலிடுவதை தொடர்ந்து கண்டிக்கின்றது.
- பாஸ்க் விடுதலைப் போராட்ட முக்கிய உறுப்பினர் ஒருவர் பிரெஞ்சு பொலிசாரால் கைது செய்யப்பட்டதாக அறியப்படுகின்றது.

### 20.11.96. புதன்கிழமை

- ஜயிரில் நிலை கொண்டுள்ள 5 இலட்சம் ருட்சி இனத்தவரைக் கொன்ற ஹூட்டு இராணுவத்துக்கு ஐரோப்பிய நாடுகளில் சில இராணுவ உதவியும் ஆயுதங்களும் வழங்கியதாக செய்தி.
- உகண்டாவைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான சிறுவர்கள் சூடானுக்கு அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.
- இத்தாலிய நாணயம் ஐரோப்பிய நாணய நிதியத்துடன் இணைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக பிரதமர் புருடி தெரிவித்துள்ளார்.
- ஜேர்மனியில் வாழும் 3 இலட்சம் பொஸ்னிய அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக ரஷ்யாவுடன் ஒப்பந்தம்.

### 21.11.96 வியாழக்கிழமை

- பிரான்சில் வாறிச் சாரதிகளின் சம்பளஉயர்வு கோரிய வீதி மறியல் போராட்டம் பொருளாதாரத்தில் தாக்கத்தைக் கொடுக்க ஆரம்பித்துள்ளது. சில நகரங்களில் எண்ணை தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.
- பெல்ஜிய உதவிப் பிரதமர் உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்துவருகின்றது. ஊழல் காரணம்.
- அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனின் தேர்தல் பிரச்சார நிதி ஆசிய நாட்டு முதலாளிகள் இருவரிடம் இருந்து வந்ததாக செய்திகள் வலுவடைகின்றன.
- ஆசியாவில் உற்பத்தியாகும் இலத்திரனியல் பொருட்களை குறிப்பிட்ட விலைக்குக் குறைய விற்கக் கூடாது என்ற உடன்பாட்டை அமெரிக்கா முன்வைத்த போதும் ஆசிய நாடுகள் அதனை நிராகரித்துள்ளன.

### 22.11.96.வெள்ளிக்கிழமை

- செச் செனியாவில் இருந்து அனைத்து ரஷ்யப் படைகளும் வாபசாக வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி கட்டளை பிறப்பித்துள்ளார். இருதய சத்திர சிகிச்சை முடிந்த பின் அவர் பிறப்பித்த முதலாவது கட்டளை இது எனக் கருதப்படுகிறது.
- சூடானிய இராஜ தந்திரிகள் அமெரிக்கா செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.
- இத்தாலியில் HEPATITE "A" விரைவாக பரவலாம் என அஞ்சப்படுகின்றது.
- உகண்டாவுக்கு 750 மில்லியன் டொலர் உதவியை உலக வங்கி வழங்குகின்றது.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# இந்திய வானில் ஒரு தீப்பிழம்பு
# விமான வரலாற்றின் மிகக்கோர விபத்து




உலக விமான சரித்திரத்திலே மிகவும் மோசமான விபத்து எனக் கருதப்பட்ட ஒன்று இந்தியாவில் நடந்து முடிந்தது. தீபாவளிக் கோலாகலம் முடிந்து இரண்டு நாட்களின் பின் மீண்டும் கேட்ட வெடியோசைகள் மகிழ்ச்சிக்கானதாக இருக்கவில்லை. 351 உயிர்கள் அந்த மாலை வேளையில் தீயோடு கருகிப் போன சோகத்துக்கான வெடியோசைகள் அவை.

கடந்த 12-ம் திகதி புது டெல்லி இந்திராகாந்தி விமான நிலையத்தில் இருந்து டாக்டர்கள், பொறியியலாளர்கள், என 312 பயணிகளுடன் மாலை 6.33 இற்கு சவுதி அரேபிய விமான நிறுவனத்தின் 'போயிங் 747' விமானம் டஹ்ரான நோக்கிப் பயணமானது. இதே வேளை 6.45 மணியளவில் "சிம்கென்ட்" இலிருந்து கசகஸ்தான் விமான சேவையின் இல்யூசின் 76 விமானம் 27 வர்த்தகர்களை ஏற்றிக் கொண்டு புது டெல்லி நோக்கி இறங்கிக் கொண்டிருந்தது. சுமார் 15,000 அடி உயரத்தில் இறங்கிக் கொண்டிருந்த கசக் விமானத்திற்கும், 14,000 அடி உயரத்தில் ஏறிக்கொண்டிருந்த சவுதி விமானத்திற்கும் சரியான முறையில் கட்டளைகளை வழங்கி விட்டு சிறிது ஆயாசப்பட்டுக் கொண்டிருந்த அனுபவம் மிக்க கட்டுப்பாட்டு அதிகாரி "டுட்டா" தனது ராடார்திரையை கவனித்த போது இரண்டு புள்ளிகளும் அசாதாரணமான முறையில் ஒன்றையொன்று நெருங்கிக் கொண்டிருந்ததையும் திடீரென இரண்டும் ஒன்றுடன் ஒன்று கலந்து திடீரென மறைந்து விட்டதையும் அவதானித்தார். என்ன செய்வதென்று புரியாத நிலையில் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் குழம்பிக் கொண்டிருந்த வேளை, அமெரிக்க விமானப் படையின் சரக்கு விமானமொன்றின் விமானி கட்டுப்பாட்டறையுடன் தொடர்பு கொண்டு புது டெல்லியில் இருந்து மேற்காக சுமார் 60 கிலோ மீற்றர் தூரத்தில் வெடி விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளதை அவதானித்ததாகவும் வான் வெளியில் விமானங்கள் மோதிக்கொண்டது உறுதிப்படுத்தப்பட்டு பெரும் செந்நிற தீப் பிழம்புகள் தெரிந்ததாகவும் அறிவித்தார். சுற்றுப் புறங்களில் தீயணைப்புப் படையினர் உசார்ப் படுத்தப்பட்டு பொலிசார் அடுத்த உத்தரவுக்காக காத்திருந்தபோது "டாளிபோகட்" எனும் விவசாயக் கிராமத்தின் மேல் திடீரென பெரும் வெளிச்சங்கள் எழுந்தன. மறைந்து கொண்டிருந்த சூரியன் மீண்டும் உதித்ததுபோல் இருந்ததாக அப் பகுதி வாசிகள் தெரிவித்தனர். திடீரென மூன்று பெரும் வெடிச் சத்தங்களும் அதனைத் தொடர்ந்து பாரிய தீப்பிழம்புகள் இரண்டும் பூமியை நோக்கி வந்துள்ளன.

"டாளி போகட்" கிராமத்தின் புதிதாய் உழுத வயல் வெளிகளிலெல்லாம் விமானச் சிதறல்கள். கிராமத்தின் 10 கி.மீ சுற்றாடலில் கிடக்கக் காணப்பட்டன. அதிர்ச்சியால் பல வீடுகளின் கண்ணாடிகள் கூட உடைந்து சிதறியுள்ளன. உடனடியாக கிராமத்து இளைஞர்கள் ஒன்று திரண்டு கையில் அகப்பட்ட வெளிச்சங்களுடன் விபத்து நடந்த பகுதிக்கு விரைந்தனர். மின்சார வசதிகள் சரியாக இல்லாத நிலையில் கைவிளக்குகள் உதவியுடன் தேடத் தொடங்கிய போது ஒரு இருக்கையில் பட்டிகள் பிணைத்தபடி மூன்று பயணிகள் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டனர். ஆனால் சரியான வசதிகள் இல்லாத நிலையில் மருத்துவ மனைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டனர். மீட்பில் ஈடுபட்ட குழுவினர் தெரிவிக்கையில் தாம் அப்பகுதியை அடைந்த போது பல உடல்கள் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்ததையும் வயல் வெளிகளிளெல்லாம் உடல்களின் பாகங்கள் சிதறிக் கிடந்ததையும் மரங்களிளெல்லாம் உடல்கள் தொங்கிக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தனர்.

மறு நாள் காலை அந்தக் கிராமமே மயான நிலைக்கு மாற்றப்பட்டது போன்று காணப்பட்டதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்தும் தமது உறவினர்களை அடையாளம் காண்பதற்காக ஏராளமானோர் வந்து குழுமியிருந்தனர். உடல்கள் இருக்கையுடன் இறுகப் பற்றிய கைகளுடன் காணப்பட்டன.

ஒரு குழந்தையை இறுகப் பிடித்தபடியிருந்த ஒரு தாயின் உடலும் காணப்பட்டது. ஒருவர் தனது மகனின் உடலை வெறும் கையை மாத்திரம் வைத்து அடையாளம் காட்டினார். அவர் தனது குடும்ப மோதிரத்தையும், மணிக்கூட்டையும் அணிந்திருந்தார். அது போல இறுதியாக விமானத்தில் ஏறியபோது அணிந்திருந்த உடையைக் கொண்டு அடையாளங் காணப்பட்டவர்களும் உண்டு.




இந்த விமான விபத்தே உலக விமான சரித்திரத்தில் நடுவானில் நடந்த மிகவும் மோசமான விபத்தாகும். அதே போல் மூன்றாவது பெரிய விமான விபத்தாகவும் கணிக்கப்பட்டுள்ளது. நடு வானில ஏற்பட்ட இவ் விபத்துப் பற்றி பலவிதமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் பிரதானமாகக் கூறப்படுவது கசக் விமானிக்கும் கட்டுப்பாட்டறைக்கும் இடையே சரியான கட்டளைப் பரிமாறல்கள் இருக்கவில்லை என்பதே. அதாவது விமானக் கட்டுப்பாட்டறையில் இருந்து ஆங்கிலத்திலேயே கட்டளைகள் வழங்கப்படுவது வழக்கம். சர்வதேச விமான கட்டுப்பாட்டு மொழியாக ஆங்கிலமே பயன்படுத்தப் படுகிறது. ஆனால் முன்னாள் சோவியத் யூனியனின் விமானிகளுக்கு ஆங்கிலம் வெகுவாகப் புரிவதில்லை என்றும் ஆகையால் கட்டுப்பாட்டாளர்களின் கட்டளைகளை விமானி சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்று சந்தேகம் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் கட்டுப்பாட்டறையின் இறுதியான பதிவுகளின்படி விமானி கட்டுப்பாட்டறையின் கட்டளைகளை சரியான முறையில் ஏற்றுக் கொள்வதாக உள்ளது. அடுத்ததாகக் கூறப்படுவது அளவுமுறை. சர்வதேச ரீதியில் அடிகள் அளவுமுறையில் தான் விமான உயர அளவுகள் கணிக்கப்படுகின்றன. ஆனால் ரஷ்யாவில் மீற்றர் முறை பாவிக்கப்படுகிறது. ஆகையால் அந்த அளவுக் கணிப்பீட்டில் பிழை ஏற்பட்டிருக்கலாமோ என்றும் கூறப்படுகிறது. இதே சமயம் இந்திய விமான நிலைய உபகரணங்களும் மிகவும் பழையனவாகவும் உள்ளதாயும் கூறப்பட்டுள்ளது. 1993ம் ஆண்டின் பின் புது டெல்லி விமான நிலையத்தில் மட்டும் தினமும் 400 விமானங்கள் வந்து செல்கின்றன. ஆனால் பாவிப்பிலிருக்கும் உபகரணங்களோ மிகவும் பழமையானவையாகவே இருக்கின்றன. இதன் காரணமாக புதிய விமானக் கட்டுப்பாட்டு சாதனங்கள் 94 மில்லியன் டொலர் செலவில் அமெரிக்காவில் வாங்கப்பட்டு நிறுவப்பட்டன. ஆனாலும் அங்குள்ள ராடார் கருவிகள் இன்னமும் பழமையானவையாகவே உள்ளன. இங்குள்ள சாதனங்கள் 25 வருட பழமையானவையாகவே உள்ளதாக கூறப்படுகிறது. ஒரு விமான ஆய்வாளர் கருத்துத் தெரிவிக்கையில் நடுவானில் விமானங்கள் அருகருகில் வருவது பல சமயங்களில் நடந்துள்ளன. கூறுகூறப்பான பல விமான நிலையங்களில் இப்படியான சம்பவங்கள் நடப்பது சாதாரணம். ஆனால் அவைகள் வெகு சாமர்த்தியமாக தவிர்க்கப்பட்டே இருக்கின்றன. காரணம் புதிய விமானங்களிளெல்லாம் "TRANSPONDER" எனப்படும் கருவி இணைக்கப்பட்டுள்ளது. ஒரு விமானத்தின் அருகில் வேறொரு விமானம் வரும் பட்சத்தில் இக் கருவிகள் விமானிக்கு எச்சரிக்கை செய்கின்றன. முன்னாள் சோவியத் யூனியனின் விமானங்களில் சிறிய ரகமே இந்த இல்யூசின் 76 விமானம். மிகவும் பழமையான இவைகளின் விமான எச்சரிக்கை சாதனங்கள் பொருத்தப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் சவுதி விமான நிறுவனத்தின் போயிங் 747 இல் இக் கருவி பொருத்தப்பட்டுள்ளது. ஆனால் கசக் விமானம் அருகில் வந்தபோது அது எச்சரிக்கப்படாதது ஏன் என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.



இன்று என்னதான் காரணங்கள் கூறப்பட்டாலும் முழுமையான விசாரணைகளின் பின்னர்தான் சரியான முடிவுகள் வெளியாகலாம். விபத்து நடந்து 48 மணி நேரத்துக்குள் விமானத்தின் கறுப்புப் பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் விசாரணைகள் முடிய பல வாரங்கள் கூட எடுக்கலாம். இது பற்றி விசேட குழுவொன்று அமைத்து இந்திய அரசு பயணிகளின் சார்பாக முழு அளவிலான விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

**உதயன்**




## அறிந்து கொள்வோமா?

# அப்பிளும் புவியீர்ப்பு விசையும்

அப்பிள் பழத்தைக் கண்டவுடன் பலருக்கு நியூட்டனின் ஞாபகம் வருகிறது. ஏன்?

பல இயற்கை விதிகளையும், தூரநோக்குக் கருவிகளையும் கண்டுபிடித்த ஐசக் நியூட்டன் என்ற ஆங்கில நாட்டறிஞர் 1642-ம் ஆண்டு கிறிஸ்து பிறந்த நாளில் பிறந்தார். புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தவரும் இவரே. ஒருநாள் ஓர் அப்பிள் பழம்



மூலம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியவர். ஏன் அந்த அப்பிள் நிலத்தில் விழ வேண்டும்? ஏன் அனைத்துப் பொருட்களும் நிலத்தை நோக்கி விழ வேண்டும்?

அப்பிளில் ஒரு விசை விளையாடுவதை நியூட்டன் சிந்தித்தார். அதனையே புவிக்கவர்ச்சி (ஈர்ப்பு) விசை என அழைத்தார். அப்பிள் சரித்திரம் பின்னர் பல புதிய கண்டுபிடிப்புகளுக்கு உதவியது. அவரது கண்டுபிடிப்பும் சரியென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**செல்வன்**
**சுந்தரலிங்கம்**
**கடம்பன்**

வயது: 10 (14.05.1986)

இடம்:
Trerelyan Road, London



# பொன் மொழிகள்

சுகவாழ்வு

1. பசித்துப் புசி.
2. ஆறின கஞ்சி பழங் கஞ்சி.
3. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
4. கூழானாலும் குளித்துக் குடி.
5. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
6. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
7. மாலை வெயில் மறித்தென மதி.
8. சுத்த காற்றே சுவாசிக்க உகந்தது.
9. சுத்தம் சுகம் தரும்.
10. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

சு. கடம்பன்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# கவிதை பாடுவோம்

## குழந்தையும் வண்ணத்துப் பூச்சியும்

குழந்தை:

வண்ண வண்ண மலரிலெல்லாம்
வந்தமரும்
வண்ணத்துப் பூச்சி
உன் பட்டுமேனியைத்
தொட்டுப் பார்க்க
ஓடி வந்தால்
எட்டிப் போவதேன்
வண்ணத்துப் பூச்சி!



வண்ணத்துப் பூச்சி:

புழுதியான புழுதியெல்லாம்
அளைந்து வரும்
குழந்தையே
உன் அருமந்தக் கரங்களால்
என் உருவையே மாற்றிடுவாய்
ஒருவேளை
என் உயிரையே எடுத்திடுவாய்
ஆதலாலே
என் அருமந்தக் குழந்தையே
என்னை நீ
எட்டி நின்றே பார்த்திடுவாய்
என் அழகையெல்லாம்
பருகிடுவாய்.

நன்றி: தினமணிக்கதிர்

# மாவீரர் நாள்



பிள்ளைகளே!

27.11.96 அன்று மாவீரர் நாளாகும். தமிழீழ நாட்டிலும், தமிழர்கள் வாழுகின்ற உலக நாடுகள் எல்லாவற்றிலும் மாவீரர்நாள் கொண்டாடப்படுகின்றது.

தமிழீழ நாட்டையும், மக்களையும் எதிரிப்படை களிடம் இருந்து காப்பாற்றுவதற்காக வீரமுடன் போராடி உயிர் நீத்தவர்களை நினைவு கொள்ளும் நாளே மாவீரர் நாளாகும். உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலுமே தங்களின் நாட்டுக்காகப் போராடி உயிர் நீத்தவர்களை அந்நாட்டு மக்கள் போற்றிக் கௌரவிப்பார்கள். எங்களுடைய தமிழீழ நாட்டுக்காகவும் போராடி உயிர்நீத்தவர்களை தமிழ் மக்களாகிய நாங்களும் போற்றி கௌரவிக்க வேண்டும். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் களத்திலே முதலாவதாக உயிர்நீத்த சங்கர் மாமாவின் நினைவு நாளே மாவீரர்கள் நாளாக எமது மக்களால் நினைவு கொள்ளப்படுகின்றது. உங்கள் நாடுகளில் நடைபெற்ற மாவீரர் நாள் கொண்டாட்டத்திற்கு நீங்களும் சென்றிருப்பீர்கள். அப்படியானால் உங்கள் அனுபவங்களை உங்கள் கையால் எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள். சிறுவர் முற்றத்தில் பிரசுரிக்கிறோம்.

## உங்கள் கை வண்ணம்

### இவ் வாரக் கைவண்ணம்



**செல்வி**
**த. ஜெனித்தா**

வயது: 11

இடம்:
Rheineck, Swiss.

யானை



(1) யானை காட்டில் வாழும் மிருகம்.
(2) யானை எல்லா மிருகங்களிலும் பெரியது.
(3) இதன் காதுகள் சுளகு போல அகன்று இருக்கும்.
(4) யானையின் கண்கள் மிகச் சிறியவை.
(5) யானையின் மூக்கு நீண்டு வளைந்திருக்கும்.
(6) யானையின் கடைவாயில் பக்கத்தில் இரண்டு கொம்பு போல் வளைந்திருக்கும் அது தந்தம் எனப்படும்.
(7) யானையின் வால் மிகக் குறுகியது.
(8) யானை இலை, தழை, பழங்கள், முதலியவற்றை விரும்பி உண்ணும்
(9) யானை மிக்க பலம் வாய்ந்த மிருகம்.
(10) இது பெரிய மரங்களையும் சாய்த்து விழுத்தும்

# SRI MURUGAN

உங்கள் தேவை! உங்கள் கடை!! எங்கள் சேவை!!!

மாவீரர்களுக்கு
எமது
வீர
வணக்கங்கள்



## எமது நேரடி இறக்குமதியில்

- சிங்கப்பூர் 22 கரட் தங்க நகைகள் எமது S.A.M முத்திரை பதிக்கப்பட்டு உத்தரவாதத்துடன் இறக்குமதி செய்து தரப்படும்.
- பனாறிஸ், காஞ்சிபுரம் மற்றும் அனைத்து சேலை வகைகள்
- குழந்தை முதல் பெரியோர் வரை அனைத்து ரக உடுப்புகள்
- அனைத்து புதிய பழைய ஒடியோ, சீடிக்கள், அத்துடன் தமிழ், ஹிந்தி ஒறிஜினல் வீடியோ கசட்டுக்கள் வாடகைக்கும், விற்பனைக்கும் எம்மிடமுண்டு.

மற்றும்

- மளிகைப் பொருட்கள்,
- கடலுணவு வகைகள்,
- மரக்கறி வகைகள்,
- எவர்சில்வர் பொருட்கள்

அனைத்தும் மிக மிக மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.**

தொடர்புகளுக்கு: மாணிக்கம் இளமுருகன்
Tel: 079.3326208

## SRI MURUGAN

Garments & jewellers
Oriental Food Specialites & Sea Foods

**Wiesen str 3A, 4900 LANGENTHAL, SWITZERLAND**

New Tel: from nov. 96:062 9221798
New Fax & Tel. from nov. 96: 062 9227833
H.P (NATEL) 079 3326208 MANICCAM ILLAMURUGAN

ஜேர்மனி கம்பேர்க்கில்.....

# பிரியா ரெக்ஸ்ரைல்ஸ்

## ஓர் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

சாறி, பஞ்சாபி, பனாறிஸ் மற்றும் சிறுவர்களின் ரவுசர், ரெடிமேட் ஆடைகள், ஆண்களுக்குரிய சேட் (ரவுசர் DENIM) டெனிம் யாவும் 10 வீதம் கழிவு. சகல விதமான உடுப்பு வகைகளும் அத்துடன் 8 கிராம் பவுண் விலை (ஒரு பவுண்) 185DM மட்டும்.

பருப்பு........ **2Kg 4.85DM**
உழுத்தம் பருப்பு........ **5.35DM**
மிளகாய்த்தூள்........ **4.75DM**
அரிசிமா........ **3.85DM**
பெ.சீரகம், சி.சீரகம், கடுகு **100g 0.89Pf**
Horlicks 800g போத்தல்........ **8.50DM**
குத்தரிசி........ **10Kg 28.00DM**
CD - 500 விதமான C.D யாவும் **7.00DM** இல் இருந்து **9.50DM** வரை.
Audio கசற் 3DM முதல்........ **4.00 DM** வரை
ஓமான் மீன்........ **1Kg 7.00DM**



**01.12.96 அன்று சேனாதிபதி திரைப்படம் இலவசமாக காண்பிக்கப்படும்**




# ஈழத் தமிழர்களின் அன்பே தனியானது!

## நிர்மலா சுரேஷ்

சென்னைத் தொலைக்காட்சியின் முன்னாள் செய்தி அறிவிப்பாளர் நிர்மலா சுரேஷ். கவித்துவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் தற்போது கனடாவில் வசிக்கிறார். கனடா வானொலியின் தமிழ்ச் சேவையில் "நிர்மலா சுரேஷ் நேரம்" என்ற நிகழ்ச்சி வெகு பிரபலம். அதை தொகுத்தளிப்பவர் இவர்தான்.



வானொலிச் சேவையில் புகழ் பெற்ற நிர்மலாவை தொலைக்காட்சியும் அழைப்பு விடுத்ததால் தற்போது கலாபம் தொலைக்காட்சி சேவையில் ஜோடிப் பொருத்தம் என்ற நிகழ்ச்சியினை நடாத்தி வருகிறார். தமிழகப் பெண் என்ற காரணத்தால் ஈழத் தமிழ் சகோதரர்களின் தனியான அன்புக்கு தான் உள்ளாவது மனதுக்கு மிகுந்த மகிழ்வை தருவதாக கூறும் இவர் ஆங்கிலக் கலப்புடன் தமிழை உபயோகிப்பதை விரும்புவதில்லையாம்.

தமிழ் நாட்டுத் தொலைக்காட்சியில் அரசாங்கக் கெடுபிடிகளுடன் கடமையாற்றிய நிர்மலாவிற்கு மேலாண்மை ஏதுமில்லாத கனடா, தொலைக்காட்சியின் சேவை வியப்பிலைத் தருகிறதாம்.

குடும்ப நிகழ்ச்சிகள் நடாத்தும் போது கிடைக்கும் பல சுவாரஸ்யமான விடயங்களை பகிரும் அவர், ஒரு முறை சகோதரி ஒருவரிடம் உங்களுக்கு கணவர் பணிவிடை செய்யும் நிலை ஏற்பட்டால் எதைச் செய்யச் சொல்வீர்கள் என்று வினவிய போது

"தலை வாரி பூச் சூடி விட வேண்டும்" என்று அவர் அளித்த பதிலையும், வேறொரு சகோதரர் விடுதலைப் புலிகளை நான் ஆதரிக்கிறேன் ஆனால் என் மனைவிக்கு அதைப்பற்றியே அக்கறை இல்லையே என ஆதங்கப்பட்டதையும் குறிப்பிடுகிறார்.

தற்போது ரொறொன்ரோ நீதி மன்றத்தில தமிழ் மக்களுக்காக "மொழி மாற்று" பணியிலும் நிர்மலா சுரேஷ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# இயற்கையுடன் இணைந்து வாழ்வது நோய்களைத் தவிர்க்கும்

எமது தற்போதைய அன்றாட வாழ்வில் இயற்கைத் தன்மை பொதிந்த சாரியல் வாழ்வு முறைமை அருகி வருகிறது.

எதிலும் செயற்கை மலிந்து விட்டது. காலையில் நாம் கண் விழிக்கும் தேனீர், கோப்பியிலிருந்து தொடங்கும் செயற்கை வாழ்வியல் தன்மை இரவு படுக்கைக்கு செல்லும் வரை தொடர்கிறது. மனித உறவுகளிடையேயான அன்பில் கூட செயற்கைத் தன்மையே காணப்படுகிறது.

நமது முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து தமது வாழ்க்கையை நடாத்தி வந்தனர். உடல், உழைப்பு, ஆரோக்கியமான மனநிலைப்பாடு, கலப்படமற்ற உணவு முறைகள் ஆகியன அவர்களின் உடல் நலத்திற்கு பெரும் உறுதுணையாக இருந்தன ஆகையால் எமது நகர கூட்டுக் காட்டு வாழ்க்கையிலே இயற்கையைப் புறம் தள்ளி செயற்கைக்குள் புதைந்து விட்டோம் என்றுதான் கூற முடியும்.

எமது நகரப்புற உணவியல் முறைகள் எமது ஆரோக்கியத்திற்கு குந்தகம் விளைவிக்கின்றன. காய்கறிகள், மாமிச வகைகள் என்பன செய்கை முறையில் பதப்படுத்தப் படுகின்றன அல்லது விளைவிக்கப் படுகின்றன. அவற்றைக் கூட நாம் எண்ணெயில் வறுத்து அல்லது பொரிக்கும் போது அதிலிருக்கும் கொஞ்ச சத்துக்களும் அழிக்கப்படுகின்றன.

இவ்வாறான வாழ்வியல் முறை காலப் போக்கில் உடற் கோளாறுகளுக்கும், மன நோய்களுக்கும் காலாக அமைகின்றது. நாம் அன்றாட வாழ்வில் செயற்கையுடன் அவ்வாறிக் கொண்டிருந்தாலும் இயற்கையுடன் இணையச் சந்தர்ப்பங்கள் முற்றாக மூடப்படவில்லை.

### மனப்பயிற்சி

மன அழுத்தங்களே பல நோய்களுக்கு காரணகர்த்தாக்களாக அமைகின்றன. மன நிலையை அமைதியுறச் செய்வதற்கு எளிய பயிற்சிமுறை ஒன்று உள்ளது. இப் பயிற்சி முறைக்கு வயது பாகுபாடில்லை. இதனால் மனம் ஒருமைப்பட்டு மன அழுத்தமில்லாத நிலைமை உருவாக்கலாம்.

படுத்துக் கொண்டோ, உட்கார்ந்த நிலையிலோ இப் பயிற்சியை செய்யலாம். மூச்சை முடிந்தவரை உள்ளிழுத்து நிறுத்தி "உம்" என்ற தொனியை ஆழமாகவும் நிதானமாகவும் ஒரே மாதிரியாக சொல்வது பலனைக் கொடுக்கும். அறிவியல் ரீதியாக நுரையீரலும், நரம்பு மண்டலமும், மனமும் இப் பயிற்சியினால் மிகுந்த ஆரோக்கியத்தை பெற்றுக் கொள்வதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. தொய்வு நோய, நரம்புத் தளர்ச்சி, மனநோய்கள் அனைத்தையும் குணமாக்கக் கூடிய இப் பயிற்சியினால் துக்கமின்மை நோயும் அகற்றப்படும்.

## இயற்கையும் உடல் நலமும்

### கர்ப்பப்பை இறக்கம்:

கற்பப் பை இறக்கத்தையும் இயற்கை முறையில் குணப்படுத்த முடியும். இரண்டு நாட்களுக்கு பழச்சாறு வகைகளை மட்டும் அருந்திக் கொண்டு இயலுமான வரை வயிற்றினை வெறுமையாக வைத்திருக்க வேண்டும். இல்லாதுபோனால் பச்சைக் காய்கறிகள், பால், பழங்கள் மட்டுமே அருந்த வேண்டும். தேனீர், கோப்பி, உப்பு, சீனி ஆகியன முற்றாக தவிர்க்கப் பட வேண்டும். 15 நாட்களுக்கு பூரண ஓய்வில் இருப்பது நலம்.

மல்லாந்து படுத்த நிலையில் கால் முட்டியை மடக்காமல் ஒரு காலை உயர்த்துங்கள்; மாறி, மாறி, வலது இடது கால்களை உயர்த்திய பிறகு இரு கால்களையும் உயர்த்துங்கள் பின்னர் ஒரு துவிச்சக்கர வண்டியை செலுத்துவது போல கால்களால் செய்யுங்கள். தொடர்ந்து இதனை செய்து வருவது மிகுந்த பலனைக் தரும். முக்கியமாகத் தூங்கும்போது பிட்டத்துக்கு அடியில் ஒரு கடினமான தலையணையை வைத்துக்கொள்வது நல்ல பலனைத்தரும்.

### நீரிழிவு

நீரிழிவு நோய்க்காளானவர்கள் உணவுக் கட்டுப்பாட்டிலே கவனம் செலுத்த வேண்டும். காய்கறிகளையும், கீரை வகைகளையும் வேக் வைத்துச் சாப்பிட வேண்டும். பாகற்காய்களை தினமும் உணவில் சேர்த்துக் கொள்வதோ அல்லது சாறெடுத்து பருகுவதோ நல்லது.

குறிப்பாக நீரிழிவின் தாக்கத்திற்கு ஆளானவர்கள் தமது உடல் எடை அதிகரிக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் தவறாது உடற் பயிற்சி செய்வது அவசியம்.

### ஆஸ்த்துமா

முடிந்தவரை இவர்கள் மன இறுக்கத்தை தவிர்த்துக் கொள்வதுடன் இரவு உணவை இரவு ஏழரை மணிக்கு முன்பாக முடித்துக் கொள்ள வேண்டும். பூசனி, பூவன்வாழைப் பழம் (தேன் கதலி), பாகற்காய், கிழங்கு வகைகள் ஆகியவற்றை உணவில் தவிர்க்க வேண்டும் சுமாராக உள்ளி, இஞ்சி, முருங்கைக் காய், முருங்கை இலை, தேங்காய், தேன் இவற்றினை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### மூலநோய்

மூல நோயுள்ளவர்களுக்கு மலச்சிக்கல் வராதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். தினசரி நூறு கிராம் சிறிய வெங்காயத்தை ஆமணக்கெண்ணையில் வதக்கி உண்பது பலன் தரும்.

இயற்கை தந்துள்ள செல்வத்தினை பயன்படுத்தி செயற்கையை புறம் தள்ளினால், இனிதாக வாழ முடியும்

தொகுப்பு:
வர்ஷிகா-வைஷ்ணவி

# செவ்விந்தியர்களின் உரிமைக்கு உறுதியுடன் குரல் தருகிறார்

மேரி எலின் ரியூபெல் 33 வயதானவர். கனடா நாட்டின் சொந்தக்காரர்களான செவ்விந்தியர்களின் உரிமைகளுக்காக உறுதியுடன் குரல் கொடுத்து வரும் மேரியின் தந்தை ஒரு செவ்விந்தியர். கனடாவில் தற்போது 1.5 மில்லியன் பூர்வீகக் குடிமக்கள் வசிப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது மேற்கு நாடுகளின் குடியேற்றல் நடவடிக்கைகளின் பின்னர் இச் செவ்விந்திய மக்கள் பெரும் ஒடுக்கு முறைக்கு ஆளாகியுள்ளார்கள்.



சட்டத்துறையில் கேம்பிரிட்ஜ், ஹவார்ட் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்ற மேரி செவ்விந்திய மக்களின் உரிமைக்காக சட்டரீதியில் பல கோரிக்கைகளை முன் வைத்துள்ளதுடன் அதற்காக பாடுபட்டும் வருகிறார். பூர்வீக குடிமக்கள் எந்த இன மக்களுக்கோ அல்லது அரசாங்கங்களுக்கோ குறைவானவர்கள் அல்ல; அவர்களுக்கும் சம உரிமை கொடுக்கப் பட வேண்டும் என்பது இவரது முக்கியமான கோரிக்கையாகும்.

1876 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்தியர்களின் சட்ட மூலம் தொடர்பாக இவரது கோரிக்கைகள் அமைகின்றன. செவவிந்திய மக்களுக்கு சுயாதீனமாக ஒரு நாடு அமைக்க உரிமை உண்டு என்று இவர் கூறிவருவது பலரின் கவனத்தினை திருப்பியுள்ளது.

பூர்வீக மக்களின் நிலங்களை மெல்ல மெல்ல வந்தேறு குடிகள் சுவீகரம் செய்யும் நடவடிக்கைகள் இந்த உலகிலிருந்தே முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமென்பதும் மேரியின் இலட்சியமாம்.


உங்கள் புகைப்படத் தேவைகளுக்கு:
கணணியில் உங்கள் விருப்பத்திற்கு
ஏற்ற வகையில் வடிவமைக்க இன்றே நாடுங்கள்
Image CREATIVE
Sutha / Viyas
Tel: 01 47 50 82 54 / 01 46 55 48 19
GLS Video - Tel: 04 78 26 10 34
23 Rue Guillermin, 69500 Bron.

Métro La Courneuve [லாக்கூர்னெவ்] இல்

# மிகப் பிரமாண்டமான பல் பொருள் அங்காடி

# KOPAL & Co

## Cash & Carry




**அரிசி வகைகள், மீன் வகைகள்,**
**மரக்கறி வகைகள் மற்றும்**
**அத்தியாவசியப் பொருட்கள்**
**யாவும் மலிவு விலையில்**
**பெற்றுக்கொள்ள:**

*KOPAL & Co Cash & Carry*

குறிப்பு: 300 பிராங்குகளுக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு ஒரு **லக்ஸ்பிறே பால்மா** பெட்டி இலவசம். அத்துடன் குறிப்பிட்ட இடங்களிற்குப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான இலவச விநியோக வசதிகளும் செய்து கொடுக்கப்படும்

# KOPAL & Co

## Cash & Carry

*39 Rue Maurice La Chatre, 93120 La Courneuve.*


*Tel: 01 48 37 00 43*

*லாச் சப்பலில் மக்கள் ஆதரவுடன்*

**கோபால் அன் கோ சூப்பர் மார்சே**

64, Rue Louis Blanc, 75010 Paris.

Tel: 01 40 05 04 50 Fax: 01 40 05 09 90




# காலம் கூறும் நேற்றைய நிகழ்வை... நாளும் மறவோம் நமது பாதையை...

ஒரு சிறிய இடைவெளியின் பின், சாளரத்திற்காக பேனாவினை எடுத்தேன். நெஞ்சு கனக்கிறது.

மனிதர்களாலான இந்தப் பூகோளத்தில் ஒரு மனித இனம் வாழ்வதற்காகப் போராடிய கஜனும், நாதனும் கொலை செய்யப்பட்டு விட்டார்கள்— சொல்கிறார்கள்.

நான் அப்படி நினைக்கவில்லை எங்களைப்போல பிறப்புடன் இவ்வுலகில் பிரவேசித்தவர்கள்தான் இவர்கள். தாங்கள் பிறந்த கணத்திலிருந்து தங்களது இருப்பை உணர்ந்து கொண்ட பிரஞ்ஞையுடன் தம்மைச் சூழவுள்ள மனிதவுலகத்தினை எதிர் கொண்டார்கள். அந்த எதிர் கொள்ளல் அவர்களுக்களித்தது மரணத்தையும் வென்றதான ஒரு வாழ்வு.

இந்த உலகத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனிமனிதப் பிறவிகளாக இருந்தபோதும், எங்களது இருப்பே எங்களது முதன்மையான உண்மையாகவிருக்கின்றது. எங்களது இருப்பு நிலையிலிருந்தே நாங்கள் எங்களையும், இந்த உலகத்தினையும் இனங்கண்டு கொள்கிறோம். நாங்கள் தான் எங்களது வெளிச்சமும் இருப்புக்கு ஆதாரமுமாகும்.

மனித குலத்திலிருந்து தொடங்கும் இந்தச் சிந்தனை எல்லாவற்றிற்கும் மேலாக மனிதவிருப்பிற்கே முக்கியத்துவம் கொடுக்கிறது. மனிதன் என்பவன் வானத்திலிருந்து பூமியில் விழுந்த நட்சத்திரமல்ல. மனிதவிருப்பிலிருந்தே மனிதனின் இயல்பு தோன்றுகிறது. மனிதனே தன்னைப் படைத்து, உருவாக்கம் செய்கிறான். எனவே, மனிதனே மனிதனின் சிருஷ்டிகர்த்தா.

நாங்கள் தனிமனிதப் பிறவியாக வாழ்ந்த போதும், மனித உறவு என்ற சங்கிலித் தொடரில் பிணைக்கப்பட்டிருக்கிறோம். எங்களது இருப்பு சமூக இருப்பு என்ற சமுத்திரத்துடன் சங்கமிக்கிறது. இந்தவுலகம் என்பதே மானுடத்தைக் குறிக்கிறது. இந்த மனிதவுலகத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் தனித்து நின்ற போதும் மற்றவர்களுடன் இணைந்து வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறோம்.

நாங்கள் ஒவ்வொருவரும், எங்கள் ஒவ்வொருவருக்கும் மட்டும் பொறுப்பாளிகளல்ல. நாங்கள் எங்களோடு சேர்ந்து வாழும் மற்றவர்களுக்கும் பொறுப்பாளியாக இருக்கிறோம். அன்பையும் அரவணைப்பையும் நாங்கள் மற்றவரிடத்தில் வேண்டி நிற்கிறோம். நாங்கள் எங்களுக்காக, எங்களின் குறிக்கோளுக்காக, எங்களின் வாழ்விற்காக, இருப்பிற்காக மற்றவர்களை நாடி நிற்கிறோம். எங்களிருப்பின் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் காரணமாக நாங்கள் ஒருவரோடுவர் பிணைக்கப் பட்டிருக்கிறோம். எங்களைப் புரிந்து கொண்டவர்களுடன் எங்களது போக்கிற்கும், பார்வைக்கும் ஒத்திசைவான மாற்றங்களுடன் நாங்கள் உறவு கொள்ளும் போது அந்தக் கூட்டுறவு எமது தனித்துவத்தைப் பேண ஏதுவாகிறது. இந்த உறவில் நாங்களும் மற்றவர்களும் அவரவர் தனித்துவ அடையாளங்களை இனங்கண்டு, அதைப் புரிந்துகொண்டு, அந்தப் புரிந்துணர்வால் பிணைத்துக் கொள்ளும் போது எமது தனித்துவத்தின் சுதந்திரம் மேம்பாடு கொள்கிறது.

மற்றவர்களுக்கான உறவு ஒத்திசைவாக அமையும் போது தனிமனிதவாழ்வு நிறைவுடையதாக அமைகிறது. கூட்டு வாழ்வு இசைவாக அமைந்து, எமது மனிதத்துவத்தினையும் சுதந்திரத்தினையும் மேம்பாடு செய்யுமானால் எமது இருப்பு ஆக்கபூர்வமானதாக, அர்த்த பூர்வமானதாக அமையும்.

ஆம்! காலத்தில் முகிழ்கிறது வாழ்வு. பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிலைக்கிறது வாழ்வு. இந்தக் காலம்தான் மனிதவிருப்பின் எல்லைக் கோட்டை இடுகிறது. காலமும், நிலையாமையும், மரணமும் மனித இருத்தலின் உண்மைகள்.

இருப்பு என்பது காலத்தின் பாதையால் நடைபோடும் பயணம். இந்தப் பயணத்தில் நாங்கள் ஒரு கணம் தரித்துநிற்க முடியாதவாறு காலம் எங்களை நகர்த்திச் செல்கிறது. இழுத்துச் செல்கிறது. நாங்கள் நடந்து முடித்தது இறந்த காலமாகவும், நடந்து கொண்டிருப்பது நிகழ்காலமாகவும், நடக்கப் போவது எதிர் காலமாகவும் எங்களுக்குத் தென்படுகிறது.

எமது வாழ்வனுபவம் எப்பொழுதுமே நிகழ்காலமாகவே கூட விரிகிறது. இந்த அனுபவமே நிதர்சனமானதும் கூட. இறந்துபோன காலத்தில் புதைந்துபோய் விடாமலும், எதிர்காலத்தையே சதா எண்ணியிருக்காமலும் நிகழ்காலத்தில் வாழ்வதுதான் அர்த்த பூர்வமானது. ஏனெனில், காலத்தில் நிகழும் எமது பயணம் மரணத்துடன் முடிவடைந்துவிடும். நிலையற்ற இவ்வுலகில் நிலையானதொன்று என்றால் அது மரணம்தான். எமது உயிர்ப்பின் கணத்திலிருந்து மரணம் எம்மோடு உடன்பிறப்பு எடுத்திருக்கிறது. எமது இருத்தலின் முடிவாக மரணம் எங்களை எதிர் கொண்டு நிற்கிறது.

மரணம் என்பது எங்களிருப்பு நிலையின் தவிர்க்கமுடியாத உண்மை. மரணத்தின் பிடியிலிருந்து எவரும் தப்பிவிட முடியாது. அது வாழ்வினொரு நிகழ்வாக என்றோவொருநாள் எதிர்கொள்ள வேண்டியது. எனவே, நிதர்சனமான எதிர்காலத்தினை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ள வேண்டிய கடமைப்பாடு எங்களிடம் உண்டு. பிறப்பிற்கும், மரணத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எமது இருப்பானது மற்றவர்களுக்கு பயனுள்ளதாக இருக்க வேண்டும். அப்போதுதான் எங்கள் இருப்பின் வரலாறு எங்களது மரணத்தையும் வென்று வாழும்.

கவிஞர் அய் ருங் கின் கவிதை வரிகளோடு எங்கள் சிந்தனைகளை விரிவுபடுத்துவோம்.

*அசைவுகள் இல்லையேல்*<br>
*வாழ்க்கையே இல்லை.*<br>
*வாழ்வது என்பது முன்னேறுவது!*<br>
*மரணம் என்பது தவிர்க்க முடியாதது.*<br>
*ஆனாலும்*<br>
*நாம் முழு சக்தியை, முழு வீச்சோடு*<br>
*பயன்படுத்தியே தீரவேண்டும்!*

**தொகுப்பு: வர்மன்**

## கஜனின் கவிதைகள்

### விடியல்கள்

*கொடிய இருளின்*<br>
*கறுப்பு போர்வையை*<br>
*களையத்துடித்து...*<br>
*எங்கோ....*<br>
*வெகுதூர*<br>
*மங்கலாய்த் தெரியும்*<br>
*நம்பிக்கை*<br>
*நட்சத்திரப் பார்வையை*<br>
*நோக்கி*<br>
*கூவிய சேவலை*<br>
*துரத்திப் பிடித்து*<br>
*கழுத்தை நெரித்து*<br>
*குருட்டு எண்ணத்தால்*<br>
*சிறகையும் வெட்டி*<br>
*நியாயக் கண்ணுக்கு*<br>
*தெரியாமல் புதைத்தாலும்*<br>
*ஏனைய...*<br>
*புரட்சிச் சேவல்கள்*<br>
*கூவாமல் போகுமா....?*<br>
*அன்றி....,*<br>
*நாளைய பொழுது*<br>
*விடியாமல் போகுமா....?*

*கஜன் 1989*

## குறுக்கெழுத்துப் போட்டி இல.-8

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | 2 |
| | 3 | | | 4 | 5 | | |
| 6 | | | | | | 7 | |
| ■ | | ■ | 8 | | | 9 | ■ |
| 10 | 11 | | | 12 | 13 | | |
| | | | | | 14 | 15 | |
| | | | | | 16 | | 17 |
| 18 | | | | | | | ■ |

பெயர்:..............................................................

முகவரி:............................................................

.......................................................................

.......................................................................

போட்டியில் கலந்துகொள்பவர்கள் உங்கள் பதில்களை 10-12-96க்கு முன்பாக கடித உறையில் குறுக்கெழுத்துப் போட்டி - 8 எனக் குறிப்பிட்டு பெயர் பகுதியையும் இணைத்து அனுப்ப வேண்டும். (ஆ.சி.)

### குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம். 8

**இடமிருந்து வலம் ⊃**

1. போர் வரம்பை மீறிய சிங்கள மன்னனால் தோற்கடிக்கப்பட்ட இலங்கை மன்னன். (5)
6. காதல் (3)
7. கொளுக்கட்டையை நினைவுபடுத்தும் அங்கம் (2)
11. நிரப்பிரிவினையை எதிர்க்கும், நாடும், சாதியை ஆதரிக்கும் நாடும் இது (4) புதிராக இல்லை?!
18. வடமேல் மாகாணத்தின் பண்டைய சிவத்தலம் (7)

**மேலிருந்து கீழ் ∪**

1. இந்தத் தமிர் சுவைமிக்கது. (3)
2. சுசப்பானது இது (3)
3. புண் (3)
4. கால்நகை (3)
9. போர்வாமத வாதிகளால் விழுங்கப்பட்ட முஸ்லிம்களின் விடுமுறை நாள் (2)
10. வில், பயிர்ச்செய்கைக்கு இதன் தேவையும் அவசியம் (3)
12. மண அறை அலங்காரத்தில் இடம்பெறும் ஓர் அபூர்வ மிருகம்? (2)
15. இசைக்கு இதுவும் முக்கியம் தான் (3) தட்டப்படுவது.

**வலமிருந்து இடம் ⊂**

2. புத்தம் இலங்கை மணித்திருநாட்டில் பரவியதால் நுழைந்த மொழி (2)
5. தவறுதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட நாடு? கண்டம் (5)
14. அடங்காப்பிடாரிகளுக்குப் பொறிவைக்கப்பட்ட நகர் (5)
16. அண்மையில் பிரான்சினால் அங்கீகரிக்கப்பட்ட நாடு (6)

**கீழிருந்து மேல் ∩**

8. நெல்லின் உடன்பிறப்பு.... (3) குழம்பியுள்ளது
9. குளிருக்குதவுவது இது (4) குழம்பியுள்ளது
13. சிங்களவராகும் இலங்கையின் பழங்குடிகள் இவர்கள். (3)
17. சுதந்திரத்துக்கு விதையான முதல் வீரங்களை (3)

### குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் - 7

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தி [1] | வி | ப | ன் | ■ | ட | க | ச [2] |
| ா | ச [3] | ■ | அ [4] | க [5] | ளை | ர் | தீ [6] |
| வி | த | பொ [7] | ■ | ரு | தோ [8] | த [9] | ய |
| ட | ங் | ல | ம் | ம் | ர | பு | வி [10] |
| ர் | கை | ந | த | பு [11] | ண | தா | ம் |
| க [12] | வி | ஞ | ட | ய | ம் | ர | ந |
| ர் | பா | லை | ஓ [13] | ல் | மை | ன் | வ [14] |
| ■ | அ [15] | ந் | தி | ■ | லை | வீ | தே [16] |

*குறுக்கெழுத்துப் போட்டி இல. 7 இற்கு சரியான பதில் எழுதிய ஈழமுரசு வாசகர்களில் குலுக்கல் மூலம் அதிஸ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.*

**திரு. க. கங்காதரன்**<br>
CALEDON ROAD<br>
EAST HAM, LONDON-England

*இவருக்கு "பாலம்" ஆறு இதழ்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.*

குறுக்கெழுத்துப் போட்டி. இல.7. இற்குச் சரியான விடையெழுதிய வாசகர்கள் விபரம் வருமாறு:

**ஜேர்மனி;**

1. ஞானேஸ்வரி சிவஞானசுந்தரம். SILBERSTEIN STR BERLIN
2. பத்மநாதன் பிரபாகரன். ELBERSDORFER-STR PORSCHEN DORF.
3. S.சிவா. MAGDEBURGER STR ELLWANGEN

**சுவிஸ்:**

1. ச. விஜயவேல் SCHOENTAL WEG OBERARTH 6414.

# புகலிட நிகழ்வுகள்

# மாவீரர்கள் நாதன் கஜனுக்கு சுவிசில் அஞ்சலிக் கூட்டங்கள்

கடந்த 26.10.96 அன்று பாரிஸ் நகரில் இனம் தெரியாதவர்களால் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் லெப். கேர்ணல் கந்தையா பேரின்பநாதன், ஈழமுரசு ஆசிரியர் கந்தையா கஜேந்திரன் ஆகியோரின் மறைவை ஒட்டி சுவிசில் சூரிச், பேர்ன், லவுசான் ஆகிய மாநிலங்களில் அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்றன.

இவ் அஞ்சலிக் கூட்டங்களில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு மறைந்த மாவீரர்கள் இருவருக்கும் தமது அஞ்சலியைத் தெரிவித்தனர். இக் கூட்டங்களில் தமிழீழ தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு அறிஞர்கள், ஆசிரியர்கள், மதத்தலைவர்கள் போன்றோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். இவர்கள் மறைந்த மாவீரர்கள் பேரின்பநாதன், கஜேந்திரன் ஆகியோர் தமிழீழ போராட்டத்திற்கு ஆற்றிய சேவைகள், அவர்களிடம் இருந்த ஆளுமைகள் போன்றவற்றை தெளிவாக எடுத்துரைத்தனர்.

மேலும் இக் கூட்டங்களிலெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. நடராஜா முரளீதரன் பங்கு கொண்டு உரையாற்றினார். அவர் தனதுரையில், இன்று வேகமாக முன்னேறிவரும் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வெளிநாட்டில் வாழும் தமிழீழ மக்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. இதை நன்குணர்ந்த சிறீலங்கா அரசு சர்வதேச ரீதியாக எமது போராட்டத்திற்கு வளர்ந்து வரும் ஆதரவை தடுத்து நிறுத்த முயன்று வருகின்றது. அதற்காக வெளிநாடுகளை நிர்ப்பந்தித்து, விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை கைது செய்தல், நிர்ப்பந்தங்கள், நெருக்குதல்களை உருவாக்குதல், அவர்களுக்கெதிரான பிரச்சாரங்களை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. இவை அனைத்தும் பயனளிக்காமல் போனதால், இன்று தனது கைக்கூலிகளைக் கொண்டு கொலை முயற்சியில் ஈடுபட்டுவருகிறது என்று கூறினார்.

இன்று சிறீலங்கா இராணுவம் எமது பிரதேசங்கள் சிலவற்றை கைப்பற்றி தற்காலிக வெற்றியை பெற்றிருக்கலாம். ஆனால் அப் பிரதேசங்களை நீண்டகாலம் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது. திரும்பவும் இப் பிரதேசங்களை புலிகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவார்கள். கடந்த காலங்களை நாம் திரும்பிப் பார்ப்போமேயானால், அன்று வடமராட்சி கைப்பற்றப்பட்டபோது அதற்கெதிராக நெல்லியடியில் கரும்புலித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இந்திய இராணுவம் ஆயிரக் கணக்கில் தங்கள் படைகளைக் குவித்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிட்டார்கள். ஆனாலும் விடுதலைப் புலிகளை அவர்களால் தோற்கடிக்க முடியவில்லை. அண்மையில் எமது பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டபோது முல்லைத்தீவு இராணுவ முகாம் தகர்க்கப்பட்டு 1400க்கும் மேற்பட்ட இராணுவம் கொல்லப்பட்டு ஒரு புதிய பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ்வந்தது.





ஆகவே மக்கள் பலம் இருக்கும் வரை எமது போராட்டத்தை தடுத்து நிறுத்திவிட முடியாது என்று தனது பேச்சில் குறிப்பிட்ட அவர், கடந்த காலங்களில் தவறான தலைமையின் கீழ் வழிதவறிப்போன எமது தம்பிமார் எமது போராட்டத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்கள் மனம் திருந்தி தாம் எந்த இலட்சியத்திற்காக இயக்கங்களில் சேர்ந்தோம் என்பதை நினைவுபடுத்தி அந்த இலட்சியத்தில் இன்றும் எந்த இயக்கம் போராடிக் கொண்டிருக்கின்றது என்பதை அவர்கள் நன்குணரவேண்டும். அப்படி அவர்கள் உணர்வார்களானால் நிச்சயம் எமது போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளை கைவிட்டு எமது போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவார்கள் என்றும் திரு. முரளிதரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

# இத்தாலியில் நடந்த தேசிய மாவீரர் நாள்

தமிழீழத் தேசிய மாவீரர் நாள் இத்தாலி வெரிசெல்லி நகரிலுள்ள பொன்சோலை மலைப்பிரதேச தேவாலய மண்டபத்தில் கடந்த 17.11.96 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு எழுச்சி பூர்வமாக இடம் பெற்றது. இந் நிகழ்வில் வெரிசெல்லி, மற்றும் மில்லானோ, பொலோனியா, றெஜியோ எமிலியா நகரங்களில் வசிக்கும் தமிழ்மக்கள் உணர்வு பூர்வமாகப் பங்கு பற்றினார்கள்.







ஈகைச்சுடரை மாவீரன் கப்டனின் சகோதரி அவர்கள் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து தேச விடுதலைப் போரில் மாவீரர்களான போராளிகளுக்கும், போரில் உயிர் நீத்த பொது மக்களுக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து கடந்த 26.10.96 அன்று தமிழீழ விடுதலைப் போருக்கு வலுச்சேர்த்து பாரிஸ் மண்ணில் வித்தாகி வீழ்ந்த எம் மாவீரர்கள் லெப். கேணல் நாதன் மற்றும் ஈழமுரசு பத்திரிகை ஆசிரியர் கஜன் ஆகியோரின் மரணம் குறித்து தமிழீழத் தேசியத் தலைவரால் விடுக்கப்பட்ட செய்தி வாசிக்கப்பட்டது.

கலைநிகழ்ச்சிகளில், மலராஞ்சலி நடனம், கவிதை, பேச்சுக்கள், கரும்புலிகளின் தற்கொடையையும், உறுதியையும் சித்தரிக்கும் அபிநய நடனங்கள் என்பன இடம் பெற்றன. இந் நிகழ்ச்சிகளில் இத்தாலியில் உள்ள தமிழ் பாடசாலை மாணவிகளும், கலைஞர்களும் பங்கு பற்றி சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில் தமிழீழத்தில் போரில் காயமுற்று அவயவங்களை இழந்து எவ்வித சுயநல நோக்குமின்றிச் செயற்படும் வெண்புறா செயற்கை அவயவ நிறுவனத்தின் நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. இறுதியில் நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் என்ற பாடலுடன் இவ்விழா முடிவுற்றது.

# நெதர்லாந்து றோமெண்டில் தமிழ் சிறார் பாடசாலை

நெதர்லாந்தில் றோமெண்ட் நகரில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ச் சிறார்களின் நலன்கருதி தமிழ் மொழியினை கற்பிக்கும் உயரிய நோக்கோடு தமிழ்ச் சிறார் பாடசாலை ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஊதியம் பெறாமல் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.



நீண்டகாலமாக இப் பகுதியில் ஒழுங்காக செயற்படும் ஒரு தமிழ்ப் பாடசாலை இல்லாத குறையை இப் பாடசாலை நிவர்த்தி செய்கிறது.

இப் பாடசாலையில் தமது சிறார்களை சேர்க்க விரும்பும் பெற்றோர் 070 346 1963 அல்லது 077 373 2661 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

# ஜேர்மன் எடன்கோபனில் தமிழாலய விழா

ஜேர்மன் உலகத் தமிழர் இயக்கத்தின் எடங்கோபன் தமிழாலயத்தின் தமிழாலய விழா கடந்த 05.10.96 அன்று சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இவ்விழாவில் மங்கல விளக்குகளை உ. த. இயக்க கல்விச் சேவைப் பணிப்பாளர் திரு இ.நாகலிங்கமும், உ.த.இ. மூத்த நடன ஆசிரியை திருமதி.வானதி தேசிங்குராஜாவும் ஏற்றி ஆரம்பித்து வைத்தனர்.

இந் நிகழ்வில் தமிழாலய மாணவர்களினால் தமிழாலய கீதம் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து வரவேற்புரையை தமிழாலய ஆசிரியர் திரு.வ. மனோகரன் வழங்கினார். தொடர்ந்து தமிழாலய மாணவர்களின் பேச்சு, அபிநய நடனம், கவியரங்கம், பட்டிமன்றம், நாடகம் ஆகியனவும் ஸ்ருட்காட் தமிழாலய மாணவிகளின் விடுதலைக் கானங்களுக்கான நடனங்களும் இடம்பெற்றது.

சிறப்புரை உ.த.இ. கல்விப் பணியின் பொறுப்பாளர் திரு இ.நாகலிங்கமும், நன்றியுரையை தமிழாலய நிர்வாகி செல்வன் சி.சண்முகநாதனும் வழங்கினார். நிகழ்ச்சியில் இறுதியாக வளரும் இசைக் கலைஞர்களின் விடுதலை கானம் இசைக்கப்பெற்று விழா இனிதே முடிவுற்றது.

# அமெரிக்கா ஸ்ரீலங்கா மீது திடீர் அக்கறை கொள்வது ஏன்?

*சுதாகரன், பேர்லின்*

❓ தாயக மீட்பைப் பற்றி அக்கறை இல்லாதிருக்கும் சில புகலிடத் தமிழர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

✍ 21ம் நூற்றாண்டில் உருவாகப் போகிற மன நோயாளிகள்.

*ராஜன், சூரிச், சுவிஸ்*

❓ லக்ஷ்மன் கதிர்காமர் தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

✍ உஷ்... அது பரம ரகசியம். அதையெல்லாம் வெளியே சொல்ல முடியாது.

*சி. சாந்தினி, பாரிஸ் 10*

❓ பாரிஸ் படுகொலைகள் எதைக் காட்டுகின்றன?

✍ எமது தாயக விடுதலையை நோக்கி நாம் இன்னமும் கடுமையாக உழைக்க வேண்டுமென்பதை.

*ந. வதனகுமாரி, சுவிஸ்*

❓ புகலிட நாடுகளிலும் சமூகம், சாதி அறிந்துதான் சிலர் திருமணச் சடங்காக இருந்தாலும் சரி, சாமத்தியச் சடங்காக இருந்தாலும் சரி விழாவில் கலந்து கொள்கிறார்கள். இவர்கள் பற்றி....

✍ நாய்க்கு நடுக் கடலிலும் நக்குத் தண்ணிதான்

*மு. பரமலிங்கம், லண்டன்.*

❓ புகலிடத் தமிழர்களான நாம மறக்க வேண்டியது எது? மறக்கக் கூடாது எது குப்தனாரே?

✍ மறக்க வேண்டியது அகதி வாழ்வின் தற்காலிக வதிவிடச் சலுகைகள். மறக்கக் கூடாதது எமது தாயகமே எமக்கு என்றைக்கும் நிரந்தரம் என்பதை.

*சி. கமலாகரன், டென்மார்க்*

❓ உலக நாடுகள் செவ்வாய் கிரகத்திற்கு மனிதனை அனுப்புவதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அங்கே எமது உடன் பிறப்புகளை வவுனியாவைத் தாண்ட விடாமல தடுத்து வைத்திருக்கும் ஸ்ரீலங்கா அரசின் செயல் பற்றி...

✍ இவர்கள் மனிதனை விண்ணுக்கனுப்பி சாதனை படைக்க நினைக்கிறார்கள். அவர்கள் மண்ணுக்குள் அனுப்பி அழித்து சாதனை படைக்க நினைக்கிறார்கள்.

## சித்திரகுப்தனார் பதில்கள்

*க.பத்மா, பிராங்பேட், ஜேர்மனி.*

❓ கண்டியின் கடைசி மன்னன் விக்கிரமராஜசிங்கன் தமிழனா? சிங்களவனா?

✍ வீரபாண்டிய கட்டப்பொம்மனைப் போல் தமிழ் பேசிய தெலுங்கன். வளர்ப்பால் தமிழன்.

*அ.சிவசங்கரன், திருச்சி, தமிழ்நாடு*

❓ அமெரிக்கா ஸ்ரீலங்கா மீது திடீர் அக்கறை கொள்வது ஏன்?

✍ எல்லாம் இந்தியாவிற்காகத் தான். முன்பு இந்தியாவில் தங்களது ஆட்சியைத் தக்க வைக்க வேண்டுமானால் இலங்கையை முதலில் தாங்கள் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆங்கிலேயர்கள் நினைத்தார்கள். இன்று ஸ்ரீலங்காவில் உறுதியாக காலூன்றுவதன் மூலம் இந்திய அரசியலை, இந்தியச் சந்தையைக் கட்டுப்படுத்திவிடலாம் என்று அமெரிக்கா நினைக்கிறது. பாகிஸ்தானின் இஸ்லாமிய தீவிரவாதததை விட ஸ்ரீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாதம் பல வகையிலும் தமக்கு சாதகமானது என்று அமெரிக்கர்கள் நினைத்திருக்கலாம்.


வாடிக்கையாளரின் மனங்களை வெல்லும் சேவையில்

# மக்கள் கடை

இது உங்கள் கடை



மாவீரர்களுக்கு எமது வீர வணக்கங்கள்

பிரதி வெள்ளி தோறும் இறக்குமதி செய்யப்படும் முளைக்கீரை, அகத்திக்கீரை, முருங்கைக்கீரை உட்பட அனைத்து இலைகறி வகைகளையும் பசுமையாகப்பெற்றுக் கொள்ளலாம்.

கடலுணவு, தானிய வகைகள் உட்பட அனைத்து மளிகைப்பொருட்களையும் நீங்கள் எதிர்பார்க்க முடியாத மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

**மக்கள் கடை**

59 Rue louis blanc,
75010 PARIS.
M°: La chappelle ou Gare du Nord


# ஈழமுரசு

## வாசகர் கருத்து கணிப்பு

ஈழமுரசில் வரும் ஆக்கங்கங்கள், தொடர்கள், செய்திகள்,தொடர்பாக வாசகர்களுடைய கருத்தை அறிய விரும்புகின்றோம். ஈழமுரசின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட வாசகர்கள் அனைவரையும் கீழ் காணும் வினாக் கொத்தை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். நேரடியாக அனுப்ப சிரமமிருப்பின் ஈழமுரசு விற்பனை முகவர்களிடம் படிவங்களைக் கையளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமக்கு நேரடியாக அனுப்புவதற்கான முகவரி.

*ஈழமுரசு வாசகர் கருத்து*
EELAMURASU
22, RUE PERDONNET, 75010 PARIS, FRANCE

அனுப்புவர் பெயர்:........................................
சந்தாதாரராயின் சந்தா இல:........................................
முகவரி:........................................
........................................

(உங்கள் பெயர் விபரங்களை தவிர்க்க விரும்பின் தவிர்க்கலாம்)

| | நல்லது | பரவாயில்லை | மாற்றவேண்டும் |
| --- | --- | --- | --- |
| சிறுவர் முற்றம் | | | |
| பெண்கள் பகுதி | | | |
| உலகக் கண் | | | |
| உலகச் செய்திகள் | | | |
| காக்கை வன்னியன் | | | |
| சடையர் பக்கம் | | | |
| ஆசைத் தம்பி | | | |
| நண்டார் பக்கம் | | | |
| இந்தியப் பக்கம் | | | |
| சினிமாப் பக்கம் | | | |
| சாளரம் | | | |
| சிறுகதை | | | |
| கேள்வி பதில் | | | |
| புகலிடப் பக்கம் | | | |
| பத்தோடு பதினொன்று | | | |
| தமிழரசன் | | | |
| செய்திப் பக்கங்கள் | | | |
| பத்திரிகை அமைப்பு | | | |
| பத்திரிகையின் தரம் | | | |

வேறு ஏதாவது விடயங்கள் தொடர்பாக உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள்.
(தேவையாயின் தனியான கடதாசியில் விபரம் குறிப்பிடவும்)

........................................
........................................
........................................

ஈழமுரசு
Eelamurasu Weekly

# பாரிசில் ஒரு புறநானூற்றுத் தாய்

சமாதானத்தை நிலைநாட்டப் போகிறேன், வடக்கு கிழக்குப் பகுதியை அபிவிருத்தி செய்யப் போகிறேன், யாழ்ப்பாணத்தை மீளக் கட்டி எழுப்பப் போகிறேன் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு போரைத் தொடர்வதற்கு ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பாரிஸ் மண்ணிலே வந்து கால் வைத்த 24.11.96 ஞாயிற்றுக்கிழமை ஒரு தமிழீழத் தாய், தமிழீழ வரலாற்று ஏடுகளில் பொறிக்கப்பட வேண்டிய செயற்கரிய செயல் ஒன்றைச் செய்திருக்கிறார்.

ஐரோப்பாவிலும் கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மக்களிடம் விடுதலைப் புலிகள் கட்டாயப்படுத்தி பணம் வாங்குகின்றார்கள், அச்சுறுத்தி, அடாத வேலைகள் செய்து பணம் வாங்குகிறார்கள் என்றெல்லாம் புனை கதைகளைசொல்லி, அதனால் புலிகள் இயக்கத்தை உங்கள் நாட்டில் நீங்கள் தடைசெய்ய வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகளிடம் கோரிக்கை விடுத்த சந்திரிகா பாரிஸ் மண்ணிலே வந்திறங்கிய அன்றைய தினம் நடைபெற்ற மாவீரர் தின விழாவிலே ஒரு தமிழீழத்துத் தாய் தன்னுடைய தாலிக் கொடியை கழற்றி தமிழீழ மருத்துவ நிதிக்காக அர்ப்பணித்ததன் மூலம் சந்திரிகாவின் பொய்யுரைகளுக்கும் புனை கதைகளுக்கும் பலத்த சாட்டையடி கொடுத்திருக்கிறார்.

இன்று நேற்றல்ல வரலாற்றுக் காலம் தொட்டே தாலி என்பது தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரை அவர்களின் வாழ்வில் பிரிக்க முடியாத ஒரு அங்கமான மங்கலச் சின்னமாக இருந்து வந்திருக்கிறது. மங்கல நாண் என்று அழைக்கப்பட்டு வந்த அதை அடிமை விலங்கென்று பெண்ணிலைவாதிகள் சொன்னாலும் நம்முடைய பெண்கள் இங்கே புகலிட நாடுகளில் 60, 70 பவுண்களில் தாலிக்கொடி அணிவதை ஒரு சமூக அந்தஸ்த்தாக, பெருமையாக கருதி வந்திருக்கிறார்கள்; வருகின்றார்கள்.

இப்படிப்பட்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட ஒரு சூழலில் வந்த ஒரு தமிழீழத் தாய் தனது தாலியையே தானமாக அளித்த நிகழ்வென்பது தன்னுடைய கணவன் போர்க்களம் சென்று வீரமரணம் அடைந்துவிட்ட நிலையில் தன் ஒரே மகனான பச்சிளம் பாலகனை வீரமொழி கூறி போர்க்களத்துக்கு அனுப்பி அவனும் அங்கே இறந்துவிட்டான் என்ற செய்தி கேட்டபோது, தானே போர்க்களம் சென்று, தன்மகன் புறமுதுகிடாமல் நெஞ்சிலே விழுப்புண் பெற்று மடிந்தான் என்று அறிந்து பெருமிதம் கொண்ட புறநானூற்றுத் தாயின் செயலுக்கு ஒப்பானது.

தாயகத்தின் விடுதலைக்காக இனிய இளைய உயிர்களை ஈந்து வீரகாவியம் படைத்த மாவீரர்களின் தியாகத்துக்கு முன்னால் தனது தாலியை தாயக மண்மீட்புப் போருக்கான மருத்துவ நிதிக்கு அளிப்பது ஒன்றும் பெரிய விடயம் அல்ல என்று கருதி அதைச் செய்யத் துணிந்த அந்தத் தாயின் செயல், அவரது மன உறுதி நிச்சயம் பாராட்டப்படவேண்டியது. வரலாற்றில் பதிந்து வைக்கப்பட வேண்டியது.

# தமிழ் மக்களுக்கு முகவரியை பெற்றுத் தந்தவர் பிரபாகரன்

## -சுவிஸ் கூட்டத்தில் டாக்டர் ராமதாஸ்-

கடந்த 24.11.96 அன்று சுவிஸ் நாட்டில் நடைபெற்ற மாவீரர் தினக் கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், அவரது துணைவியார், அக்கட்சியின் பொதுச் செயலாளர் எழில் மலை ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் மத்தியில் பேசிய டாக்டர் ராமதாஸ் அவர்கள் தமிழ் மக்களுக்கு ஒரு முகவரியை எமது தேசியத் தலைவர் வே. பிரபாகரன் பெற்றுத் தந்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து அவர் பேசுகையில், "இந்த நிகழ்ச்சிகள் நாம் எதிர்பார்த்ததை விட மிகவும் சிறப்பாக இருந்தன. புலம் பெயர்ந்த நாடுகளில் சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் கூடுதல் நிதி உதவி செய்பவர்கள் என்பதை எமது கண்முன்னே நிரூபித்துக்காட்டியுள்ளார்கள். நான் இப்பொழுதுதான் முதன்முறையாக மாவீரர் நிகழ்விலே கலந்துகொள்கிறேன். நான் கனடா, இங்கிலாந்து, தற்பொழுது சுவிஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றபோதெல்லாம் அங்கே தமிழ் மக்கள் ஒருவித எழுச்சியுடன் காணப்படுகிறார்கள். நீங்கள் அனைவரும் எம் முன் ஒரு கேள்வியொன்றை எழுப்புவதை நான் உணர்கிறேன். அது 'தமிழ் நாட்டு மக்களின் உணர்வலைகள் ஏன் எழவில்லை' என்பது. கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் கொடுங்கோன்மையாட்சி நடைபெற்றது. தமிழீழப் போராட்டத்திற்கு எதிராக அவ்வாட்சி செயற்பட்டது. ஆகவே அங்கு ஒரு எழுச்சி எழுந்தாலும் அதை அடக்குமுறையால் அடக்கி



விடுவார்கள். ஆனால், இப்பொழுது ஆட்சி மாறியுள்ளது. இன்று தமிழீழப் போராட்டத்துக்கான ஆதரவு அலைகள் எழத்தொடங்கியுள்ளன. எமது கட்சி உட்பட இன்னும் பல கட்சிகள் எழுச்சிப் போராட்டங்களை நடத்தி வருகின்றன" என்று கூறியதுடன் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா புலிகளுக்கெதிராக மேற்கொண்ட செயல்களையும் ஆதாரபூர்வமாக, தெளிவாக விளக்கிப் பேசினார். இறுதியாக அவர் பேசுகையில், "இன்று உலகத்திலுள்ள அனைத்து தமிழ் மக்களுக்கும் ஒரு முகவரி தோன்றியுள்ளது. அது தமிழீழம். அந்த முகவரியைப் பெற்றுத் தந்தவர் எமது தேசியத் தலைவர் வே. பிரபாகரன்தான். ஆகவே புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் தமது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்யவேண்டும்" என்று கூறினார்.

தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் திருஎழில்மலை எழுச்சியுரை நிகழ்த்தினார். அவர் தனதுரையில், "இந்த நிகழ்ச்சியில் தான் கனத்த இதயத்தோடும், உணர்ச்சிபூர்வமாகவும் கலந்துகொள்கிறேன். இங்கு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை நான்கு தலைமுறையைச் சேர்ந்தவர்கள்ஒன்றுகூடி தங்கள் உணர்வலைகளை காட்டியுள்ளார்கள். இன்று தென்திசையிலே மின்னல் போல் தமிழருக்கென்றொரு நாடு உருவாகிகொண்டிருக்கிறது. அது தமிழீழம் தான். அந்தத் தமிழீழமே இந்தியாவின் நேசசக்தியாக இருக்கப் போகின்றது. பங்களாதேஷில் இருந்து பாகிஸ்தான் பிரிந்துசெல்வதற்கு இந்தியா துணை நின்றது. அதே போல் தமிழீழம் பிரிந்துசெல்வதற்கும் இந்தியா ஆதரவு வழங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் தமது கட்சி தடாச் சட்டத்தையும் மீறி தமிழீழத்தை வெளிப்படையாக அங்கீகரிப்பதாகவும் தமிழீழ சுதந்திரத்திற்காக தமது உயிர்களையும் உணர்வுகளையும் தாம் அர்ப்பணிக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார். மேலும் அவர் பேசுகையில், இன்று பிரபாகரனை தீவிரவாதி என்று கூறுகின்றார்கள். யசீர் அரபாத், நெல்சன் மண்டேலா ஆகியோரை 'தீவிரவாதிகள் என்றார்கள். ஆனால், உலகம் இன்று அவர்களை நாட்டுத் தலைவர்களாக ஏற்றுக் கொண்டுள்ளது. இதேபோல நாளை பிரபாகரனையும் நாட்டுத் தலைவராக இவ்வுலகம் ஏற்றுக்கொள்ளும். இன்று பிரபாகரனின் யுக்தி, சீரிய சிந்தனைகளை எண்ணி உலகம் வியந்து நிற்கின்றது. தமது கட்சி தமிழீழ தேசம் உருவாகுவதற்கு உறுதுணையாக இருந்து அதனைத் தூக்கிவிடும் என்று தாது உரையை முடித்தார்.

# திருமலையில் புலிகள் தாக்குதல்

திருகோணமலை நகரில், கடந்த திங்கட்கிழமை காலை 8.05 மணியளவில் உட்துறைமுக வீதியூடாக சென்றுகொண்டிருந்த பொலிஸ் பஜிரோ ஜீப் வண்டியின் குறுக்கே புலிகள் இயக்க தற்கொலைப் போராளி ஒருவர் பாய்ந்து குண்டொன்றை வெடிக்க வைத்துள்ளார். இதனால் ஜீப் சாரதி காயங்களுக்குள்ளானார். பஜிரோ வண்டிக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை. இவ் வண்டியில் சாரதி மட்டுமே பயணம் செய்தார்.

ஜீ. எச். சோமசிறி (30 வயது) என்ற ஜீப் சாரதியே காயங்களுக்குள்ளாகி திருமலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜீப் வண்டியின் முன்னே சில யார் தூரத்தில் சென்றுகொண்டிருந்த மினி பஸ் வண்டியில் பயணம் செய்த இச் சம்பவத்தையடுத்து அப் பகுதியிலுள்ள அனைவரும் உட்துறைமுக வீதியிலுள்ள அரச தொழில்நுட்ப கல்லூரி வளவுக்குக் கூட்டிச்செல்லப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவர்கள் முகமூடியின் துணையோடு அடையாளம் காணப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

இதேவேளை சுதுமலை, நாவலடி பகுதியில் ஞாயிறன்று தேடுதல் வேட்டைகளின்போது, ஒரு கண்ணிவெடி, 3 கண்ணிவெடி பியூசுகள், இரண்டு ஜொனி வெடி, 96 சுற்று வெடி மருந்துகள் என்பவற்றை படையினர் மீட்டுள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 21.11.96 வியாழக்கிழமை மாலை6.50 மணியளவில் திருமலையில் இடம்பெற்ற இன்னொரு தாக்குதலில ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டு இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

3 இராணுவத்தினர் மட்டுமே சென்ற ஜீப் வண்டி ஒன்றிற்கு மேற்கொள்ளப்பட்ட இக் கண்ணிவெடித் தாக்குதலில், லெப்டினன்ட் முத்தலீப் என்னும் அதிகாரி கொல்லப்பட்டும், லெப்டினன்ட் எஸ்.பி. செலிவின், எஸ். டபிள்யூ. பெரேரா ஆகியோர் படுகாயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

# இடம்பெயர்ந்த மக்கள் நிவாரணம் கோரி விண்ணப்பம்

இராணுவத் தொடர் தாக்குதல்களால் இடம்பெயர்ந்து வன்னிப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் தமக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களையும் ஏனைய நிவாரணங்களையும் வழங்குமாறு கோரும் விண்ணப்பம் ஒன்றை, கடந்த 22.11.96 அன்று ஸ்கந்தபுரத்திலிருந்து பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு ஊர்வலமாகச் சென்று அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளனர்.

## 31ம் நாள் வீர அஞ்சலி



**கடற் கரும்புலி கப்டன் ஜெயறாச்**

*(பெரியதம்பி)*

**கந்தசாமி கோபாலகிருஷ்ணன் [குமார்]**

*காரைநகர் - தமிழீழம்*

**வீர ஜனனம்: 07.04.1975**

**வீரமரணம்: 25.10.1996**

25.10.96 அன்று திருமலைத் துறைமுகத்தினுள் ஊடுருவி துணிகர கரும்புலித் தாக்குதலில் வீரமரணமடைந்தார்.
அவருடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட கடற்கரும்புலி நளினனுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்: அண்ணன் மனோகரன் (கரன்- சுக், சுவிஸ்), அக்கா குவம், சின்ன அக்கா வசந்தா.

## மரண அறிவித்தல்



**செபமாலை யோன் கில்லறி**

*(இருபாலை)*

**அன்னை மடியில் 14.01.1958**

**இறைவனடி 20.11.1996**

இருபாலையைச் சேர்ந்த செபமாலை யோன் கில்லறி 20.11.96 அன்று டென்மார்க்கில் காலமானார்.

இவர் (இரணைப்பாலை) முல்லைத்தீவைச் சேர்ந்த செபமாலை ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி. மேரி அபிலா (பிரான்ஸ்), திரு. ஜெனோவியஸ் (டென்மார்க்), காலஞ்சென்ற திருமதி. கிறேஸ், திருமதி. யசிந்தா (பிரான்ஸ்), திரு ஜெறோவியஸ் (சுவிஸ்), திருமதி. கிறிஸ்ரீனா (சுவிஸ்), திருமதி யோயினி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. ஜெயானந்தன் (பிரான்ஸ்), திருமதி றாஜினி (டென்மார்க்), காலஞ்சென்ற திரு. பிரான்ஸிஸ், திரு. உதயசூரியர் (பிரான்ஸ்), திருமதி சோபா (சுவிஸ்), திரு. மத்தியூஸ் லதீஸ் (சுவிஸ்), திரு. மகேஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்: திருமதி செபமாலை (இலங்கை), திரு.திருமதி. ஜெனோவியஸ் (டென்மார்க்) - 32 48 08 திரு. திருமதி. உதயசூரியர் (பிரான்ஸ்) 43 39 08 25*

## 6ம் மாத நினைவஞ்சலி



**சண்முகம் ஆனந்தராஜா**

(ஆனந்தி)

மலர்வு: 29.04.1964

உதிர்வு: 10.05.1996

பெற்ற மனம் தத்தளிக்க
உன் மனைவி தனித்திருக்க
அன்பின் திரு உருவே, ஆசை பொன்வீதியிலே
அவசரமாக சென்றாயோ, பாசமுள்ள வார்த்தைகளால்
பகல் இரவாய் நீ அழைப்பாய், உன்றாசாத்தி என்றே,
சிறுகால வாழ்க்கையிலே, சிதையாத நினைவுகளை
அலைபோல மோதவிட்டு அவன் அடி சென்றாயோ,
உன் கல்லறையில் விளக்கேற்றி
களங்கப்படுத்தவில்லை,
என் நினைவில் நீயின்றி யாரும் இல்லை
உன்மறைவால் ஏங்கித் தவிக்கின்றேன்,
எண்ணி அழுகின்றேன்.

உன்பிரிவால் துடிக்கும்
அன்பு மனைவி திருமதி. ஆனந்தராஜா.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் உயர்திரு**

**வயிரமுத்து மயில்வாகனம்**

(சொக்கலிங்கம் - பத்தைமேனி, அச்சுவேலி)

தோற்றம் 27.04.1930 - மறைவு 17.11.1995

திதி 05.12.1996

ஆண்டொன்று போனதை நாமறியோம்
காலன் உங்களை அழைத்து எம்மை
கலங்கவைத்து
மாதங்கள் பன்னிரெண்டு மாறும் நாளை
ஆண்டுகள் பன்னிரெண்டு ஆயினும்
நாமடையோம் அமைதி
நின் முகங்கண்டு துயர்தீரும் காலம் வரும்
என்றெண்ணி ஏங்கி
மனம்வாடி ஆயிரம் ஆண்டுகள் இங்கு
உங்கள் சாந்திக்காக என்றும் பிராத்திப்போம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரர்.

தகவல்: ஆனந்தன், தவா
பொலோனியா - இத்தாலி.

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி. பரமு ஜெயராணி**

*(ஜெயா)*

அன்னையின் மடியில் 17.05.1965

ஆண்டவன் அடியில் 24.11.1985

பதினொரு ஆண்டுகள் ஆனதம்மா
பாரில் உன்னைப் பறிகொடுத்து
பரிதவிக்கின்றோம்
பாவிகள் நாம் உன்
பாச நினைவால்
பாசமிகு அக்காவாய்
பண்புமிக்க மகளாய்
நேசமிக்க தங்கையாய்
அன்புமிக்க சித்தியாய்
அனாதைக்கும் ஆதரவு காட்டி
அகம்மகிழ்ந்த எம்
அன்புச் செல்வமே
ஆறாது உன் பிரிவின்
துயர் யாவர்க்கும்.

உன் ஆத்ம சாந்திக்காய் வேண்டிநிற்கும் பரமு குடும்பத்தினர், நாவலடி, உடுப்பிட்டி, தமிழீழம்.

தகவல்: பரமு.. வன் - சுவிஸ், தொலைபேசி இல: 0269139334.

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**தோற்றம்: 08.10.1938**

**மறைவு: 01.11.1996**

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

**திரு- முருகேசு பத்மநாதன்**

இவர் முருகேசு, நல்லதங்கத்தின் அன்பு மகனும், இந்திராணி (நாகேஸ்வரியின் பாசம் நிறைந்த அன்புக் கணவரும், வசந்தநாதன், ரவிச்சந்திரநாதன், நளினி (சுவிஸ்), நந்தினி (ஜேர்மனி), கோகிலவதனி (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகலிங்கத்தின் (சுவிஸ்) மாமனாரும், காலஞ்சென்ற ஆசிரியர் ஐயாத்துரை செல்வராணியின் (இலங்கை) அன்பு மருமகனும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர், சொக்கலிங்கம், செல்லத்துரை (லண்டன்), சின்னதம்பி, முத்துக்குமாரு (இலங்கை), இராமலிங்கம் (முன்னாள் அதிபர் கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், எதிர்வீரசிங்கம் (கனடா), ஜெகநாதன், சிவபாதசுந்தரம் (ஜேர்மனி), தாமருலசிங்கம், திருமதி. புவனராணி முத்துலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

குடும்பத்து குலவிளக்காய் அன்பை அருவியாக்கி பண்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்த அன்புத் தெய்வமே நித்தம் நித்தம் உங்கள் அன்புமுகம் எம் கண்முன்னே நிற்குதப்பா. எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்து மாதம் ஒன்று ஆனாலும் எங்கள் மனதைவிட்டு நீங்காத நினைவுகளாய் எம்முடன் இருக்கின்றீர்கள் அப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். எமது தந்தையின் மரணச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் கீழ்க்காணும் முகவரியில் நடைபெறும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:

வசந்தன் - Tel: 01 42 21 442 - ரவி - Tel: 081-72 32 805
Gemeins chaf Zentrum, Breitenstein Str-19A, 8037 ZURICH.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளின்...

சந்தேகப்பட்ட அயலவர்கள் நுவரெலியா பொலிசாரிடம் அங்கு நீலப்படம் ஓடுவதாக தகவல் தெரிவித்துவிட்டனர்.

பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி நந்தனசேன ரட்ண தலைமையிலான பொலிஸ் குழு விரைந்து சென்று அந்த அறையைச் சோதனையிட்ட போது, அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தது நீலப்படமல்ல விடுதலைப் புலிகளின் விவரணப் படம் என்று தெரியவந்தது.

கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கும் இவரில் மூன்று ஆண்களும், இரண்டு பெண்களும் அடங்குவர் இதில் ஒருவர் மாத்திரமே தமிழர் மற்றையவர்கள் சிங்களவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு இவ் வீடியோ பிரதி எங்கிருந்து கிடைத்தது என்று தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## வவுனியா...

பலாத்காரத்தைப் புரிந்துள்ளனர். இந்த அராஜகத்தினால் மூர்சுத் தினறலுக்கும், அந்தமான குருதிப் பெருக்கிற்கும் இலக்கான இவரை முகாமிலுள்ள ஏனையோர் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் அவர் மரணமடைந்துள்ளார். ஆனால் தனக்கு நேர்ந்த இந்த அவலத்தினையும், காவலுக்கு நின்ற பொலிஸ் மிருகங்களே இக்கொடுமையை புரிந்ததைப் பற்றியும் அவர் வெளியிட்டுள்ளார்.

வவுனியா ராணுவத்தினர் கர்ப்பிணிப் பெண்ணை பிரசவத்திற்கு அனுமதி மறுத்து

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## மட்டக்களப்பில்...

வாரத்தையொட்டி கிழக்கில் புலிகள் தமது தாக்குதல்களை தீவிரப்படுத்தலாம் என்ற பீதியில் விமானப் படையினர் பரவலாக தமது குண்டு வீச்சுகளை நடாத்தி வருகின்றனர். இத் தாக்குதல்களினால் வயல் பிரதேசங்களே பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## எழுதுமட்டுவாள்...

கின்றது. இவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இடத்தினை தெரிவிக்க இராணுவத்தினர் மறுத்து வருவதால் யாரிடம் இவர்களது விடுதலை தொடர்பாக அணுகுவது என்ற குழப்பத்தில் உறவினர்கள் ஆழ்ந்துள்ளனர்.

கந்தர் சேதுப்பிள்ளை 47, அவரது மகன் கந்தா ஜெயரஞ்சன் 25 ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

எழுதுமட்டுவாள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட அறுவரினதும் விபரங்கள் வருமாறு.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 33 வயதுடைய பொன்னு அழகரட்ணம் (எழுதுமட்டுவாள்), நான்கு பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய கந்தையா தியாகராஜா (எழுதுமட்டுவாள்), ஐந்து பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய தருமு மாணிக்கம் (கரம்பகம் _ மிருசுவில்), இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடைய பெரியதம்பி தவராசா (மிருசுவில்) பசுபதி தியாகராசா (வயது 38) கமபர்மலை, வல்வெட்டித்துறை.

அவரது சிகவினை பேற்றுச் சிக்கல்கள் காரணமாக கொலை செய்த சம்பவத்திற்கு 8 நாட்களுக்கு முன்னரே இக்கொலை நிகழ்ந்துள்ளது

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## 800 பிராங்கு....

கமராப் பெட்டி ஒன்றை எடுத்து கொடுத்துவிட்டு அவசர அவசரமாக சென்றுவிட்டார்கள். வீடியோ கமராப் பெட்டியை பெற்றுக் கொண்டவர் மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு கொண்டு சென்று உடைத்துப் பார்த்தபோது அதற்குள் மூன்று தண்ணீர்ப் போத்தல்கள் இருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

இவ்விதம் பல தமிழர்கள் ஏமாந்துள்ளது தெரியவந்துள்ளது. இவ்விதம் மோசடிப் பேர்வழிகளிடம் சிக்காமல் தமிழ் மக்கள் விழிப்பாய் இருப்பதுடன், இப்படியானமோசடிப் பேர்வழிகளிடம் பொருட்களை வாங்குவதை தவிர்க்குமாறும் கேட்கப்படுகிறார்கள்.


வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், உங்கள் மங்கல வைபவங்களுக்கும், ஊர்து யாத்திரை போன்றவற்றிற்கும் தேவையான வாகன வசதிகளுக்கு;



நித்தி
வாகன சேவை
Tel: 01 43 03 07 08 / 01 48 05 02 14 / 01 49 23 97 32
பிரயாண வசதி கருதி: 06 07 34 80 51


# 1ம் வருட நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 06.03.1933



ஆண்டவன் அடியில் 05.12.1995

### திரு. கந்தையா கார்த்திகேசு
(மணியம்)
கரவெட்டி மேற்கு, கரவெட்டி

"வருடம் ஒன்றாகியும், என்றும் உங்கள் நினைவுகளுடன்"

மனைவி: கா. குணமணி (லட்சுமி)
மகன்மார்: கா.கோகிலநாதன்
கா. குணநாயகம்
மகள்மார்: கா. தனவதி
கா. கோமதி

தகவல்:
கா. கோகிலநாதன்
இலண்டன் - 0181-646.6788

# 31-ம் நாள் நினைவு அஞ்சலி



மறைவு 26.10.96

### திருமதி. சின்னையா அன்னபாக்கியம்
(கொக்குவில் பொற்பதி)

அன்பின் திருவுருவே இருப்பிடமே
எங்கு சென்றாய் அம்மா
கதறி அழுகின்றோம் கண்ணீரில் மிதக்கின்றோம்
அம்மா தாயே உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கிறோம்.
எமது தாயின் மறைவு கேட்டு ஆறுதல் கூறிய
உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி
தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. பாஸ்கரன் (பாபு)
சுவிஸ்.
0794464279


## பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
**11வது வருட கல்விச் சேவையின் தொடர்ச்சியில்....**

புதிய பிரெஞ்சு வகுப்பு ஆரம்பமாகிறது
மீண்டும் ஆசிரியர் **சுரேஷ்**

காலம்: **23.11.96** சனிக்கிழமை - பிற்பகல் **2.30** மணி

**இடம்:** 165, Rue de Charonne, 75011 Paris.
(Metro: Charonne ou Alexandre Dumas)

| பிரெஞ்சு வகுப்புக்கள் | ஆங்கில வகுப்புக்கள் | கணணி வகுப்புக்கள் |
|---|---|---|
| **ஆசிரியர் கஜன்** | **ஆசிரியர் ரொணி** | **ஆசிரியர் சோபன்** |
| 13h00 - 14.30 | 17h00 - 18h30 | Dos, Windows 3.1, 95, |
| 14h30 - 16h30 | 18h30 - 20h00 | DBase, C++, Word, Excel, |
| 16h00-17.30 | | 3D Studio, Internet |

Internet உபயோகம் சம்பந்தமான இலவச விரிவுரை 01-12-96 பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும்

எலக்றிசிற்றி, பைப் லைனிங், மாபிள் பதித்தல், பேப்பர் ஒட்டுதல், பெயின்ரிங், P.V.C யன்னல்கள் மற்றும் கட்டட வேலைகள், தச்சு வேலைகள் அனைத்திற்கும்,



## பகீ என்ரபிறைஸ்



உங்கள் வீடுகளுக்கான இன்சூரன்ஸ், கடன் ஏற்பாடுகளுக்கு தேவையான Devis வழங்கப்படும்

Devis 200Frs - Deplacement 150Frs

புதிய தொலைபேசி இலக்கம்: 01 48 48 39 64 / 06 09.27.32.00

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

உங்கள் தேவையறிந்து எங்களின் சேவை
Kumars Shop S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10
Fax: 01 42 59 35 00
K.T.C. Jewels
193, Rue du Fg. S<sup></sup>Denis,
75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 01 42 05 41 36

குமாரர்ஸ்
Kumars Jewels S.A.R.L.
80, Bld. Barbes,
75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 11 52
Fax: 01 42 59 35 00

# ஜேர்மனியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட இளைஞர் கொழும்பில் கைது

ஜேர்மனியில் அகதி அந்தஸ்துக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின்பு கடந்த 19.11.96 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்ட மோகனராஜ் துரைசிங்கம் என்ற 20 வயதுடைய இளைஞர் சிறீலங்கா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த இளைஞர் செவ்வாய் அதிகாலை கட்டுநாயக்காவில் வந்து இறங்கிய வேளையிலே அங்குவைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் எனச் சொல்லப்படுகின்றது.

தற்போது இவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார், இவருக்கு என்ன நடந்துள்ளது என்ற விபரங்கள் எதுவும் தமக்குத் தெரியவில்லை என இவரது உறவினர்கள், ஜேர்மனியிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கிளையிடம் தெரிவித்துள்ளனர்.

ஜேர்மனி செஞ்சிலுவைச் சங்க கிளை இவ் விடயத்தை பரிசீலிக்குமாறு கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்கிளைக்கு தொலைநகல் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது.

# புலிகளின் வீடியோ பார்த்த சிங்கள இளைஞர்கள் கைது

நுவரெலியா நகரத்திலுள்ள பார்க்வீதியில் அமைந்திருக்கும் மாடிக்கட்டிடம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் வீடியோ கசட் ஒன்றை பார்த்துக்கொண்டிருந்த ஐந்து பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் இல் ஐவரும் மிக இரகசியமாக தங்களது கதவுகளைப் பூட்டிவிட்டு இந்த விவரணப் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இவர்கள் இவ்வாறு ஏன் பூட்டிவிட்டு படம் பார்க்க வேண்டும் என்று

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# எழுதுமட்டுவாள் புதை குழியை அம்பலப்படுத்திய தாயும் மகனும் கைது

சிறீலங்காப் படையினர் எழுதுமட்டுவாள் பகுதியில் படுகொலை செய்து புதைத்த ஆறு அப்பாவித் தமிழர்களும் இனங்காணப் பட்டுள்ளனர். இதில் ஐவர் குடும்பத்தலைவர்கள் ஆவர். ஒருவர் மாணவராவார்.

இப் புதைகுழி மர்மம் கடந்த 17ம் திகதி அம்பலத்திற்கு வந்த பின்னர் இரு தினங்கள் கழித்து மிருசுவில் பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய படையினர், ஒரு தாயையும், அவரது மகனையும் கைது செய்துகொண்டு சென்றுள்ளனர்.

இராணுவத்தினரின் எழுதுமட்டுவாள் கொலைகளை வெளிச்சத்துக்கு கொண்டுவர உதவியவர்கள் என்பதால் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக அயலவர்கள் தெரிவித்தாக கூறப்படு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# 800 பிராங்குகளுக்கு மூன்று தண்ணீர்ப் போத்தல்

பிரான்ஸ் பாரிஸ் நகரப் பகுதியில் சில மோசடிப் பேர்வழிகள் மக்களை ஏமாற்றிவருவதாக அறிய முடிகின்றது. பெறுமதிவாய்ந்த பொருட்களை குறைந்த விலையில் விற்பது போல பாசாங்கு செய்து தமது கைங்கரியங்களை செய்து முடிக்கிறார்கள்.

இவ்விதம் மோசடிப் பேர்வழிகளிடம் பல தமிழர்கள் ஏமாற்றப் பட்டிருப்பது தெரியவந்துள்ளது. அண்மையில் லாச்சப்பல் பகுதியில் கார் ஒன்றில் வந்த வேறு சமூகத்தைச் சேர்ந்த நபரொருவர் 10 ஆயிரம் ரூபா பெறுமதி உடைய வீடியோ கமரா ஒன்றை 800. பிராங்குகளுக்கு தருவதாக பாதையில் சென்றுகொண்டிருந்த ஒருவரை மறித்துக் கேட்டுள்ளார். அவரும் மகிழ்ச்சியுடன் 800 பிராங்குகளைக் கொடுத்து அதை வாங்க சம்மதித்தார். உடனே அந்த மோசடிப் பேர்வழி தனது காரின் பின் இருக்கையிலிருந்த உடைபடாத புதிய வீடியோ

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# மட்டக்களப்பில் புக்காராவின் நரபலி இருவர் பலி, பன்னிருவர் படுகாயம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடந்த வாரத்தில் சிறிலங்கா விமானப் படையினர் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இத் தாக்குதல்களினால் இருவர் பலியாகினர். மேலும் பன்னிரண்டுபேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த (19.11.96) செவ்வாய்க்கிழமை பெண்டுகள்சேனைப் பகுதியில் காலை 8.30 மணியளவில் தோன்றிய புக்காரா விமானங்கள் குடியிருப்புகளை இலக்காக வைத்து குண்டுகளைப் பொழிந்தன. இத் தாக்குதலில் கணபதிப்பிள்ளை ராஜநாயகம் (32), வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை (27) ஆகிய குடிமக்கள் பலியாகினர். பல வீடுகளும் தகர்ந்து விழுந்தன. இதேநாளில் தந்தா மலைப் பகுதிகளிலும், தாண்டியடிப் பிரதேசத்திலும் குண்டு வீச்சுகள் இடம் பெற்றுள்ளன.

22.11.96 அன்று இலுப்படிச்சேனையில் நடைபெற்ற குண்டு வீச்சுக்களில் 12 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாவீரர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# வவுனியா தடுப்பு முகாமில் இளம்பெண் பொலிசாரால் பாலியல் படுகொலை

வவுனியா இராணுவத்தினரால் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களை உலுக்கியுள்ள பாலியற் படுகொலை சம்பவமொன்று தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதனால் இம்முகாமில் தங்கியுள்ள இளம் பெண்களிடையே பெரும் பீதி எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் முகாமில் தங்கியிருந்த இளம் யுவதியொருவரை அங்கு கடமையில் ஈடுபட்ட எட்டுப் பொலிசார் பலவந்தமாக அழைத்துச் சென்று மாறிமாறி மிருகத்தனமான பாலியற்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

நம்மவர் விரும்பும் அனைத்து வகை துணி மணிகள் வாங்க நாடுங்கள்
நாதன் ஜவுளி சமுத்திரம்
S.K.TRADING TEXTILES

Josep Str 137 31, 8005 Zurich, Switzerland - Tel: 01-2724330

# முஸ்லீம்கள் - இராணுவம் முறுகல் நிலை மன்னாரில் பதட்டம் 7 பேர் கைது

மன்னாரில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தினர் அப் பகுதியில் வசிக்கும் ஏழு முஸ்லீம்களை கைதுசெய்ததைத் தொடர்ந்து பதட்டம் நிலவி வருகிறது. தற்போது இராணுவத்தினர் மன்னார் பெருநிலப்பரப்பிலிருந்து தீவுப் பகுதிக்கான போக்குவரத்துக்களில் மிகக் கடுமையான விதிமுறைகளை கடைப்பிடிக்கின்றனர்.

மன்னாரிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக சந்தேகம் கொண்ட படையினர் பள்ளிவாசலுக்குள் நுழைந்து தேடுதலை நடாத்தியுள்ளதுடன் ஆயுதங்களையும் கைப்பற்றியதாக அறிவித்துள்ளனர்.

தமது புனித மத வழிபாட்டுத் தலத்தில் இராணுவத்தினர் புகுந்து தேடுதல் நடாத்தியதை பல முஸ்லீம் மக்கள் எதிர்த்துள்ளனர். ஏழு பேரை படையினர் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர். இதனால் மேலும் முஸ்லீம் மக்கள் கொதிப்படைந்துள்ளனர்.

# தமிழர் குடியிருப்பு நடுவே இராணுவப் பயிற்சி நிலையம்

திருமலையிலுள்ள தமிழர் குடியிருப்பான லிங்க நகரில் வசிக்கும் மக்களை அங்கிருந்து துரத்திவிடுவதற்கு சிறீலங்கா இராணுவமும், பெரும்பான்மை இன அரசாங்க அதிபரும் பெரும் முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

அரச அதிபர் வகுத்துள்ள சூழ்ச்சியான திட்டமொன்றின் படி இக்குடியிருப்பு நகரில் வசிக்கும் இருநூற்றி நாற்பது குடும்பங்களுக்கு நடுவே இராணுவப் பயிற்சி நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காப் படையில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுக்கு இந்நிலையத்தில் பயிற்சிகள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. இம் முகாம் அமைக்கப்பட்டதன் காரணத்தினால் சூழலிலுள்ள குடியிருப்பாளர்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

முந்தைய இக் குடியிருப்பாளர்களை வெளியேறும்படி திருமலை அரச அதிபரினால் உத்தரவு விடுக்கப்பட்டதனால் வெளியேறிய குடும்பங்களுக்கும் அனுதாபிகளுக்கும் 23ம் திகதி லிங்கநகர் வீதிச் சந்தியில் உண்ணாவிரதப் போராட்டமொன்றினை ஆரம்பிக்கவுள்ளனர்.

# நவம்பர் 30-ல் வன்னியில் மாபெரும் மாணவர் போராட்டம்

எதிர்வரும் 30-ஆம் திகதி வன்னிப் பெருநிலப்பரப்பில் சிறீலங்கா அரசிற்கான எதிர்ப்புப் போராட்டமொன்றை நடாத்த மாணவர் அமைப்புகள் தீர்மானித்துள்ளன. சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களாகவும், தமிழ் மாணவர் சமூகத்தின் மீது பிரயோகிக்கப்படும் தொடர்ச்சியான கொலைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டப் பேரணி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. நவம்பர் 30ஆம் திகதி காலையில் ஆரம்பிக்கப்படும் இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் பல அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள உள்ளனர். பேரணியின் முடிவில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிடம் தமிழ் மக்கள் மீதான அலைத்து காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்தக் கோரும் மனு ஒன்றையும் கொடுக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# 7வது ஆண்டு சேவையில் புலிகளின் குரல் வானொலி

தமிழீழப் பகுதிகளில் நடக்கும் நிகழ்வுகளை மக்களுக்கு வழங்குவதில் பெரும் சேவையாற்றிவரும் புலிகளின் குரல் வானொலி சேவை தனது ஆறாவது ஆண்டினைப் பூர்த்தி செய்து ஏழாவது ஆண்டில் காலடி வைத்துவிட்டது.

1990ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதி தனது முதலாவது நாள் நிகழ்ச்சியை ஆரம்பித்த புலிகளின் குரல் தினசரி ஒரு மணி நேர ஒலிபரப்பினை இரவில் வழங்கிவந்தது. 1992ம் ஆண்டு மே மாதத்தில தனது காலைச் சேவையினையும் ஆரம்பித்த இவ் வானொலி அதற்கெனவும் ஒருமணி நேரத்தை ஒதுக்கியது.

தமிழ் மக்களுக்கு சிறீலங்கா இராணுவம் வழங்கும் பொய்ப் பிரச்சாரங்களை முறியடித்து தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை வெளியிட்டு வந்ததனால் மக்களின் மனதில் தவிர்க்கவொ இவ்வானொலி சிறப்பான இடத்தையும் பிடித்துக்கொண்டது.

ஆறாம் ஆண்டுப் பூர்த்தி நிகழ்வின்போது காலை நிகழ்ச்சியில மேலும் முப்பது நிமிடங்களை சேர்த்துக்கொள்வதாக புலிகளின் குரல் அறிவித்துள்ளது. தற்போது இச் சேவையில் நாளாந்த ஒலிபரப்பு மொத்த நேரம் இரண்டரை மணித்தியாலங்களாகும்.

# இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியிலும் கிழக்கில் மாவீரர் தோரணங்கள்

மட்டக்களப்பு கல்முனைப் பிரதான வீதியில் சில இடங்களிலும் ஒந்தாச்சி மடம் உட்பட வேறு சில இடங்களிலும் ஞாயிறு இரவு மாவீரர் தின கொடிகள், தோரணைகள் கட்டப்பட்டுள்ளன.

இப்பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டில உள்ள பகுதிகளாகும். இதேவேளை மாவீரர் வார இறுதி நாள் வைபவங்கள் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இடம் பெறவுள்ளன.

மதவழிபாட்டு தலங்களில் விசேட பூசைகள் இடம்பெறும். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் பட்டிமன்றம், கவியரங்கு என்பனவும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்ளும் பிரதான கூட்டம் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும். பாதுகாப்புக் காரணங்களுக்காக கூட்டம் நடைபெறும் இடம்பற்றி இறுதி நேரத்திலேயே அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் வாரத்தை முன்விட்டு படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இருந்து மட்டு நகருக்கு வருவோரின் தொகை வெகுவாகக் குறைந்துள்ளது.

தமிழீழ ஆவணக்காப்பகம்


எமது தாய்நாட்டின் விடுதலைக்காக தமதுயிர்களைத் துச்சமாக மதித்துப்
பிறந்த மண்ணிலேயே சிங்கள இனவாதிகளுக்கும், பயங்கரவாதிகளுக்கும்
எதிராகப் போர்தொடுத்து

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என தமிழீழ மண்ணோடு தமதுயிர்களைக் கலந்துவிட்ட
மாவீரர்களுக்கு எமது ஸ்தாபனத்தின் சார்பிலும், ஊழியர்கள் சார்பிலும்

**வீர வணக்கம்**

**நடராஜா & கோ, நியூ ஏசியன் ஷொப்**

பேர்ண் - பூர்க்டோர்வ்- ஆரவ் - சூரிச்- செங்காலன் - கூர்

**A1 home needs jewellers**
Spitalgasse 38, Schweizerhof Passage 4
3011 Bern

**New Asian shop**
wyningen str - 16, Burgdorf
Tel: 034 4222149

Hintere banhof str.42, 9000 Aarau
Tel: 089.4052852

Bacher str.43, 8004 Zurich
Tel: 01.2426183

# யாரும் டென்மார்க் சித்திராவுக்கு புகலிடம் தருகிறார்கள் இல்லையாம்

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்பு இல்லையென விடுதலை செய்யப்பட்டநாவல தற்போது எனது சகோதரி வசந்தி அவரது கணவர் அருந்தவராசா ஆகியோரின் பொறுப்பில் இருக்கின்றேன். அவர்கள் என்னை தங்கள் பொறுப்பில் தொடர்ந்து வைத்திருக்கப் பயப்படுகின்றார்கள், என்று டென்மார்க்கிலிருந்து நாடுகடத்தப்பட்ட சித்திரா இராசேந்திரன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

டென்மார்க்கில் அரசியல் தஞ்சக் கோரிக்கை மறுக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட இவர் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டு 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக்காவலிலும் 14 நாட்கள் இரட்சண்யசேனையிலும் சிறைவைக்கப்பட்டிருந்தார். கடந்த 21.11.96 வியாழக்கிழமை கல்கிசை நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின் பின் இவர் பொலிசார் தெரிவிப்பதைப் போல விடுதலைப்புலிகளின் உறுப்பினரோ அவர்களுடன் தொடர்புடையவரோ அல்ல எனக் கூறி விடுதலை செய்யப்பட்டார்.

நீதிமன்ற வளாகத்தில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு அவர் தகவல் தருகையில் தன்னிடம் சிறிலங்கா பிரசை என்பதற்கான எந்தவிதமான ஆவணங்களும் இல்லையென்றும் இதனால் தனக்கு தங்குமிட வசதியளிப்பதற்கு தங்கும் விடுதிகளோ உறவினர்களோ கூட அனுமதிக்கிறார்கள் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது எனவும் கூறியுள்ளார்.

# முல்லைக் கடற்பிரதேசத்தில் அழுகிய நிலையில் கரை ஒதுங்கிய 10 சடலங்கள்

முல்லைக் கடற்பிரதேசத்தில் மிக மோசமாக அழுகிய நிலையில் 23.11.96 அன்றும், 24.11.96 அன்றுமாக பத்துச் சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன. இச் சடலங்கள் யாவும் அடையாளம் காண முடியாதவாறு அழுகி அருப்பதால் இச் சடலங்கள் பற்றிய விபரங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. சடலங்களை இனங்காணும் பணியில் தமிழீழக் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது. இவ் சடலங்கள் தமிழ் மீனவர்களுடையதாகவோ அல்லது இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்ட பொது மக்களுடையதாகவோ இருக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

# வவுனியாவில் காவலரண்களை சுற்றி வளைத்து புலிகள் இடைவிடாது தாக்குதல்

வவுனியாப் பகுதியில் அமைந்திருக்கும் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது. கடந்த 18-ம் திகதி தொடக்கம் இடைவிடாது புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் சில காவலரண்கள் அழிக்கப்பட்டிருப்பதுடன் சில காவலரண்களை கைவிட்டு படையினர் பின்வாங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. பூவரசங்குளம், நெடுங்குளம், நொச்சிமோட்டை போன்ற பகுதிகளில் அமைந்திருந்த காவலரண்களை புலிகள் சுற்றி வளைத்து தாக்கிக்கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கிறன. கடந்த வாரம் நெல்லுக்குளம் பொலிஸ் காவலரண புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டிருப்பதாகவும் மூன்றரை மணி நேரம் சண்டை நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

# யாழ் குடாவில் 1 மாதத்தில் படையினர் மீது 100 தாக்குதல்கள்

யாழ் குடா நாட்டுப் பகுதியெங்கும் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் படையினர் மீது புலிகள் நூறுக்கு மேற்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதாக தெரிய வருகிறது. கொடிகாமம், மீசாலை, மானிப்பாய், தொண்டமானாறு, நல்லூர், சாவகச்சேரி, நவக்கிரி, யாழ்நகர் உட்பட பல இடங்களிலும் தொடர்ந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இத்தாக்குதல்களின் போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இதே வேளை கிளிநொச்சி நகரப்பகுதிகளிலும் புலிகள தாக்குதல்களை மேற்கொள்ள ஆரம்பித்திருப்பதாகவும் இராணுவத்தின் முன்னணி காவலரண் பகுதிகளுக்குள்ளும் புலிகள் சாதாரணமாக நடமாடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# துயிலும் இல்லங்களை அழித்தது என் நெஞ்சை வாட்டியது

## -பாரிஸில் பீற்றர் சால்க்-

தமிழீழ விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களை நான மதிக்கிறேன் என சுவீடனில் இருந்து பிரான்ஸ் மாவீரர் விழாவில் கலந்துகொள்ள வருகை தந்திருந்த திரு. பீற்றர் சால்க் அவர்கள் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில் யாழ்ப்பாணத்தில் மாவீரர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த மாவீரர் துயிலும் இல்லங்களை சிறிலங்கா இராணுவப் படையினர் புல்டோசர் கொண்டு அழித்தொழித்த செயலைக் கேள்விப்பட்ட போது நான் மிக மனவருந்தினேன் எனக் குறிப்பிட்டார்.

சிறீலங்கா அரசு போர் செய்யவே விரும்புகிறது எனக் குறிப்பிட்ட அவர் சமாதான முன்னெடுப்புக்கான முயற்சிகளை பல சந்தர்ப்பங்களிலும் அரசு உதாசீனம் செய்து விட்டது எனவும் கூறினார். தான் கூட திலகரோடு இணைந்து சமாதான முயற்சிக்காக முயன்றதாகவும் ஆனால் சிறிலங்கா அரசு அதனைத் தட்டிக்கழித்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். விடுதலைப்புலிகள் எப்போதும் சமாதானத்தீர்வு முயற்சிக்கு தயாராகவே இருந்தார்கள் என்பதை தான் அறிவேன் எனவும் குறிப்பிட்ட அவர் நீதியான போராட்டம் எப்போதும் தோறபதில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

# மட்டக்களப்பில் குண்டுவீச்சு; பதில் தாக்குதலில் உலங்குவானூர்தி சேதம்

மாவீரர் வாரத்தை குழப்பும் நோக்கில் மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே உள்ள தாந்தாமலைப் பகுதியை அண்டியுள்ள காளை போட்ட மாடு என்ற இடத்தின் மீது சிறீலங்காப் படையினர் பலத்த குண்டு வீச்சுத் தாக்குதல்களை கடந்த வாரம் நடத்தியுள்ளனர்.

இக் குண்டு வீச்சுக்களால் ஏற்பட்ட சேதவிபரங்கள் கிடைக்கப் பெறவில்லை. இதே வேளை படுவான்கரைப்பகுதி மீதும் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக அப்பகுதி மக்கள் அங்கிருந்து அயல் கிராமங்களை நோக்கிச் செல்வதாக கொழும்புச் செய்தி தெரிவிக்கின்றது.

இதற்கிடையில் மட்டக்களப்பு கரடியனாறுப் பிரதேசத்தில் கடந்த 21.11.96 வியாழக்கிழமை சிறீலங்கா விமானப்படையினரின் எம்.ஐ.24 உலங்கு வானூர்திகள் ஆறு பாரிய குண்டுகளை வீசிய போதிலும் அவை எதுவும் வெடிக்கவில்லை எனத் தெரியவருகிறது. அன்று சிறீலங்கா விமானப் படையினரின் தாக்குதல்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்பு இயந்திரத் துப்பாக்கிகளைக் கொண்டு எதிர்த் தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதலில் எம்.ஐ. 24 ரக உலங்கு வானூர்தி ஒன்று பலத்த சேதத்திற்கு உள்ளாகி உள்ளது.


# இசை, நடன, மொழி கம்பியூட்டர் வகுப்புக்கள்

நடைமுறை பிரெஞ்சு கற்பதற்கு உகந்த கைநூல் 75 பிராங்குகள் மட்டுமே

**பிரெஞ்சு:**
07.12.96 சனி காலை 10.00 மணிக்கு ஆரம்ப இலக்கண வகுப்பு
08.12.96 ஞாயிறு மாலை 3.30 மணிக்கு பேச்சு வகுப்பு

**ஆங்கிலம்:**
07.12.96 சனி பிற்பகல் 4.00 மணிக்கு இலக்கண வகுப்பு
08.12.96 ஞாயிறு காலை 10.00 மணிக்கு பேச்சு பயிற்சி வகுப்பு

**கம்பியூட்டர்:**
07.12.96 சனி பிற்பகல் 1.00 மணி
08.12.96 ஞாயிறு பிற்பகல் 1.00 மணி, 3 மணி

**கணக்கியல்:**
07.12.96 சனி பிற்பகல் 1.30 மணிக்கு BEP, BACPRO வகுப்பு மாணவிகளுக்கு Droriti Compta...

**பாடசாலை மாணவர்கட்கு:** 6e, 5e, 4e, 3e.... வகுப்பு மாணவர்கட்கு Maths, Chimie, Physique, Anglais வகுப்புக்கள் ஞாயிறு காலை 10.00 மணிக்கு

**கேக் அலங்காரக் கண்காட்சி** 24.11.96 அன்று சிறப்பாக நடைபெற்றது. மீண்டும் புதிய கேக் அலங்கார வகுப்பு 01.12.96 ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு

**சிறுவர்களுக்கு** இலவசமாக தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, கணிதம் சனி பிற்பகல் 1.00மணிக்கு கற்பிக்கப்படுகிறது.

**சங்கீதம்:** சங்கீதபூஷணம் வீணா சண்முகநாதன் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை)

**வயலின்:** சங்கீத பூஷணம் திருமதி கோமளா சுந்தையா அண்ணாமலைப் பல்கலைக்கழகம், நெல்லியடி அரசினர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ் மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை)

**நடனம்:** நாட்டிய கலைமணி திருமதி கௌசல்யா தர்மகுலசிங்கம் யாழ். பல்கலைக்கழகம் - நுண்கலைப் பிரிவு
07.12.96 சனி பிற்பகல் 1.00 மணி
08.12.96 ஞாயிறு பிற்பகல் 1.00 மணி, 3 மணி

**ஓர்கன்:** திரு. துஷ்யந்தன் (இளையநிலா இசைக்குழு) ஞாயிறு காலை 10.00 மணி

**மீண்டும் திங்கள் பிரெஞ்சு வகுப்பு**
உங்கள் வசதி கருதி பாரிஸ்-18 இல் 02.12.96 முதல் 4.30 மணிக்கு வகுப்பு நடைபெறும் இடம்
*La Maison Verte, 127, Rue Marcadet, 75018 Paris.*
*M°: Jules Joffrin (N°:12), Marcadet Poissoniers (N°:4)*
*Bus: 31, 60, 80, 85 தரிப்பிடம் Mairie 18*

**மேலதிக விபரங்களுக்கு: 01 42 57 23 56**
அல்லது சனி, ஞாயிறு காலை 10 மணியிலிருந்து நேரில்
41, rue Didot, 75014 Paris. M°: Pernety (Ligne N°: 13)

# ORIENT TEXTILIEN & SCHMUCK

KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836

* ஜேர்மனியில் தங்க நகைகளின் தரத்திற்கும், தேர்விற்கும் தனிச் சிறப்பு பெற்ற ஸ்தாபனம் சிங்கப்பூர் விலையில் S D 158, * ஆடைகளின் நிரந்தர மலிவு விலைகள்: பனாறிஸ் சாறி 79; மைசூர் சில்க் 85; பட்டபிளை சாறி 25; குப்தா சாறி DM25; பஞ்சாபி DM 26; பட்டுவேட்டி DM 35, * கன, தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள், * புத்தம் புதிய டிசைன்களில் அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய ஆபரண செட் ab DM 119, * உங்கள் பழைய பவுணிற்கு குறைந்த கூலியில் உடனடியாகவே புதிய நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்! உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

# படையினர் மீது புலிகள் தாக்குதல் மக்கள் மீது படையினர் வெறித்தனம்

## கிரானில் இருவர் பலி - பலர் காயம்

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் கிரானில் பாதுகாப்பு சோதனையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

இறந்த படைவீரரின் சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. காயமடைந்த படைவீரர்கள் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்களில் காயமடைந்த நால்வரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இராமச்சந்திரன் (40 வயது) ரங்கசாமி (45 வயது) ஆகியோர் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கிரான் சம்பவத்தின் எதிரொலியாக இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதுடன் ஆசிரியை ஒருவர் பலத்த காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கந்தையா பத்மநாதன் (38 வயது) மூன்று பிள்ளைகளின் தந்தையான கடை உரிமையாளர் ஒருவரும் முகைதீன் பாலா தாகிஸ் (வயது 22) என்ற இளைஞருமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவார்.

மேலும் கிரான் மகாவித்தியாலய ஆசிரியையான யோகேஸ்வரி என்பவர் பலத்த காயமுற்ற நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்தும் இப்பகுதியில் பதற்றம் நிலவுகின்றது. பலர் தாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

சடலங்கள் இரண்டும் வைத்தியசாலையில வைக்கப்பட்டுள்ளன.

# கோண்டாவிலில் ராஜினி கொலை சந்தேக நபர்களுக்கு அச்சுறுத்தலாம்

கோண்டாவிலைச் சேர்ந்த ராஜினி கற்பழித்து கொலைசெய்யப்பட்டது தொடர்பான வழக்கில் சந்தேக நபர்களை டிசம்பர் 9ம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் முனிதாச நாணயக்கார நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் சார்பில் ஜி.எம்.உயனேக்க, எச்.பி.சரத் பந்து, ஏ.பி. ஆரியரட்ன, எச். நிசாந்த, என். ஏ. அருணசாந்த, ஜி.சித்சிறி ஆகிய 6 பேரும் நீதவான் முன் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி நந்தகுமாரா லை, சம்பத் தென்னக்கோன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

சந்தேகநபர்களின் குடும்பத்தினருக்கு அச்சுறுத்தல் விடுவிக்கப்படுகிறது. இக்கொலைக்கு எதிராக சுலோக அட்டைப் போராட்டம் வெளியில் நடக்கிறது. எனவே சந்தகநபர்களின் குடும்பத்தினருக்கு மேலதிக பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று சந்நேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

போதிய பாதுகாப்பு வழங்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு என் முன்னிலையில் விசாரிக்கப்படுவதை விரும்பாதோர் வேறு நீதிமன்றங்களுக்கு விண்ணப்பிக்கலாம என்றும் அவர் கூறினார்.

கடந்த தவணையின் போது தெரிவிக்கப்பட்டது போல இந்த வழக்கை புலன் விசாரணை செய்த கோப்பாய் பொலீசார் யாரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இவர்களை இங்கு முதலில் ஆஜர் செய்த காங்கேசன்துறை பொலிசார் சார்பில் சப் இன்ஸ்பெக்டர் அபயகோன் ஆஜராகி மேலதிக அறிக்கையை தாக்கல் செய்தார். ராஜினியின் குடும்ப நலனைக் கவனிக்க யாரும் ஆஜராகி இருக்கவில்லை.

# வடபகுதியில் கைதானவர்கள் 44 பேர் விடுதலையாகலாம்?

வடபகுதியில் காரணம் கூறப்படாது கைதான நூற்றி ஐம்பதுக்கும் அதிகமான தமிழ் கைதிகளில் 44 பேர் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர். இந்த 44 பேரையும் விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. கைதானவர்களில் 8 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

வடபகுதியில் கைதாகி அனுராதபுரம் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்ட இக் கைதிகள் கொழும்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவசரகால விதிகளின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள இக் கைதிகளில் டிசம்பர் 11ம் திகதி 89 பேரும் 16ம் திகதி 25 பேரும் ஜனவரி 15ம்திகதி 63 பேரும் அனுராதபுரம் நீதிவான் முன் ஆஜர் செய்யப்படுவர். இவர்களில் 44 பேர் மட்டும் விடுதலை செய்யப்படுவார்கள். விடுதலையாக இருக்கும் கைதிகளில் பெரும்பாலானோர் தம்மை அனுராதபுரத்தில் பொறுப்பேற்க யாரும் இல்லை. விடுதலையானதும் உரிய ஆவணங்களும் கைவசம் இல்லாததால் மீண்டும் கைதாகும் ஆபத்து உள்ளது. எனவே எங்களை கைதுசெய்த இடத்திலேயே கொண்டுபோய் சேர்க்க வழி செய்ய வேண்டும் என்று சட்டத்தரணி அபயாதுரை விநாயகமூர்த்தியிடம் கேட்டுள்ளனர்.

# மாங்குளம் மாவீரர்கள் நினைவுகூரப்பட்டனர்

மாங்குளம் நகரத்தை எதிரிகளிடமிருந்து மீட்டு வரலாற்றுச் சமர் படைத்து வீரமரணமடைந்த மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாக 23.11.96 அன்று நினைவாஞ்சலி செலுத்தப்பட்டது.

ஏராளமான மாணவர்களும், ஆசிரியர்களும் பொது மக்களும் இணைந்து மாங்குளத்திலமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் தமது மரியாதை அஞ்சலியை மாவீரர்களுக்கு செலுத்தினர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மாவீரர்களுக்கு எமது வீர வணக்கம்

இறக்குமதியாளர்கள்
விநியோகஸ்தர்கள்

SAI TRADER
RASAMANICKAM IMPORT

**STORE**
Wibach str 15-17
8153 Rumlang (2h)
077.321604
077.395146

**HEAD OFFICE**
ch. Albert dehailer -1
1880 BEX (vd)
Tel: 0242633405
Fax:024 2633418

**OFFICE**
Haupt str.21
4528 zuchwil (so)
Tel+Fax: 032 685 30 45

# யுத்த காலநிலையில் கொழும்பில் படை குவிப்பு

**கொழும்பிலிருந்து தமிழரசன்**

தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர்தினத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களிலோ அல்லது கொழும்பு மாநகரிலோ பாரிய தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சத்தில் படையினர் யுத்தகால உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். கொழும்பு நகரில் ஒருகாலத்திலும் இல்லாதவாறு படையினர் கொண்டு வந்து குவிக்கப்பட்டுள்ளனர்.

சோதனைகளும், கைதுகளும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. கடந்த வாரத்தில் மாத்திரம் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் தலைநகரில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எங்கு பார்த்தாலும் படையினர் துப்பாக்கிகளுடன் காணப்படுகின்றனர். மாவீரர் தின இறுதி நாள் 27ம் திகதி



புதன்கிழமை ஆகும். அதற்கு முன்னர் புலிகள் எங்காவது தாக்குதல் நடத்திவிடுவார்கள் என அச்சம் கொண்டிருக்கின்றனர். ஆனால் புலிகளோ இவற்றைப்பற்றி கவனத்தில் எடுக்காமல் மிகவும் உணர்வு பூர்வமாக தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மாவீரர் தினத்தை நினைவு கூர்ந்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்திலே மாவீரர் தின விழா களைகட்டியிருக்கிறது. மாவீரர் தினத்தில் புலிகள் தாக்காமல் இருப்பதற்காக விமானப்படையினர் வகைதொகையின்றி குண்டுகளை பொழிந்து தள்ளிவருகின்றனர்.

ஆனால் இக் குண்டு வீச்சுக்கு புலிகளின் முகாங்கள் ஒன்று கூட இலக்காகவில்லை. மாறாக பொதுமக்களே பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் யாழ் குடாநாட்டில் ஊடுருவி இருப்பதாகக் கூறப்படும் புலிகளை தேடி அழிக்க 'றோயல் பிளேஸ்' என்ற இராணுவ நடவடிக்கை ஒன்றை படையினர் ஆரம்பித்துள்ளனர். கடந்த ஒரு வார காலமாக நடைபெறும் இந்த இராணுவ நடவடிக்கைகளில் புலிகள் சிக்கியதாகத் தெரியவில்லை. ஆனால் கொடிகாமத்தில் புலிகளின் கண்ணி வெடியில் சரசன் என்ற கவச வாகனம் சிக்கியது. இதில் பயணம் செய்த இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஏழு பேர் மரண காயத்திற்கு உள்ளாகினார்கள். கண்ணிவெடியில் சிக்கிய கவசவாகனம் உடனடியாகத் தீப்பிடித்ததாக கொழும்பில் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணாமல் போவோரின் பட்டியலும் நீண்டு கொண்டே போகின்றது. இம்மாதம் 18ம் திகதி எழுதுமட்டுவாள் கிராமத்தில் புதைகுழி ஒன்றிலிருந்து, அண்மையில் கைது செய்யப்பட்டு காணாமல் போயிருந்த அறுவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. படையினர் யாழ் குடா நாட்டினை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த பின்னர் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர்.

இராணுவத் தரப்பிடம் சென்று விசாரித்தால் தாங்கள் கைது செய்யவில்லை என்று கூறுகின்றனர். யாழ்ப்பாணத்தில் காணாமல் போவோரைப் பற்றி விசாரிக்க ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றினை அமைக்குமாறு தமிழர் கூட்டணியினர் சந்திரிகாவை கேட்டுள்ளனர். அவர் இதுபற்றி எதுவும் கூறாமல் பிரான்ஸ் சென்றுள்ளார். யாழ்ப்பாணத்தில் பயங்கரமாக மனித உரிமைகள் மீறப்படுவதாக தமிழ், சிங்கள அரசியல் வாதிகள் குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளார்கள்.

## சந்திரிகா பாரிஸ் வருகை

இதற்கு சிந்திரா ராஜேந்திரன் ஒரு சாட்சி என கொழும்பிலுள்ள மேற்குநாட்டு ராஜதந்திரிகள் பலர் தமது சிறீலங்கா நண்பர்களிடம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள்.

கைதடி இராணுவக் காவல் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு, பாலியல் பலாத்காரத்தின் பின் படு கொலை செய்யப்பட்ட கிருஷாந்தி குமாரசாமி உட்பட நால்வரின் கொலை தொடர்பான விசாரணை யாழ்பபாணத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 11 இராணுவத்தினரையும் டிசம்பர் 2ம் திகதி யாழ்ப்பாண நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.



கொழும்பில் நடந்தால பிரபல சட்டத்தரணிகள் தோன்றி நீதி கிடைக்க வழி ஏற்பட்டிருக்கும். ஆனால் யாழ்ப்பாணத்தில் விசாரணை நடைபெறுவதால் உரிய நீதி கிடைக்குமா என்பது சந்தேகமே என சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

டென்மார்க்கிலிருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில் தெகிவளையில் வைத்துக் கைது செய்யப்பட்ட சித்திரா ராஜேந்திரன் நீதிமன்றத்தினால் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டுள்ளார். புலிகள் இயக்கத்துடன் இவரை தொடர்பு படுத்தி சிறீலங்காப் பொலிசார் கைது செய்திருந்தனர். அப்பாவிகளைப் புலிகள் எனக் கூறி தமிழர்களைக் கைது செய்வது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது.

சிறீலங்கா கடற்படையினருக்கு மோராக் கப்பல்களையும், அதிவேகப் படகுகளையும் வாங்குவதற்காக கடற்படை அதிகாரிகள் குழு ஒன்று சீனா சென்றிருக்கிறது. இதைத்தவிர அதிவேகப் படகுகள் இரண்டை திர்மானிக்கும் பொறுப்பு கொழும்பு டொக்யாட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களுக்கு வேலை வழங்குவோர், புகலிடம் அளிப்போர் போன்றோருக்கு எதிராக இராணுவச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப் போவதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. இராணுவத்தில் குறிப்பிட்ட காலம் சேவை செய்தால் மாத்திரமே இளைஞர்களை வெளிநாட்டு வேலைகளுக்கு அனுப்ப அனுமதிப்பதென தொழில் அமைச்சு தீர்மானித்திருக்கிறது. கடந்த பத்துவருட காலத்தில் 32 ஆயிரம்பேர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் திஸ்ஸஜெயக்கொடி கடந்த வெள்ளிக்கிழமை 22.11.96 அன்று பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

## காணமல் போன படையினர் 32 ஆயிரம்

**இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களுக்கு வேலை வழங்குவோர், புகலிடம் அளிப்போர் போன்றோருக்கு எதிராக இராணுவச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப் போவதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. இராணுவத்தில் குறிப்பிட்ட காலம் சேவை செய்தால் மாத்திரமே இளைஞர்களை வெளிநாட்டு வேலைகளுக்கு அனுப்ப அனுமதிப்பதென தொழில் அமைச்சு தீர்மானித்திருக்கிறது.**


# சாந்தினி உணவகம்

அறுசுவை உணவுவகைகளை
உடனுக்குடன் தயாரித்து வழங்குபவர்கள்!!
திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கு
தேவையான சாப்பாட்டு வகைகளுக்கும்
தொடர்பு கொள்ளுங்கள்!

| | |
|---|---|
| * மரக்கறிச் சாப்பாடு (5 மரக்கறி, பப்படம், மிளகாய், பாயாசம்) (50 சாப்பாடுகளுக்கு மேல்) | 16F |
| * பிரியாணி (ஆடு, மாடு, கோழி) | 19F |
| * பிறைட் றைஸ் | 20F |

ஞானம் சேன்ரர் ரெலிகாட் எமது உணவகத்தில் பெற்றுக் கொள்பவர்களுக்கு எமது உணவகத்தின் தித்திக்கும் தேநீர் இலவசமாக வழங்கப்படும்.

**RESTAURANT SHANTHINI**
10, Rue Labat, 75018 PARIS.
M°: Marcadet Poissonniers
Tel: 01 42 58 71 19

# வன்னியில் தீவிரமாக பரவும் மலேரியாவால் 420 சிறார்கள் பாதிப்பு

வன்னிப் பெருநிலப் பரப்பில் பாண்டியன்குளம், துணுக்காய்ப் பகுதிகளில் மலேரியா நோயின் தீவிரம் மிகக் கடுமையாக உள்ளதாக நலன்புரிச் சங்கங்கள் அறிவித்துள்ளன. மழைக் காலம் ஆரம்பமாகி உள்ளதால், நுளம்புகளின் கட்டுப்பாடற்ற பெருக்கமே இந்நோய் அதிகம் பரவ காரணமாகும்.

தற்போதைய கணிப்பீட்டின்படி 420 சிறார்களும் மலேரியா தாக்கத்திற்கு இலக்காகி உள்ளனர். மிகக் குறைந்தளவு மருத்துவ வசதிகள் இருப்பதால் இந் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பூரண மருத்துவ சேவை வழங்க முடியாது உள்ளதென தெரிவிக்கப்படுகிறது. இந் நிலை தொடருமானால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதை தடுக்க முடியாது என தொண்டர் அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதே வேளை இராணுவக் கட்டுப்பாட்டு யாழ் குடாப் பகுதியிலும் நுளம்புப் பெருக்கம் என்றுமில்லாதாறு அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒழுங்கான சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப் படாமையும், குண்டு தாக்குதல்களால் ஏற்பட்ட பாரிய குழிகளில் மழைநீர் தேங்கிக் கிடப்பதும் நுளம்புப் பெருக்கத்திற்கு காரணமாக சொல்லப்படுகிறது.

# தென் தமிழீழ மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை

தென் தமிழீழ பிரதேசங்களான திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மீனவர்கள் கடற் தொழிலுக்குச் செல்வதற்கு சிறீலங்கா இராணுவம் தடை விதித்துள்ளது. கிழக்குக் கடற்பிரதேசங்களில் யாராவது மீன்பிடிக்கச் சென்றால் அவர்கள் கண்ட இடத்தில் சுடப்படுவார்கள் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இத் தடை உத்தரவின் காரணமாக ஆயிரக் கணக்கான குடும்பங்கள் பட்டினியின் விளிம்பிற்குத் தள்ளப்படலாமென அஞ்சப்படுகின்றது. தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக மீன் பிடிப்பவர்களின் நிலமையோ மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மட்டக்களப்பு வாவியில் மீன்பிடிக்க விதிக்கப்பட்ட தடை தொடர்ந்தும் அமுலில் உள்ளது. கடற்படையினர் இரவு பகலாக வாவியில் ரோந்தில் ஈடுபட்டுள்ளனர்.

# வன்னேரிக் குளத்தில் யானைகளின் அட்டகாசத்திற்கு மூவர் பலி

வன்னேரிக்குளம், ஜெயபுரம் பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இப் பகுதிகளில் கடும் மழை பொழிந்து வருவதால் காட்டிற்குள் வசித்த யானைகள் மக்கள் குடியிருப்புக்களுக்கு வந்து பெரும் சேதத்தினை விளைவித்து வருகின்றன.

அண்மையில் அம்பலப் பெருமாள் சந்தியில் துவிச்சக்கர வண்டிகளில் சென்ற இருவரை யானைகள் கூட்டமொன்று மிதித்துக் கொன்றுள்ளன. சில நாட்களின் முன்னரேதான் இப் பகுதியில் மோட்டார் சக்கர வண்டியில் பிரயாணம் செய்த குடும்பத்தார் ஒருவரை யானைகள் அடித்துப் பலி எடுத்துள்ளன.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் காடுகளை அண்மித்த பகுதிகளில் வசிப்பதனால், மனித நடமாட்டம் காரணமாக மிரட்சி அடைந்த காட்டு யானைகள் தற்போது குடிமனைகளுக்குள் புகுந்து பெரும் சேதத்தினை விளைவித்து வருகின்றன. மாலையானதும் இப் பகுதியில் நடமாடவே மக்கள் அஞ்சி வருகின்றனர்.

# முல்லைத்தீவில் மாவட்ட நீதிமன்றம்

18.11.1996 அன்று காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. மாவட்ட நீதிபதி செல்வி. V. அல்லிராணி இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்ததுடன் நீதிமன்றத்துக்கான பெயர்ப்பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தார். அண்மையில் ஓயாத அலைகள் நடவடிக்கையின் மூலம் முல்லைத்தீவு இராணுவ முகாமை முற்றாக அழித்தொழித்த விடுதலைப் புலிகள் முல்லைத்தீவுப் பகுதிகளை தற்போது பலவழிகளிலும் புனருத்தாரணம் செய்து வருகின்றார்கள். இதன் ஒரு அம்சமாகவே மேற்படி மாவட்ட நீதிமன்றமும் முல்லைத்தீவுப் பகுதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

# பிரசவத்திற்கும் வைத்தியசாலைக்கு அனுமதிக்காத படையினர்

வவுனியா தடுப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருக்கும் நிறைமாதக் கர்ப்பிணியொருவருக்கு பிரசவ வலி எடுத்த நேரத்திலும் இராணுவத்தினர் வைத்தியசாலைக்கு அனுமதிக்க மறுத்து காட்டுமிராண்டித்தனம் புரிந்துள்ளனர். இதனால் அவர் பெற்றெடுத்த சிசு பரிதாபகரமாக உயிரிழந்தது.

இக் கர்ப்பிணித் தாய்க்கு பிரசவ வலி எடுத்த வேளையில் தடுப்பு முகாமிலிருந்தவர்கள் இராணுவத்தினரிடம் அனுமதி கோரியுள்ள போதும், பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இராணுவத்தினர் அனுமதிக்க மறுத்துவிட்டனர். நேரம் செல்ல செல்ல பிரசவ வலி அதிகமாகி அத் தாய் வேதனையோடு அலறிய போதும் இராணுவம் மனமிரங்கவில்லை. வேறு வழி தெரியாத நிலையில் முகாமில் தங்கியிருந்தவர்கள் அங்கேயே அப் பெண்மணிக்கு பிரசவம் பார்த்துள்ளனர். பிரசவத்தில் வைத்திய உதவி இல்லாததால் பேறுச் சிக்கல் காரணமாக சிசு இறந்தே பிறந்துள்ளது.


மாவீரர்களுக்கு எமது வீர வணக்கம்

செல்வராஜா

ஜூவெல்லர்ஸ் & கார்மென்ஸ்

1 பவுண் -160 Sfr

(ஓடர் கொடுக்கும் நகைகள் உட்பட)

+

குறிப்பிட்ட நகைகளுக்கு கூலியும்



Rice Cooker
20% கழிவில்

Compact Disc 8 Sfr
ஒறிஜினல் வீடியோ கசெற்
8 Sfr இல் இருந்து

Selvarajah Jewellers & Garments

CHEMIN DES ROSIERS-3, 1004 LAUSANNE
TEL: 021 - 647 74 65 - 077 / 22 43 64

# வன்னியின் இன்றைய நிலை

## ஒரு களநிலை அறிக்கை

யுத்தத்தின் மூலம் சமாதானம் என்று சொல்லிக் கொண்ட சந்திரிகா அரசாங்கம் நடத்திய இன வெறித்தாக்குதல்களால் இலட்சக்கணக்கான மக்கள் பரம்பரை பரம்பரையாக காலா காலமாக வாழ்ந்த வந்த தங்கள் சொந்த இருப்பிடங்களையும் சொந்தக் கிராமங்களையும் விட்டு வெளியே காடுகளிலும் மரநிழல்களின் கீழும் தஞ்சமடைந்துள்ளனர்.

உலகநாடுகளில் தமிழ் மக்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகளை வழங்குவதாகவும் அவர்களுக்கு வேண்டிய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளப் போவதாகவும் கூறிக்கொண்டு ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தான் மேற்கொண்டு நடத்தப் போகிற இன அழிப்பு யுத்தத்திற்கு நிதி சேர்க்க பாரிஸ் வந்திருக்கும் இந்த நேரத்தில் வன்னிப் பகுதியில் வாழ மக்களின் உண்மை நிலை என்ன என்ற வெளியுலகுக்குத் தெரிவது மிகவும் அத்தியாவசியமானதாகும்.

வன்னிப் பிரதேசத்தில் தற போதைய யுத்தநிலமை காரணமாக மையம் கொண்டுள்ள குடி பரம்பல் நிலைமைகள் வருமாறு.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் (பெருநிலப்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம்) மற்றும் வவுனியா மாவட்டங்கள் இவற்றிலடங்குகின்றன.

இங்கு குறிப்பிட்டுள்ள தரவுகள் அப் பகுதிகளுக்குப் பொறுப்பான அரசாங்க அதிபர்களினாலேயே தெரிவிக்கப்பட்டுள்ளன. இவை சரிவரக் கணிக்க முடியாத நிலை தொடர்ந்து நிலவுகிறது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் இடம் பெயர்வதன் காரணமாகவும், அவர்களுக்குச் சரிவர வதிவிடம் அமைத்துக் கொள்ள முடியாத

| இடம் | இடம் பெயராதோர் | உள்ளூரில் இடம் பெயர்ந்தோர் | சூ.கதிர் 1 இல் இ.பெயர்ந். | சூ.கதிரின் பின்பு இ.பெயர்ந். | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|
| **புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி** | | | | | |
| கிளிநொச்சி | 40, 803 | 112, 673 | 82,808 | 51,519 | 287,803 |
| முல்லைத்தீவு | 91,254 | 12,941 | 88,125 | 96,821 | 289,141 |
| வவுனியா | 31,637 | 12,035 | 25,764 | 17,383 | 86,819 |
| மன்னார் | 13,408 | 33,232 | 11,189 | 26,604 | 84,433 |
| **மொத்தம்** | **177,102** | **170,881** | **207,886** | **192,327** | **748,156** |
| **இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதி** | | | | | |
| மன்னார் | 25,279 | 4,071 | 1,047 | 310 | 30,707 |
| வவுனியா | 64,604 | 12,905 | 5,095 | 1,050 | 83,654 |
| **மொத்தம்** | **89,883** | **16,976** | **6,142** | **1,360** | **114,361** |
| **முழுத் தொகை** | **2,66,985** | **187,857** | **214,028** | **193,687** | **8,62 557** |

போர்ச் சூழலினாலும் இத் தரவுகளைச் சரிவரக் கணிக்க முடியாதுள்ளது என்று ஸ்ரீ லங்கா அரச கவிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 66,241 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 88,950 குடும்பங்களும், மன்னார் மாவட்டத்தில் 26,914 குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 48,831 குடும்பங்களுமாக மொத்தம் 230,936 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் கடந்த பங்குனி மாதத்தில் இருந்து வழங்கப்படவில்லை எனவும் அக் கணிப்பீடுகள் மேலும் தெரிவிக்கின்றன.